Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 03 ஞாயிற்றுக்கிழமை (17-06-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:203

# அரசுக்கு முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு

# தொடர்ந்து கிடைப்பது நிச்சயமற்றது!



அமைச்சர் ரவூப் ஹக்கீம்

## அமைச்சர் ஹக்கீம் அறிவிப்பு

கொழும்பு,ஜூன்17

**பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி வழங்கிவரும் ஆதரவு தொடர்ந்து எந்தவிதக் கேள்விக்கும் இடமின்றி நிச்சயமாகக் கிடைக்கும் என்று கூறிவிடமுடியாது.**

**- இவ்வாறு அறிவித்திருக்கின்றார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம்.**

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடனும் அதன் தலைவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் அதன் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கும் கருத்து வேறுபாடுகள் முற்றியிருப்பதாகச் செய்திகள் வெளியாகிக்கொண்டிருந்த பின்னணியில் தமது தரப்பு நிலைப்பாட்டை விளக்குவதற்காக அமைச்சர் ஹக்கீம் நேற்று கொழும்பில் செய்தியாளர் மாநாடு ஒன்றைக் கூட்டினார். அந்த மாநாட்டில் ஹக்கீம் கூறியதாவது:-

மிக மோசமான தேர்தல் ஒன்றின் மூலமே பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சிப் பீடம் ஏறியது. ஜனாதிபதியை அந்தப் பதவியில் அமர்த்துவதிலும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, தனது அரசை

(14ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் தடம் புரண்டு 22 பேர் காயம்

மட்டக்களப்பு,ஜூன்17

கொழும்பில் இருந்து மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி நோக்கி வந்து கொண்டிருந்த போக்குவரத்துச் சபை பஸ் ஒன்று ஹபரணைக் காட்டுப் பகுதியில் விபத்துக்குள்ளானதில் 22 மட்டக்களப்பு வாசிகள் படுகாயமடைந்தனர்.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் 7 பெண்கள் உட்பட22 பேர் காயமடைந்தனர். இவர்களில் 6 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-6)

## அமைச்சருக்கு எதிரான பிரேரணையை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரிக்கும்!

கொழும்பு,ஜூன்17

கிராமியக் கைத்தொழில் அமைச்சர் மஹிபால ஹேரத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவரும் நம்பிக்கை இல்லாப் பிரேரணைக்கு தற்போது அரசில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு வழங்கும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலை வெளியிட்டார்.

### ஹக்கீம் அறிவிப்பு

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

இந்த நம்பிக்கை இல்லாப் பிரேரணையை ஆதரிப்பது என்று எமது கட்சி ஏற்கனவே அறிவித்து விட்டது.

பிரேரணை சபாநாயகரால் ஏற்கப்பட்டு அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டால், அது குறித்து எமது கட்சியின் உயர்மட்டக் குழு கூடி ஆராயும். இந்தப் பிரேரணையை ஆதரிப்பது என நாம் அப்போது இறுதி முடிவு எடுப்போம்.

நேற்று முன்தினம் ஜனாதிபதியைச் சந்தித்த போது, எமது கட்சிக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்படாமல் இழுத்தடிக்கப்படுவது குறித்தே பேசினேன். அப்போது இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்துப் பேச வேண்டிய தேவையோ, வாய்ப்போ ஏற்படவில்லை - என்றார். (உ)

## எம்.ஐ.24 ரக ஹெலி மோதித் தரையிறக்கம்!

### ஹிங்குராங்கொடவில் சம்பவம்

கொழும்பு,ஜூன்17

ஹிங்குராங்கொட பகுதியில் நேற்று முன்தினம் காலையில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த எம்.ஐ.24 ரக ஹெலிக்கொப்டர் ஒன்று, இயந்திரக் கோளாறு காரணமாக, ஹிங்குராங்கொட விமானத் தளத்துக்கு அருகில் உள்ள வயலில் மோதித் தரையிறங்கியுள்ளது.

இயந்திரம் செயலிழந்ததை அடுத்து ஹெலி விமானி வேறு வழியின்றி வயல் தரையில் அதை மோதி இறக்கியதாகக் கூறப்படுகின்றது.

ஹெலியில் இருந்த விமானிகளுக்குப் பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை. ஹெலி மட்டும் சிறிய சேதங்களுக்கு உள்ளாகியது. (உ)

## பொ.ஐ.மு. அரசுக்கு இந்த வாரம் மிக நெருக்கடியான காலகட்டம்

கொழும்பு,ஜூன்17

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு இந்த வாரம் மிகவும் நெருக்கடியான காலமாக இருக்கும் என்று கொழும்பில் அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த நெருக்கடிகளைச் சமாளிப்பது குறித்தே அரசு தற்போது தீவிரம் காட்டி வருவதால் சமாதான முயற்சிகள் மேலும் பின்னடைவைச் சந்தித்துள்ளன என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணையை ஐ.தே.கட்சி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளது.

இதனை முறியடிக்கும் முயற்சியில் அரசாங்கமும் -

பிரேரணைக்கு ஆதரவு திரட்டும் முயற்சியில் ஐ.தே.கட்சியும் -

தீவிரமாக இறங்கியுள்ளன.

இந்த நிலையில் முஸ்லிம் காங்கிரஸும் அரசுடன் முரண்படும் நிலை தோன்றி உள்ளது. இதனால் நம்பிக்கை இல்லாப் பிரேரணையை எதிர்ப்பதற்கு தமிழ்க் கட்சிகளின் ஆதரவை நாடவேண்டிய நிலையில் உள்ளது அரசாங்கம்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி அவர்களுடனான சமாதானப் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்க வேண்டும் என்றும் -

இல்லையேல் ஐ.தே.கட்சியின் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு அளிக்கப்போவதாகவும் -

ஈ.பி.டி.பி. தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகள் ஏற்கனவே தெரிவித்துள்ளன.

எனவே புலிகள் மீதான தடையை நீக்கினாலேயே தமிழ்க் கட்சிகளின் ஆதரவைக் கோரமுடியும் என்ற தர்மசங்கடமான நிலை அரசுக்கு. ஆனால் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு அரசின் மூத்த தலைவர்கள் பலரிடையே பலத்த எதிர்ப்பு உள்ளது. இதனால் எந்த முடிவை எடுப்பது என்று தெரியாத இருதலைக்கொள்ளி எறும்பாக ஜனாதிபதி தவிக்கின்றார்.

- என்றும் அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை -

அரசில் இருந்து முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை வெளிவரச்செய்து அரசு மீதான நம்பிக்கை இல்லாப் பிரேரணைக்கு அதன் ஆதரவைப் பெறும் முயற்சியில் ஐ.தே.கட்சியும் தீவிரம் காட்டி வருகின்றது.

அரசைக் கவிழ்க்கும் முயற்சிக்கு தமிழ்க் கட்சிகளின் ஆதரவைப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாநகர சபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர் நேற்று முதல் வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூன்17

ஆறு கோரிக்கைகளை முன்வைத்து யாழ்.மாநகர சபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் நேற்று முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

நேற்றுக் காலை மாநகர சபைக்கு வந்த சுமார் 150 சுத்திகரிப்புத் தொழிலாளர்களும் தமது கடமைகளுக்குச் செல்லவில்லை. பகல் 11.30 மணி வரை மாநகர சபை வளாகத்தில் நின்ற அவர்கள் பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

யாழ்.மாநகர சபை பிரதி மேயர் செ. கந்தையன் மற்றும் அதிகாரிகள் ஊழியர்களின் கோரிக்கைகள் குறித்து அவர்களுடன் பேச்சு நடத்தினர். எனினும் சுமுகமான தீர்வு எதுவும் எட்டப்படவில்லை.

தொழிலாளர்களின் இந்த வேலை நிறுத்தம் காரணமாக யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகள் அனைத்திலும் சுத்திகரிப்புப் பணிகள் தேக்கமடைந்துள்ளன. (ம-6-10)

## கப்பல் பயணச் சீட்டு வழங்கல் பற்றிய அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்17

கடந்த செவ்வாய்க்கிழமை 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் மூலம் திருகோணமலைக்குச் செல்வதற்காகப் புறப்பட்டு - தெல்லிப்பழை வரைக்கும் சென்று திரும்பிய - பயணிகளுக்கு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை புறப்படும் கப்பலில் முன்னுரிமை வழங்கப்படும் என்று வடக்கு புனரமைப்பு, புனர்வாழ்வு அதிகார சபை (றான்) அறிவித்துள்ளது.

இவர்களில், நாளை மறுதினம் புறப்படும் கப்பலில் பயணம் செய்ய விரும்பாதவர்களின் ரிக்கெற் கட்டணங்கள் அவர்களுக்கு மீளளிக்கப்படும் என்றும் - கடந்த செவ்வாயன்று கப்பலுக்குச் சென்று திரும்பிய அனைவரையும் நாளை காலை 9 மணிக்கு அலுவலகத்துக்கு வருமாறும் -

அதிகார சபை கேட்டுள்ளது.

இதேவேளை -

கடந்த 14 ஆம் திகதி வியாழக்கிழமை பதிவினை மேற்கொண்டவர்களுக்கு 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்ல உள்ள கப்பலில் பயணம் செய்வதற்கான ரிக்கெற் வழங்கப்படும் என்றும் -

19 ஆம் திகதி பதிவினை மேற்கொண்டவர்களுக்கு 20ஆம் திகதியும், 21ஆம் திகதி பதிவினை மேற்கொண்டவர்களுக்கு 25 ஆம் திகதியும் ரிக்கெற்றுக்கள் வழங்கப்படும் என்றும்-'றான்' அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-10)

## வெலிகந்தை மோதலில் இரு சிப்பாய்கள் மரணம்

கொழும்பு,ஜூன்17

வெலிகந்தையில் இருந்து வடகிழக்கே 9 கிலோமீற்றர் தொலைவில் உள்ள குருளுபெத்த என்ற கிராமத்தில் நேற்றுக்காலை 6 மணியளவில் பற்றைகளை வெட்டி துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த 'டோஸர்' வாகனங்களுக்குப் பாதுகாப்பு வழங்கிய படையினர் மீது விடுதலைப் புலிகளின் அணி ஒன்று தாக்குதல் நடத்தியிருக்கின்றது.

மோட்டார்கள், சிறு ரக ஆயுதங்கள் என்பவை கொண்டு புலிகள் நடத்திய இந்தத் தாக்குதலில் இரு சிப்பாய்கள் பலியாகினர். மற்றும் இரு சிப்பாய்கள் காயமடைந்தனர்.

இந்த மோதலின் போது ஏவப்பட்ட ஷெல் ஒன்று கிராமத்தில் வீழ்ந்து வெடித்ததில் 46 வயது மாது ஒருவர் காயமடைந்தார். அவர் வெலிகந்தை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தாக்குதல் நடத்திய புலிகளைப் படையினர் பதில் தாக்குதல் நடத்தி விரட்டியடித்ததாக விசேட ஊடகத் தகவல் மையம் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## பிரதம நீதியரசர் விவகாரம்:

# மூன்று நீதியரசர்களுக்கு எதிராக குற்ற விசாரணைப் பிரேரணை

### நாடாளுமன்றில் சமர்ப்பிக்க ஐ.தே.க. தயாராகிறது

கொழும்பு,ஜூன்17

பிரதம நீதியரசருக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள குற்ற விசாரணைப் பிரேரணை குறித்து விசாரணைகளை மேற்கொள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நியமிப்பதற்கு இடைக்காலத் தடை விதித்த நீதியரசர்கள் மூவருக்கு எதிராக குற்ற விசாரணைப் பிரேரணையைத் தாக்கல் செய்ய ஐ.தே.கட்சி தயாராகிவருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் இடம்பெற்ற ஐ.தே. கட்சியின் அரசியல் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் இவ்விடயம் குறித்துத் தீவிரமாக ஆராயப்பட்டது. இந்த விடயத்தில் சட்டம் தொடர்பான ஆலோசனைகளைக் கட்சியின் அரசியல் ஆலோசனைக் குழுவிடம் பெறுவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என கட்சியின் பேச்சாளர் கருணசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசர் சரத் என்.டி சில்வாவுக்கு எதிராக ஐ.தே.கட்சி மற்றும் ஜே.வி.பியைச் சேர்ந்த 77 நாடாளுமன்ற உறுப்பினர்களால் கைச்சாத்திடப்பட்ட குற்ற விசாரணைப் பிரேரணை கடந்தவாரம் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது. இது தொடர்பாக விசாரிப்பதற்கு நாடாளுமன்றம் தெரிவுக்குழு ஒன்றை நியமித்தால் அதனைத் தடை செய்யும் விதத்தில் இடைக்காலத் தடை உத்தரவை நீதியரசர்களான பிரியந்த பெரேரா, கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க மற்றும் எச்.எஸ்.யாப்பா ஆகியோர் பிறப்பித்தனர்.

இவ்வாறான கட்டளையைப் பிறப்பிக்க உயர் நீதிமன்றத்துக்கு உரிமையில்லை என்பதே ஐ.தே. கட்சியைச் சேர்ந்த பல முக்கியஸ்தர்களின் கருத்தாகும்.

இதனையடுத்தே நாடாளுமன்றத்தின் இறைமையை பறிக்கும் விதத்தில் இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்த மூன்று நீதியரசர்களுக்கும் எதிராக குற்றவிசாரணைப் பிரேரணை கொண்டு வருவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்துக்கு கட்டளையிடுவதற்கு உரிமையோ அல்லது அதிகாரமோ நீதிமன்றத்துக்கு இல்லை எனவும் நாடாளுமன்றமே நீதிமன்றத்துக்கு அதிகாரங்களை வழங்குகிறது எனவும் தெரிவித்த ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் கருணசேன கொடித்துவக்கு நீதியரசர்கள் மூவரும் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அப்பால் சென்று நடவடிக்கையை மேற்கொள்வது நாட்டில் பயங்கரமான ஒரு நிலையைத் தோற்றுவிக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

நீதித்துறையில் அரசியல் தலையீடுகள் உள்ளன என நிலவிய சந்தேகம் இந்த இடைக்காலத் தடை உத்தரவின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவும் -

இந்தத் தடையுத்தரவானது நாடாளுமன்றத்துக்கும் நீதித்துறைக்கும் இடையே மோதலை உருவாக்கும் எனவும் - தெரிவிக்கப்படுகிறது.

எத்தனை தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டாலும் அரசைக் கவிழ்க்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் எனவும் ஐ.தே.கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ம)

## கறுப்பு உடை அணிந்து வந்து

# சோதனை நடத்தும் பாணியில் தாக்குதல் நடத்திய ஐவர் கைது

தென்மராட்சி,ஜூன்17

கரணவாய் மூத்த விநாயகர் கோவிலடிப் பகுதியில் கடந்த வாரம் ஊரடங்கு வேளையில் கறுப்பு உடை அணிந்து சென்று வீட்டில் உள்ளவர்களை சோதனை செய்வது போல் வெளியே அழைத்துத் தாக்கிய சம்பவம் தொடர்பாக ஐந்து பேர் நெல்லியடிப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஐவரும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது அவர்களை தலா 2 ஆயிரத்து ஐநூறு ரூபா பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தின் போது ஒரு பெண் உட்பட நால்வர் படுகாயமடைந்து மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவர்களுள் ஒருவர் யாழ். பல்கலைக்கழகப் போதனாசிரியர் என்றும், மற்றொருவர் பல்கலைக்கழக மாணவர் என்றும் தெரிய வந்தது.

(உ-117)

# எமது கல்வியைச் சீர்குலைக்கும் போராட்டங்களில் ஈடுபடாதீர்கள்

### ஆசிரியர் சங்கத்திடம் டக்ளஸ் கோரிக்கை

கொழும்பு,ஜூன்17

"கல்வியைச் சீரழிக்கும் போராட்டங்களை நடத்தவேண்டாம்"

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பிரதிநிதிகளிடம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

நேற்று முன்தினம் தம்மைச் சந்தித்த தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளிடமே அமைச்சர் இந்தக் கோரிக்கையை நேரடியாக விடுத்தார்.

வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் அமைச்சருடன் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.தவராசா, கே.வி.குகேந்திரன், எம்.குணசேகரம் ஆகியோரும் பங்குபற்றினர். சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தலைமையில் சங்கப் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர்.

யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி என்.தணிகாசலம்பிள்ளையும் உடன் இருந்தார்.

"எமது கல்வியைச் சீரழிக்கும் வகையில் ஆசிரியர்கள் தங்களது நலன்களைப் பேணுவதற்காகப் போராட்டங்களை நடத்தக்கூடாது. யுத்தத்தினால் எமது கல்விச் செயற்பாடுகள் மோசமாகப் பின்னடைந்துள்ளன. எனவே ஆசிரியர்கள் தமது கோரிக்கைகளை நியாயபூர்வமான முறையில் பெற்றுக்கொள்ள வேண்டும்" என்று அமைச்சர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

★ மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் குவிந்திருக்கும் அதிகாரங்களை கல்வி வலயங்களுக்கு பரவலாக்கல்.

★ கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய இடங்களுக்கு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்களை நியமனம் செய்தல்.

★ கல்வியமைச்சில் தமிழ் விவகாரத்தை அமுல்படுத்தல்.

★ ஆசிரியர்களுக்கு இடர்காலக் கொடுப்பனவுகள் வழங்கல்.

★ யாழ்ப்பாணம், அம்பாறை மாவட்டங்களில் பயன்படுத்திய அதே அடிப்படையில் தொண்டர் ஆசிரியர் நியமனம் வழங்கல்.

என்பனவே சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் ஆகும்.

ஜனாதிபதி உயர் கல்வி அமைச்சர் ஆகியோருடன் தான் விரைவில் சந்திப்பு ஒன்றை ஏற்படுத்தவிருப்பதாகவும் -

அப்போது இந்தக் கோரிக்கைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுப்பதாகவும் -

அமைச்சர் உறுதி கூறினார்.

(ம-3)

# 60 வயதின் பின் அரச ஊழியருக்கு இனிமேல் சேவை நீடிப்பு இல்லை

அரச ஊழியர்களின் சேவையை 60 வயதுக்கு மேல் நீடிப்பது இல்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

60 வயதுக்கு மேற்பட்டவர்கள் சேவையில் இருப்பின் அவர்களுக்கு சம்பளங்களுடன் ஓய்வூதியங்களையும் ஏனைய சலுகைகளையும் வழங்கப்பட வேண்டியிருக்கிறது. இதனால் அரசு பெரும் தொகை பணத்தை இழந்து வருகிறது என்று பொது நிர்வாக அமைச்சர் ரிச்சட் பத்திரன அமைச்சரவையில் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார்.

60 வயதுக்கு மேலும் ஒருவர் சேவையிலிருப்பது வேலையின்மைப் பிரச்சினையை நீக்குவதற்கு தடையாக இருப்பதாகவும், கீழ் நிலை அலுவலர்களின் பதவியுயர்வுகள் தேக்கமடைவதாகவும் அவர் அந்தப் பிரேரணையில் சுட்டிக்காட்டியிருந்தார். இதனை அடுத்து அமைச்சரவை மேற்கண்ட முடிவை எடுத்துள்ளது.

### சேவைக்கால கருத்தரங்கு

வலிகாமம்,தெற்கு,ஜூன்17

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் கற்பிக்கும் வர்த்தக ஆசிரியர்களுக்கான சேவைக்கால கருத்தரங்கு இம்மாதம் 23 ஆம் திகதி சனிக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் 11 ஆம் தரத்திற்கான 'வணிகக் கல்வியும் கணக்கீடும்', 'தகவல் தொழில் நுட்பம்' ஆகியவை தொடர்பான கருத்தரங்காக இது அமையும்.

(ம-152)

### பாடசாலைக் காணிகளை அளவீடு செய்யப் பணிப்பு

வலிகாமம் தெற்கு,ஜூன்17

சகல அரசாங்க பாடசாலைகளினதும், சொந்தக் காணிகளை பிரதேச செயலர் ஊடாக அளவீடு செய்யுமாறும், எல்லைகளைக் குறிக்குமாறும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு விவரத்தை உடன் அனுப்பி வைக்குமாறும் - கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு செயலாளர் அறிவித்துள்ளார்.

(ம - 152)


## தொழிற் பயிற்சிகள்

★ பிளாஸ்ரிக் தொழில்நுட்பம்.
★ ஸ்கிறின் பிரின்டிங்.
★ கொமர்சல் ஆட்.
★ இறப்பர் ஸ்டாம் தயாரிப்பு.
★ எங்கிறேவிங் பதிப்புமுறை.
★ வொயில் கீற் பதிப்புமுறை.
★ சினிமா சிலைட்.
★ மோல்ட்.
★ ஆபரணப்பெட்டி தயாரிப்பு.

வீட்டிலிருந்தே குறைந்த முதலீட்டில் கூடிய வருவாயை பெறும் தொழிற்பயிற்சியை நீங்களும் கற்கலாம்.

விவரங்களுக்கு:

S.S. ஜெயசோதிரன் ஆட்ஸ்

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(வின்சர் தியேட்டர் முன்பாக)

(89154)


# ஜயலத் ஜயவர்த்தன மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை

### கொண்டு வர அரசுத் தரப்பு முயற்சி

கொழும்பு,ஜூன்17

விடுதலைப் புலிகளுக்கு உளவு பார்த்தார் என்ற குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டுள்ள ஐ.தே.கட்சி எம்.பி. டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவது குறித்து அரச தரப்பு ஆலோசித்து வருகிறது.

'குளோபல் ஸ்கை' என்ற அமெரிக்க உளவு சஞ்சிகை தனது இந்த ஆண்டுப் பதிப்பின் 'உளவாளிகள் பற்றிய இரகசியங்கள்' என்னும் கட்டுரையில் பொட்டு அம்மான், தமிழ்ச்செல்வன், அன்ரன் பாலசிங்கம், லோரன்ஸ் திலகர், வசந்தராஜா ஆகியோரின் பெயர்களுடன் டாக்டர் ஜயலத்தின் பெயரையும் உளவாளிகள் என்று பிரசுரித்துள்ளது என்று பிரதியமைச்சர்கள் சங்கத்தின் செயலாளர் சி.பி.ஏக்கநாயக்க தெரிவித்தார்.

ஒருவர் எம்பியாக சத்தியப்பிரமாணம் செய்யும் போது ஸ்ரீலங்காவில் ஒரு தனியரசு உருவாவதற்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ எவ்வித உதவியும் செய்ய மாட்டேன் என்று உறுதியளிக்கின்றார். அதனை மீறும் ஒருவரின் குடியியல் உரிமைகள் ஏழு ஆண்டுகளுக்கு தடுத்து வைக்கப்படலாம். நாடாளுமன்றப் பதவியிலிருந்து நீக்கப்படலாம், அசையும் அசையாச் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படலாம். டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன இந்த உறுதிமொழியை மீறியிருக்கின்றார் என்றும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

ஐ.தே.கட்சி எம்.பிக்களான பி.சந்திரசேகரன், ரி.மகேஸ்வரன் ஆகியோர் விடுதலைப் புலிகளின் அனுதாபிகளாவர். இவர்கள் விடுதலைப் புலிகளை பிரிட்டன் தடை செய்த போது எதிர்ப்புத் தெரிவித்தவர்கள். இவர்கள் நாடாளுமன்றம் வழங்கும் காப்புரிமைகளைப் பயன்படுத்தி புலிகளுக்கு ஆதரவாக செயற்படுகின்றனர். இவர்களுக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட வேண்டும் என்று பிரதியமைச்சர் ஏக்கநாயக்க மேலும் தெரிவித்தார்.

(ம)

### சேதமடைந்த நிலையில் பஸ் தரிப்பு நிலையம்

வலிகாமம் தெற்கு,ஜூன்17

மருதனார்மடம் - உடுவில் வீதியில் வலி.தெற்கு பிரதேச சபையின் உடுவில் உப அலுவலகத்தின் முன்பாக உள்ள பஸ் தரிப்பு நிலையம் நீண்டகாலமாக சீரழிந்து கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகின்றது.

பல இடத்திலிருந்தும் வந்து போகும் பஸ் பிரயாணிகள் பயன்படுத்தும் இந்த பஸ் தரிப்பு நிலையம் அண்மைக்கால சூழ்நிலைகளால் கூரைகள் இன்றியும், கட்டடம் இடிந்த நிலையிலும் காணப்படுகின்றது.

வெயில் காலங்களிலும், மழை காலங்களிலும் பஸ் பிரயாணிகள் தரிப்பு நிலையத்தின் அருகே உள்ள கடை ஓரங்களிலும், மர நிழல்களின் கீழும் தங்கி நிற்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

பெண்கள், வயோதிபர்கள், கர்ப்பிணிப் பெண்கள், குழந்தையுடன் வரும் தாய்மார்கள் போன்றோர் இதனால் பெரும் அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர். ( ம- 152)


## மரண அறிவித்தல்கள்

### சுந்தரம்பிள்ளை சிவகுருநாதன்

(இளைப்பாறிய உணவுக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்,ஆனைவிழுந்தான்)

சுண்டிக்குழியைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வதிவிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை சிவகுருநாதன் 14-06-2001 வியாழக்கிழமை பலாங் கொடையில் காலமானார்.

இவர் அன்னலக்சுமியின் அன்புக் கணவரும், ரஜனி, நளினி (ஜேர்மனி), நவீனன் (ஜேர்மனி), யமுனா(U.K), ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தேவரஞ்சன், (ஜெகன் பார்மஸி), சிறிஸ்கந்தராசா (ஜேர்மனி), பவளராணி (ஜேர்மனி), ஜெயச்சந்திரன் (U.K), ஆகியோரின் அன்பு மாமனாரும் ஹரிசஞ்சீவன், சர்மிலன், டெவியந்தி, நிறோஜன், பிறித்தகுமார், லக்ஸ்மிலா, விதுஷன் ஆகியோரின் பேரனும், இரத்தினம்மா (U.K), காலஞ்சென்ற ராசமணி, நவரத்தினம் (புகையிரத நிலைய அதிபர்), பத்மநாதன் (ஆஸ்திரேலியா), கதிரவேலு, கமலநாதன் (ஜேர்மனி), சத்தியநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அருளானந்தம் லேன், சங்குவேலி வடக்கு, மானிப்பாய். (89153)

தகவல்: சா.தேவரட்ணம் (மருமகன்)

### திருமதி திரேசம்மா பாக்கியநாதர்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் இல.36, 5ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திரேசம்மா பாக்கியநாதர் 12-06-2001 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் யோசேப் பாக்கியநாதரின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பேனாட் கதிர்காமர், சுப்பிரமணியம்(வர்த்தகர் வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிறிஸ்டி யோசேப்(முன்னாள் துறைமுக அதிகார சபை உத்தியோகத்தரும், அகில இலங்கைச் சமாதான நீதிவானும்) காலஞ்சென்ற அன்ரனி (உதவிக் கல்விப் பணிப்பாளர்) இம்மானுவேல் (அபுதாபி), காலஞ்சென்ற தோமஸ்(பொறியியலாளர்) காலஞ்சென்ற இரஞ்சினி, ஜேம்ஸ் (கனடா), மரிய ஜசிந்தா(டெல்கி), மரிஸ்ரெலா, மரியமலர் ஆகியோரின் தாயாரும் ஸ்ரெலா, புஸ்பம்(ஓய்வு பெற்ற அதிபர்) பெனடிற் பரமேஸ்வரி(அதிபர் நெடுந்தீவு) சரஸ்வதி (கனடா), மரியதாஸ் மெதேடியஸ், மரியநாயகம், தியாகராசா ஆகியோரின் அன்பு மாமியாரும், மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகையினதும், அருள் அன்னை புஸ்பம் (திருக்குடும்பக் கன்னியர் சபை - இந்தியா) ஆகியோரின் சிறிய தாயாரும், அருட்சகோதரி டோமினிக், அருட்சகோதரி பிலோமினா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (18-06-2001) திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து புனித அடைக்கலமாதா ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலி நிறைவேற்றப்பட்டபின் கொழும்புத்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(89156)

தகவல்: யோ.பாக்கியநாதர் (கணவர்)

## இந்தியத் தலைநகரில் உள்ள

# அமெரிக்கத் தூதரகம் மீதான தாக்குதல் திட்டம் முறியடிப்பு!

## பின்லேடனின் சகா ஒருவர் கைது

புதுடில்லி,ஜூன்17

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தைத் தகர்க்கும் திட்டமொன்றைத் தாம் முறியடித்ததாக இந்தியப் பொலீஸார் அறிவித்துள்ளனர்.

இஸ்லாமியத் தீவிரவாதி ஒஸாமா பின்லேடனின் சகா ஒருவரை நேற்று முன்தினம் கைது செய்ததன் மூலம், அமெரிககத் தூதரகத்தின் மீதான தாக்குதல் முறியடிக்கப்பட்டதாக, புதுடில்லிப் பொலீஸ் தெரிவித்தது.

ஹவாஸ் என்ற அந்தச் சந்தேக நபர் அமெரிக்கத் தூதரகத்தின் மீது தாக்குதல் நடத்தும் நோக்கத்தோடு இந்தியாவுக்கு வந்திருந்தது விசாரணைகளில் தெரியவந்திருந்ததாகவும் -

இந்தச் சதித் தாக்குதல் திட்டத்தின் பின்னணியில் பின்லேடன் இருப்பதாகச் சந்தேகம் எழுந்துள்ளதாகவும் -

புதுடில்லி பொலீஸார் மேலும் தெரிவித்தனர்.

8 வருடங்களுக்கு முன்னரும் ஹவாஸ் இந்தியா வந்திருந்ததாக அவர்கள் கூறினர்.

பாகிஸ்தானிய இராணுவ ஆட்சியாளர் பர்வேஷ் முஷாரப் அடுத்த மாதம், பேச்சு நடத்துவதற்காக, இந்தியா வரவுள்ள நிலையில், வன்முறை நடவடிக்கைகள் குறித்த அச்சங்கள் இந்தியாவில் அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## இந்தியாவுடனான பேச்சு மூலம் கசப்பான வரலாறு மாறும்

### ஜெனரல் முஷாரப் உறுதி

இஸ்லாமாபாத், ஜூன்17



இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடனான பேச்சு மூலமாக கடந்த காலத்தின் கசப்பான வரலாற்றை மாற்றியமைக்கப் போவதாக பாகிஸ்தானிய இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப் உறுதி கூறியுள்ளார்.

அடுத்த மாதம் இந்தியாவில் பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்துப் பேச இருப்பது குறித்து செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு முஷாரப் கூறினார்.

இந்தியாவுடனான புதியதொரு தொடக்கத்தையும் வரலாற்றையும் வடிவமைக்கத் தான் முயற்சி எடுக்கப் போவதாகவும்-

திறந்த மனத்துடன் தான் பேச்சில் கலந்து கொள்ளப்போவதாகவும்-

காஷ்மீர்ப் பிரச்சினைக்கு இப்போது நடைபெற உள்ள பேச்சினால் தீர்வு இல்லையெனில், அது வருத்தத்துக்குரிய விஷயமாகிவிடும் என்றும்-

ஜெனரல் முஷாரப் மேலும் தெரிவித்தார். (ஒ-9)

## புஷ் - புடின் சந்திப்பு

மொஸ்கோ, ஜூன்17

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ.புஷ், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினை நேற்று முன்தினம் சந்தித்தார். இரு தலைவர்களும் நேரடியாகச் சந்திப்பது இதுவே முதல் தடவையாகும்.

உலக அரங்கில்

அமெரிக்காவின் ஏவுகணை பாதுகாப்புத் திட்டம் குறித்து ரஷ்யா அதிருப்தி தெரிவித்துவரும் சமயத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## சுவீடன் நாட்டில் இடம்பெற்ற

# ஐரோப்பிய மாநாட்டை எதிர்த்த ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது சூடு!

கொதன்பேர்க்,ஜூன்17

சுவீடனில் அமெரிக்க - ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்ட உச்சி மாநாட்டை எதிர்த்து இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது, பொலீஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று பேர் காயமடைந்தனர்.

15 நாடுகளின் தலைவர்கள் கலந்துகொண்ட உச்சி மாநாடு நேற்று முன்தினம் சுவீடனின் கொதன்பேர்க் நகரில் நடைபெற்றது.

யூரோ நாணயம், உலக வர்த்தகம், பூகோள மயமாக்கல் ஆகியவற்றைப் பற்றி தலைவர்கள் கலந்துரையாடினர்.

மாநாடு நடந்து கொண்டிருந்த போது, மாநாட்டு மண்டபத்தின் வெளியே, பூகோள மயமாதலை எதிர்பவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களைக் கட்டுப்படுத்தும் பணியில் பொலீஸார் ஈடுபடுத்தப்பட்டனர்.

அப்போது ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும், பொலீஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதனையடுத்தே பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதில் ஆர்ப்பாட்டக்காரர்களில் மூவர் காயமடைந்து, மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

மேற்படி சம்பவத்தின் போது கொதன்பேர்க் நகரம் போர்க்களம் போல் காட்சியளித்ததாகவும் -

அங்கு இதுவரை நடந்த ஆர்ப்பாட்டங்களில் மிகப் பெரிய ஆர்ப்பாட்டம் இது என்றும் -

கூறப்படுகிறது. (ஒ)

## ஜப்பானில் நிலநடுக்கம்

டோக்கியோ,ஜூன்17

வடமேற்கு ஜப்பானில் உள்ள தீவு ஒன்றில் கடநத வியாழக்கிழமை நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிச்டர் அளவுகோலில் 54 புள்ளியாக இது பதிவாகியுள்ளது.

இதனால் உயிர்ச்சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை என்றும் பல கட்டடங்கள் இடிந்து வீழ்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-10)

# நாட்டிலும் வீட்டிலும் அமைதி திகழ்ந்த நல்லதோர் வாழ்வை வியந்த பாடல்!

### இலக்கியச் சோலை

அரசர்களும் புலவர்களும் நண்பர்களாக இருந்ததற்குப் புறநானூற்றில் சான்றுகள் பல உண்டு. சங்கப் புலவருள் ஒருவராகிய பிசிராந்தையார் கோப்பெருஞ் சோழனின் நண்பராக இருந்தார். இவர்களின் நட்புக்குக் காரணமாக இருந்தவை இரண்டு. ஒன்று. புலவரின் தமிழ்ப்புலமை. மற்றது அரசரின் தமிழ்பற்று. இந்த இருவருடைய நட்புப்பற்றி தமிழகம் எங்கும் புகழ்ந்து பேசப்பட்டது. பலராலும் புகழ்ந்து பேசபட்ட பிசிராந்தையார் எங்கு சென்றாலும் அங்கு புலவர்களும் அறிஞர்களும் சூழ்ந்து கொள்வார்கள். பிசிராந்தையாரின் புலமை அவருக்கு அவ்வளவு செல்வாக்கைத் தேடிக் கொடுத்திருந்தது. ஒரு சந்தர்ப்பத்தில் அவரைச் சூழ்ந்திருந்த சான்றோரிற் சிலர் "பிசிராந்தையார் அவர்களே! உங்களுக்கு வயது அதிகமாகிறதே! ஆனாலும் இளமைத் தோற்றமுடையவராக இருக்கிறீர்களே! இன்னும் தலைகூட நரைக்கவில்லையே! அதன் காரணம் என்ன என நாம் அறியலாமா? எனக்கேட்டனர்.

அதற்குப் பிசிராந்தையார் தமது இளமைத் தோற்றத்துக்கும் தலை நரைக்காதிருப்பதற்கும் காரணம் கவலை இன்மையே என்று கூறினார். கவலை இன்மையின் காரணத்தை மேலும் விளக்கமாகக் கூறினார்.

வீட்டிலும்சரி நாட்டிலும்சரி கவலை உண்டாவதற்கான சூழ்நிலை இல்லை. என் மனைவி மாட்சிமைப்பட்ட குணங்களை உடையவள். கொழுநனைத் தெய்வமாகப் போற்றுபவள். பிள்ளைகளைப பாதுகாப்பவள். விருந்தினரை உபசரிப்பவள். தர்மசிந்தனையே உடையவள்.

என்னுடைய பிள்ளைகள் கல்வி நாட்டமுடையவர்கள். தெய்வம் போற்றும் இயல்பினர். பெற்றோரை மதிப்பவர்கள். அறிவு நிறைந்தவர்கள். ஏவலாளரும் நான் கருதியதையே செய்வார்கள். இது வீட்டின்நிலை. நாட்டினநிலையைப் பார்க்கும் போது அரசன் அறநெறி விலகாதவனாக இருக்கின்றான். குடிமக்கள் எவருக்கும் துன்பம் செய்யாது அன்பு செய்து காப்பாற்றுகிறான். இதற்கும் மேலாக நற்குணங்களால் அமைந்து பணிய வேண்டிய உயர்ந்தவர்களிடம் பணிந்து ஐம்புலனும் அடங்கிய கொள்கையை உடைய சான்றோர்கள் பலர் எனது ஊரில் வாழ்கிறார்கள் என்றார்.

"சந்திரமௌலி"

*"யாண்டு பலவாக*
*நரை இலவாகுதல்*
*யாங்காகியர்*
*எனவினவுதிராயின் மாண்ட என்மனைவியொடு*
*மக்களும் நிரம்பினர்*
*யான்கண்டனையர் என்*
*இளைஞரும் வேந்தனும் அல்லவை செய்யான்*
*காக்கும் அதன்தலை*
*ஆன்றவிந்தடங்கிய*
*கொள்கைச் சான்றோர் பலர்யான்*
*வாழும் ஊரே.*



தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் வி.என்.சுதாகரன் (கண்ணாடி அணிந்திருப்பவர்) உதவியாளரைத் தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் கடந்த புதன்கிழமை தமிழகப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு சைதாப்பேட்டை பொலீஸ் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டபோது எடுத்த படம்.

## இலங்கையர் அதிகளவில் சென்ற போது

# இத்தாலிக் கடலில் மூழ்கிய கப்பல் 5 ஆண்டுகளின் பின்னர் கண்டுபிடிப்பு

ரோம்,ஜூன்17

சட்டவிரோதக் குடியேற்றவாசிகளை ஏற்றிக்கொண்டு இத்தாலி செல்ல முயன்ற சமயம் கடலில் மூழ்கிய கப்பலின் சிதைவுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

1996 ஆம் ஆண்டு இத்தாலிக்குச் சென்ற அந்தக் கப்பலில் பயணித்தவர்களில் பெரும்பாலானவர்கள் இலங்கை மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இந்தக் கப்பல் சிசிலிக்குத் தென் கிழக்கே உள்ள கடற்பரப்பில் பயணஞ்செய்தபோது மாயமாக மறைந்தது.

மறைந்த கப்பலில் பயணித்தவர்கள் பற்றி எந்தவிதத் தகவல்களும் இதுவரை கிடைக்கப்பெறாமல் இருந்தன.

இந்த நிலையில் கடலில் மூழ்கிய கப்பலில் பயணஞ்செய்த பயணி ஒருவரின் அடையாள அட்டையை மீனவர் ஒருவர் இருவாரங்களுக்கு முன்னர் கடலில் கண்டுபிடித்தார்.

அதனைத் தொடர்ந்து இயந்திர மனிதனைப் பயன்படுத்தி காணாமற் போன கப்பலை, அடையாள அட்டை கடலில் மிதந்த இடத்தின் ஆழத்தில் தேடும்பணி மேற்கொள்ளப்பட்டது.

நேற்று முன்தினம் எலும்புக் கூடுகள் நிறைந்த கப்பலின் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. (ஒ-9)



ஸ்பெயின் அரசு அறிமுகப்படுத்தியுள்ள கடுமையான போக்குவரத்துக் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சிலர் நிர்வாணமாக சைக்கிள் சவாரி செய்தபோது எடுத்த படம்.

## நேபாள அரச குடும்பப் படுகொலை

# விசாரணைக்கு உள்ளாக இளவரசரின் காதலி மறுப்பு

காத்மண்டு,ஜூன்17

நேபாள அரச குடும்பப் படுகொலைகள் தொடர்பான விசாரணைகளைச் சந்திக்க, மறைந்த இளவரசர் திபேந்திராவின் காதலி தேவயானி ராணா மறுத்துள்ளார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக நேபாளம் செல்ல தேவ்யானி விரும்பவில்லை என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

தேவ்யானியை திபேந்திரா மணந்தால், அரசுரிமையை அவரது தம்பி நிரஞ்சனுக்கு வழங்கிவிடுவதாக மன்னர் எச்சரித்ததாலேயே படுகொலைகள் நிகழ்ந்ததாகக் கூறப்படுகின்றது.



இதனால் தேவ்யானியை விசாரிக்க, விசாரணைக் குழு விரும்புவதாக அரண்மனை வட்டாரங்கள் தெரிவித்தன.

அரண்மனைப் படுகொலைகளை அடுத்து ஐரோப்பிய நாடொன்றுக்கு சென்ற தேவ்யானி அங்கேயே தங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ஒ)

## ஆசியர்களுக்கு எதிராக இடம்பெற்ற

# பிரிட்டிஷ் கலவரம் குறித்து விசாரிக்கக் குழு நியமனம்

லண்டன்,ஜூன்17

பிரிட்டனில் சமீபத்தில் சிறுபான்மை இனத்தவருக்கு எதிரான வன் முறைக் கலவரங்கள் குறித்து விசாரணை நடத்தப்பட உள்ளது.

பிரிட்டனுக்குள் தஞ்சம் கோரி விண்ணப்பிப்பவர்கள் அதிகமாகத் தங்கியுள்ள ஒல்ஹாமில் நகரில் இரு வாரங்களுக்கு முன்னர் ஆசிய மக்களுக்கு எதிரான கலவரங்கள் இடம் பெற்றன.

இந்தக் கலவரங்களின் போது, பிரிட்டிஷ் பொலீஸாரும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் இன ரீதியிலான துவேஷ உணர்வுடன் நடந்துகொண்டதாக குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன.

இது குறித்து விசாரணை நடத்த குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தக் குழுவில் ஆசியர் எவரும் இடம்பெறவில்லை என்பதால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

இதனால் ஆசியர்கள் மத்தியில் விசாரணைபற்றி அவநம்பிக்கை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ-9)

## நிர்வாகசேவை விசேட பரீட்சை

# வயதெல்லையை அதிகரிக்குக!

### பாதிக்கப்பட்டோர் அமைச்சரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 17

எதிர்வரும் ஓகஸ்டில் நடைபெறவுள்ள இலங்கை நிர்வாக சேவை விசேட பரீட்சையில் தோற்றுவதற்கு விண்ணப்பிப்பதற்கான வயது எல்லையை 30 இல் இருந்து 35 ஆக உயர்த்துமாறு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வயதெல்லை காரணமாக இந்தப் பரீட்சையில் தோற்ற முடியாது பாதிக்கப்பட்டுள்ள அரச சேவையில் உள்ள பட்டதாரிகள் இது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து மகஜர் ஒன்றை கையளித்தனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தங்களது பெரு முயற்சியால் இடம்பெறவுள்ள இலங்கை நிர்வாக சேவை (விசேட) திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதில் ஏற்கனவே அரச சேவையிலுள்ள பட்டதாரிகளான நாம் வயது எல்லை காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம் என்பதை தங்களது மேலான கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகவே, இம் மகஜரைத் தங்களிடம் கையளிக்கின்றோம். பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் பிரசினையுடன் சம்பந்தப்பட்ட பாதிக்கப்பட்டவர்கள்சார்பாக நியாயம் கிடைக்கக் கூடியதாக தீர்வுகளைக் கண்டுள்ள தாங்கள், இப்பிரச்சினையிலும் பெரிதும் பாதிப்புற்ற எமக்குச் சார்பான தீர்வினைக் காண்பீர்கள்; என்ற அசைக்க முடியாத எதிர்பார்ப்புடன் எமது பிரச்சினையை முன் வைக்கின்றோம்.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்தில் இடம்பெறவுள்ள இலங்கை நிர்வாக சேவை (விசேட) திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கானவயதுஎல்லை 28–30 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது. வடக்கின் போர்ச்சூழல் காரணமாகப் பல வருடகால வீண்விரயத்தின் பின்னர் 28 வயதில் பட்டதாரியாக வெளியேறிய எங்களில் பெரும்பாலானோர்கடந்தஒரு வருடத்தில் தான் அரசசேவையில் இணைந்துள்ளோம். இலங்கை நிர்வாக சேவை திறந்த போட்டிப்பரீட்சைக்கு இரண்டு தடவைகள் மாத்திரமே தோற்றமுடியும் என்ற விதிக்கமைய நாம் இரண்டாவது தடவைகூட வயது எல்லை காரணமாகத் தோற்றமுடியாத நிலையில் உள்ளதோடு, 5 வருட கால சேவையைப் பூர்த்தி செய்யாமையால் மட்டுப்படுத்தப்பட்டபரீட்சைக்கும் விண்ணப்பிக்க முடியாத நிலையிலும் உள்ளோம்.

அண்மைக் காலங்களில் இலங்கை நிர்வாக சேவைக்கு ஆள்களைத் தெரிவு செய்யும்போது இன விகிதாசார முறை பின்பற்றப்படாமையால் தமிழ்ப் பரீட்சார்த்திகள் பெரிதும் பாதிப்படைந்தது தாங்கள் அறிந்ததே. இது தொடர்பாகவும் கடந்த பரீட்சையில் நாம் பாதிக்கப்பட்டபோது தங்களது உதவியை நாம் நாடியதையும் தாங்கள் அறிவீர்கள்.

எனவே தங்களது பெரும் முயற்சியால் இலங்கை நிர்வாக சேவைக்கு பெருமளவு தமிழர்கள் தெரிவு செய்யப்படப்போகும் முதல் சந்தர்ப்பமான இப்பரீட்சையில் பாதிக்கப்பட்ட நாமும் சந்தர்ப்பத்தைப் பெறுவதற்காக திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் வயதெல்லையை உயர்த்தித்தருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ஏற்கனவே நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவை திறந்த போட்டிப் பரீட்சை, இலங்கை கணக்காளர் சேவை திறந்த போட்டிப் பரீட்சை போன்ற பரீட்சைகளில் அரச சேவையில் இல்லாதோருக்கான வயதெல்லை 30 ஆகவே காணப்பட்ட போதிலும் ஏற்கனவே அரச சேவையிலுள்ள பட்டதாரிகளுக்கான வயதெல்லை 32 அல்லது 35 ஆக அமைந்திருந்ததையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

எனவே இம்முறை இடம்பெறும் இலங்கை நிர்வாக சேவைத் திறந்த போட்டிப் பரீட்சைக்கு அரச சேவையிலுள்ள பட்டதாரிகள் விண்ணப்பிப்பதற்கான வயதெல்லையை 30 இலிருந்து 35 ஆக உயர்த்தித்தித் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம் — என்று தெரிவிக்கப்படுகிறது.

(ஐ)

## ஐ. நா. தூதரகத்தின் உதவியால்

# தென்மராட்சி மாணவருக்கு தளபாடங்கள் கிடைத்தன

தென்மராட்சி. ஜூன் 17

வடமராட்சிப் பகுதியில் இயங்கும் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மூன்று பாடசாலைகளுக்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தினர் இரண்டு லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான 175 மாணவர்களுக்கான மேசை, கதிரைகளை வழங்கி உள்ளனர்.

விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்திற்கு 75மேசை கதிரைகளும்—

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், கிளாலி றோமன் கத்தோலிக்க த.க. பாடசாலை ஆகியவற்றுக்குத் தலா 50 மேசை, கதிரைகளும் வழங்கப்பட்டுள்ளன.

தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையின் முயற்சியினால் யாழ். செயலகத் திட்டமிடல் பிரிவினர் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் உதவியுடன் இவற்றை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## வலி. மேற்குப் பிரதேச செயலர் பிரிவில்

# விசேட அ. அட்டை பெறுவதற்கு வெவ்வேறு நடைமுறைகள்

### கிராம மக்கள் தடுமாற்றம்

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் விசேட அடையாள அட்டைகள் தொடர்பாக இராணுவத்தினரால் வெவ்வேறு நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

வட்டுக்கோட்டை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் விசேட அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பிப்போர் விண்ணப்பங்களை அந்தந்தப் பிரிவுக் கிராம அலுவலர் மூலம் வட்டுக்கோட்டை சிவில் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்,

சங்கானை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் கிராம அலுவலர்கள் மூலம் படிவங்களைப் பூரணப்படுத்திவிட்டு விண்ணப்பதாரிகளே படிவங்களை சங்கானை சிவில் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

சங்கானை சிவில் அலுவலகத்தினர் விசேட அடையாள அட்டை விண்ணப்பப்படிவங்களின் இரண்டு நிழற்படப் பிரதிகளையும் கொண்டு வருமாறு பொதுமக்களை பணிப்பதாகவும் தெரியவருகின்றது.

இராணுவத்தினரின் வெவ்வேறு நடவடிக்கைகள் பற்றி இப் பகுதி கிராம அலுவலர்கள் பிரதேச செயலரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர். பிரதேச செயலர் கலாநிதி க. குணராசா இது தொடர்பாக 513 ஆவது படைத்தரப்பு அதிகாரியிடம் எந்த நடவடிக்கையை பின்பற்றுவது என்று கடித மூலம் கேட்டுள்ளார்.

(க-175)

வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச் சங்கம்
(ஆட்டோ சங்கம்)
முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்

இடைக்காலப் பொதுக்கூட்டம்

ஆட்டோ சங்கக் காரியாலயத்தில் நாளை (18-06-2001) திங்கட்கிழமை காலை 8.30 (புதிய நேரம்) மணிக்கு மேற்படி பொதுக்கூட்டம் தலைவர் திரு. இ. மனோகரராசா அவர்கள் தலைமையில் நடைபெறும். வாடகைச் சேவையிலீடுபடும் அனைத்து ஆட்டோ உரிமையாளர்களும், சாரதிகளும் தவறாது கலந்து கொள்ளவும்.

(89129) நிர்வாகம்

## மாணவர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ். பல்கலைக்கழக இறுதி வருட பொதுக்கலை மாணவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 20 ஆம்திகதி புதன்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு வர்த்தகத்துறைமண்டபத்தில் நடைபெறவுள்ளதாகஅறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-4-6)

# சுகாதாரத் தொழிலாளரின் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும்

### மாநகரசபை உறுப்பினர் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஜூன் 17

சுகாதாரத் தொழிலாளர்கள்தான் யாழ். மாநகர சபையின் முதுகெலும்பு. இவர்களுடைய பிரச்சினைகள் சுமுகமாகத் தீர்க்கப்படவேண்டும்.

இவ்வாறு யாழ். மாநகர சபை உறுப்பினர் மனுவல் மங்களநேசன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய இலங்கை ஸ்தல ஸ்தாபனதொழிலாளர்சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் கூட்டம், நாவலர் கலாசார மண்டபத்தில் அதன் தலைவர் மெ. எட்வின் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றும் போது கூறியதாவது:–

மாநகரசபைச் சுற்றாடல் எப்போதும் அழகு கொண்டதாக இருக்கவேண்டுமானால், சுகாதாரத் தொழிலாளர்கள் திருப்தியாக வாழ வேண்டும். எனவே சுகாதாரத் தொழிலாளர்களின் நலன் பேணப்படுவதுடன், அவர்கள் மதிக்கப்படவேண்டும் என்றும் அவர் கூறினார்.

யாழ். மாநகரசபை உறுப்பினர் முத்துக்குமாரு தவநாதன் அங்கு உரையாற்றும் போது கூறியதாவது:–

சுகாதாரத் தொழிலாளர்களின் கடமைகள் மதிக்கப்படவேண்டும். அவர்களது பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வுகள் காணப்படவேண்டும்.

பிரச்சினைகள் தீர்க்கப்படாது விட்டால் அதற்காக அவர்கள் நடத்தும் போராட்டத்துக்கு, நாம் ஆதரவாக செயற்படுவோம் என்று கூறினார்.

ஐக்கிய இலங்கை ஸ்தல ஸ்தாபனத் தொழிலாளர் சங்கத்தின் யாழ். கிளைத் தலைவர் மெ. எட்வின் தனது உரையின் போது கூறியதாவது:-

கடமை தவறாத ஒழுக்கசீலர்களாக இருக்கும் சுகாதாரத் தொழிலாளர்களின் நலன் பாதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நாம் மாநகரசபை அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தினோம். ஆனால் எவ்வித பயனும் கிடைக்கவில்லை என்று கூறினார்.

(க-5)

# நீதியரசர் ஒருவரின் தவறுகளை நாடாளுமன்றம்ஆராயமுடியாது

### சட்டத்தரணிகள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 17

அரசமைப்புச் சட்டத்துக்கு அமைய உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவரின் தவறுகளை நாடாளுமன்றத்தால் ஆராய முடியாது.

இவ்வாறு கொழும்பு சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தச் சங்கத்தின் தலைவர் எஸ். பகீரதன் நாடாளுமன்றத்துக்கு அனுப்பியுள்ள ஆலோசனைகளில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

உயர்நீதிமன்ற நீதியரசர்களின் மோசமான நடவடிக்கைகள் அந்தப் பதவிக்குப் பொருத்தமில்லாத செயல்கள் என்பன பற்றி ஆராய்ந்து, சட்டப் பிரமாணங்களைஉருவாக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு உள்ளது.

நாடாளுமன்றம் அது தொடர்பாக நிலையியற் கட்டளைகளை உருவாக்கியுள்ள போதிலும், சட்டங்களை வரையவில்லை.

எனவே நீதியரசர் ஒருவரின் தவறுகளை நாடாளுமன்றம் விசாரிக்க முடியாது.

— இவ்வாறு கொழும்பு சட்டத்தரணிகள் சங்கம் தனது ஆலோசனையில் குறிப்பிட்டுள்ளது.

பிரதம நீதியரசர் சரத் என். சில்வாவுக்கு எதிராக ஐ. தே. க. நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள குற்றச்சாட்டுப் பிரேரணைகள் தொடர்பாக, நாடாளுமன்றத்துக்கும், நீதித்துறைக்கும் இடையே உருவாகியுள்ள அதிகாரசர்ச்சைகள் குறித்தே இந்த ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டன.

(க-ஓ-10)

## சங்கானையில் சைக்கிள் திருட்டு

சங்கானைப் பிரதேச செயலகத்தில் சைக்கிள் ஒன்று திருட்டுப்போயுள்ளது.

வீடமைப்பு நன்கொடை 25 ஆயிரம் ரூபாவை பெற்றுக் கொள்வதற்கு கையொப்பம் இடுவதற்கு பிரதேச செயலகத்துக்கு வந்த குடும்பஸ்தரின் சைக்கிளே திருட்டுப் போய் விட்டது.

பிரதேச செயலகத்துக்கு முன்பாக சைக்கிளை நிறுத்தி விட்டு செயலகத்தின் மேல் மாடியிலுள்ள திட்டமிடல் பகுதிக்குச் சென்று கையொப்பத்தை இட்டுவிட்டுத் திரும்பி வந்தபோது சைக்கிள் மாயமாகி விட்டது.

பண்ணாகத்தைச் சேர்ந்த ஒருவரே சைக்கிளைப் பறி கொடுத்தவர் ஆவார்.

(க-175)

பொது மக்களுக்கு
யாழ். மாநகரசபை விடுக்கும்
பணிவான வேண்டுகோள்

யாழ்ப்பாண பாநகரசபையில் கடமையாற்றும் சுகாதாரத் தொழிலாளர்கள் நியாயமற்ற கோரிக்கையை முன் வைத்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளமையினால் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது. நிர்வாகத்தினால் மாற்று நடவடிக்கை எடுக்கும் வரை பொது மக்களாகிய நீங்கள் நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிக் கழிவுப் பொருள்களை வீதிகளில் வீசுவதைத் தவிர்த்துத் தங்கள் காணிகளுக்குள் புதைக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பொது மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியத்திற்காக மனம் வருந்துகின்றோம்.

சி. வே. குலநாயகம்,
பதில் ஆணையாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
16-06-2001.

(சி/17127)

உதயன்

## உறுக்கிப்பேச ஒரு வழியுண்டு

தமிழ மக்களிடையேயும், தமிழ் அரசியல் தலைவர்களிடையேயும் ஒற்றுமை இல்லாமை குறித்து எழுதாதவர்கள் இல்லை. கூட்டங்களில் பேசாதவர்கள் இல்லை. அதற்கு தக்க காரணமும் உண்டு.

தமிழர்கள் உண்மையான அரசியல் சுதந்திரம் பெறமுடியாதவர்களாக, இரண்டாம் தரப் பிரஜைகளாக, அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டவர்களாக, சொல்லொணா அவலங்களையும் துன்பங்களையும் அனுபவித்து சீரழிந்து கொண்டிருப்பவர்களாக, நிம்மதியும் பாதுகாப்பும் அற்றவர்களாக வாழ்வதற்கு அரசியல் தலைவர்களிடம் ஒற்றுமை இல்லாததே முழுமுதற் காரணம்.

தமிழ் மக்களின் நலன்களில் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்ற உணர்வே இல்லாதவர்களாக தமிழ் அரசியல் வாதிகள் பிளவுண்டு, தீர்க்க தரிசனம் சிறிதும் இன்றி, பிரிந்து நின்று, தத்தமது முன்னேற்றம் கருதிச் செயற்பட்டு வருவது ஒரு பரம்பரை வியாதியாகத் தொற்றிக்கொண்டு வருகிறது!

இதற்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்தும், பகுத்தாராய்ந்து செயற்படும் தன்மையற்றவர்களாக இருந்தும் காரணர்களாக விளங்குபவர்கள் மக்களே என்பதனை மறைத்து விட முடியாது. சாய்ந்தால் சாயிற பக்கமே சாய்ந்து தமது சுய தேவைகளைப் பெற்றுக் கொள்ளும் குணமே இதன் பின்னணி.

அரசியல் தலைவர்களைத் திருத்தாத மக்களும், மக்களைச் சரியாக வழி நடத்தாத தலைவர்களும் என்ற சாபக்கேடு தொடர்வது இந்த ஒற்றுமை இல்லாமைக்குப் பிரதான காரணங்கள்.

ஈழத்தமிழர்கள் தமது உரிமைகளைப் பெற வேண்டுமெனில், தமிழ்க் கட்சிகள், அதன் தலைவர்கள் ஒன்றுபட்டு ஒரே அணியில் நின்று குரல் கொடுப்பது அவசியம். இதனை எழுதுபவர்களும் பேசுபவர்களும் அனேகர். ஆனால் இதற்காக முயன்றவர்கள் மிகச் சிலர்.

தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்டு தமிழ்க்கட்சிகளை ஒன்றுபடுத்தி ஒற்றுமையை உண்டாக்குவதில் வெறும் பேச்சில் மட்டுமன்றிச் செயலிலும் தீவிரமாக உழைத்த பெருமகன் ஒருவர் எம்மிடையே வாழ்ந்தார். அவர்தான் மாமனிதர் துணை வேந்தர் அழகையா துரைராஜா.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்காக மட்டுமன்றி, முழுத் தமிழ் மக்களின் நலன்களுக்காகவும் உழைத்த தொண்டன் அவர். அவரது மண் பற்றையும் மக்கள் பற்றையும் அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் மிக நன்கறிவர். அவர்களில் ஒருவர் "நந்தி" எனப் பெரிதும் அறியப்பட்ட பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் அவர்கள்.

தமிழ்க்கட்சிகளை ஒன்றுபடுத்துவதற்காக அமரர் துணைவேந்தர் துரைராஜா திட்டம் ஒன்றைத் தீட்டியிருந்தார் என்ற தகவலை பேராசிரியர் "நந்தி" வெளியிட்டுள்ளார். ஆனால் துணைவேந்தரால் தமது திட்டத்தைச் செயற்படுத்த உழைகக முடியாமல் போய்விட்டது.

எந்தக் கல்விமானும் தேடிக் கொள்ளாத பெருமதிப்பை அவர் தமது அர்ப்பணிப்புடனான சேவைகள் மூலம் பெற்றுக்கொண்டார். அவர் தமது திட்டத்தைச் செயற்படுத்த உழைக்கும் சந்தர்ப்பம் இருந்திருப்பின், நிலைமை மாற்றம் கண்டிருக்கும். ஆனால் அதற்கு வாய்ப்பு இல்லாமற் போனது தமிழ் மக்களின் தவக்குறைவே.

தமிழர்கள் உரிமை பெறுவதற்கு இப்போதைய முதல் தேவை, தமிழ் அரசியல் தலைவர்களிடையே ஒற்றுமை. ஒரே அணியில் நின்று "உறுக்கிப்" பேசி உரிமை பெறக்கூடிய அரிய சந்தர்ப்பம் இப்போது புலர்ந்துள்ளது. இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து, முன்னெப்போதும் இல்லாதவாறு சர்வதேச சமூகத்தின் பார்வை பதிந்துள்ள காலம் இது.

இப்போதைய தமிழ் அரசியல் தலைவர்கள் தமிழர் நலன்களுக்காகவே உழைக்கும் உண்மையான உணர்வு உள்ளவர்களாயின், தாமே ஒற்றுமைப்பட்டு ஓரணியில் நின்று உழைக்க முன்வரவேண்டும். இல்லையேல் மக்களின் சாபம் இவர்களைத் தூக்கி வீசுவது நிச்சயம்.

# தென்மராட்சிப் பகுதியில் இதுவரை 535 குடும்பங்கள் மீள்குடியமர்வு

## யாழ்.படைத்தரப்பு தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்17

தென்மராட்சிப் பகுதியில் நேற்று முன்தினம் வரை 535 குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளன என யாழ்.பாதுகாப்புப் படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

தொடர்ந்து, மக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பமாகி எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை வரை நடைபெறும் என்றும் -

மீளக்குடியமரும் மக்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் படையினர் செய்து வருகின்றனர் என்றும் -

பலாலி படைத் தலைமையகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டது.

மளக்குடியமரும் மக்களின் நலன் கருதி பருத்தித்துறையில் இருந்து தினமும் காலை 7.30 மணிக்கும் பிற்பகல் 2.30 மணிக்கும் நுணாவில் வரை பஸ் சேவை நடத்தப்படுவதாகவும்-

இந்த பஸ் நுணாவிலில் இருந்து காலை 9 மணிக்கும் பிற்பகல் 4.30 மணிக்கும் பருத்தித்துறை நோக்கிப் புறப்படும் என்றும் -

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-7)

## நாட்டு நடப்பு

**'பகிடி' வதை' VII**

காடுகளில் விலங்கினங்கள் கூட
கடிந்து பகைப்பதில்லையே!
ஆடு, மாடு, கோழி, பன்றி
அமைதியாக வாழுதே
பட்டம் பெற்று படிப்பில் தேறி
பண்பாளனாக வேண்டும் நீ
வெட்கம் கெட்ட வேலை பார்த்து
வீண் பழியைத் தேடல் நியாயமோ?

*- விகடகவி -*

# காட்டாற்று வெள்ளத்தை தடுக்க ஓர் அணை.........

☆ நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியையும் ஏனைய பெரும்பான்மை இனக் கட்சிகளையும் இணைத்துத் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த அமைச்சர்கள் சிலர் முயற்சி செய்து வருகின்றார்கள்.

☆ பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா இவ்விஷயத்திற் தீவிர அக்கறை காட்டி வருகின்றார்.

☆ ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் பலர் இந்த முயற்சியை வரவேற்றுள்ளனர்.

☆ பௌத்த மகா சங்கத்தினரின் ஆசீர்வாதமும் இம்முயற்சிக்குக் கிடைத்து வருகின்றது.

பெரும்பான்மை இனக் கட்சிகள் சில இத்தகைய முயற்சிகளை ஆதரித்து வருகின்றன.

கடந்த சில நாள்களாக, செய்தி ஊடகங்களில் முக்கியத்துவம் பெற்று வந்த தகவல்கள் - ஊகங்கள் இவை!

சுதந்திரம் பெற்று அரை நூற்றாண்டுக்கு மேலாகிய போதும், எல்லோருமே எதிர்பார்த்த சமூக, பொருளாதார முன்னேற்றங்களை இந்த நாடு அடைய முடியாமற் போனதற்கு, நாட்டிலே தாராளமாகக் கிடைக்கும் "மனித வள"த்தை முதலீடாக்கிப் பொருளாதர வளத்தைக் கட்டி எழுப்ப முடியாமற் போனதற்கும் -

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் உட்பட, யார் யாரிடமெல்லாம் கடனும் நன்கொடையும் வாங்க முடியுமோ, அவர்களையெல்லாம் தாழ்ந்து பணிந்து, குழைந்து கும்பிட்டுக் கையேந்திப் பிச்சை கேட்க வேண்டிய பரிதாபநிலை ஏற்பட்டதற்கும் -

சமூகங்களிடையே நல்லுறவையும், நல்லெண்ணத்தையும் நல்வினைகளையும் வளர்க்க முடியாமற் போனதற்கும் -

சந்தோஷம், சகிப்புத் தன்மை, சமாதான சகவாழ்வு ஆகியவற்றை அடித்து விரட்டிவிட்டு, போட்டியும் பொறாமையும் போரும் அடிதடியும் இரத்த வெறியும் 'கொடுங்கோல்' ஓச்சி வருவதற்கும் -

மக்களாட்சி என்ற உன்னதமான அரசியற் தத்துவத்தின் பண்பையும் பணியையும் பயனையும் விளங்கிக் கொள்ளாத - விளங்கிக்கொள்ள விரும்பாத - விளங்கிக்கொள்ள முடியாத 'சண்டித்தனத்' தலைவர்கள் பங்கேற்ற 'கட்சி முறை அரசியலும்', 'சந்தர்ப்ப வாதமு'மே முக்கியமான காரணங்களுள் முதலிடம் பெறுபவை என்பது முக்காலும் உண்மை!

வருத்தம் தரும் இந்த நிலைக்கு ஒரு திருத்தம் தரும் நோக்கில் - நல்ல திருப்பம் தரும் நோக்கில் இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் -

நல்ல உள்ளங்கள் எல்லாம் சொல்லொணா மகிழ்ச்சி அடையும்!

முயற்சிகள் முழு வெற்றியை ஈட்டவேண்டும் என நாளிலும் பொழுதிலும் பிரார்த்தனை செய்யும்!

வழங்கக்கூடிய அத்தனை ஒத்துழைப்பையும் உதவியையும் வழங்கி மகிழும்!

வெற்றியை வரவேற்று மகிழும்!

விட்ட தவறுகளிலிருந்து - இத்தனை காலத்துக்குப் பின்னராவது - இந்தத் தலைவர்கள் நல்ல ஒரு பாடத்தைக் கற்றுவிட்டார்களே - கற்றுத் திருந்திவிட்டார்களே என நிம்மதிப் பெருமூச்சு விடும்!

ஆனால் -

பேரம் பேசித் தம் கோரிக்கைகளை வென்றெடுக்க முயலும் சிறுபான்மைக் கட்சிகளின் கொட்டத்தை அடக்குவது -

அவற்றின் செல்வாக்கைச் சிறுகச் சிறுகக் குறைத்து, இறுதியில் ஒரேயடியாக அவர்களை ஓரங்கட்டுவது -

சிறுபான்மை மக்களைத் தம் பாதந்தாங்கிகளாக - பந்தம் பிடிப்போராக - 'ஆமாம், சாமி' போடும் அடிமைகளாக ஆக்குவது -

சிறுபான்மை இனங்களில் அநாமதேயங்களை அரியணையில் ஏற்றி 'பொய்' முடி சூட்டி 'பொம்'மை' அரசர்களாக்கி அந்த இன மக்களின் ஆதரவெல்லாம் தமக்கே என உலகுக்காட்டுவது -

பேரினவாதப் பூதத்தின் கோரப் பசியைப் போக்கு 'வதற்காகச் சிறுபான்மை இனங் களின் சிரங்களைக் கொய்வது -

போன்றவையே மேற்போந்த முயற்சிகளை "முடுக்கி"விடும் முக்கியமான காரணிகள் என்ற கசப்பான உண்மை திடீரென்று வெளிப்பட்டு -

அத்தனை நல்லுள்ளங்களையும் நடுநடுங்கச் செய்கின்றது!

விரக்தியை நோக்கி அவற்றை விரட்டிக் கொண்டு நிற்கின்றது!

இந்த நிலையில் -

தமிழ் பேசும் சிறுபான்மை மக்கள் - தமிழ், முஸ்லிம் மக்கள் - என்ன செய்யப் போகின்றார்கள்?

பிரித்தாளும் நரித் தந்திரத்திற்குட் சிக்கி, உரிமைகள் ஒவ்வொன்றாக உரித்தெடுக்கப்படுவதைப் பார்த்து ஊமைகளாக இருக்கப் போகின்றார்களா?

அல்லது -

ஒற்றுமை என்ற உருக்குக் கவசத்தை அணிந்து - உலகத் தலைவர்களை நேரிலே சந்தித்து - இலங்கை அரசின் இரட்டை வேடத்தைப் புட்டுக் காட்டி - உரிமைகளைப் பெறுவதை - அவை நீடித்து நிலைப்பதை - உறுதிப்படுத்தப் போகின்றார்களா?

தமிழ் - முஸ்லிம் மக்களிடையேயுள்ள வேறுபாடுகள் - வித்தியாசங்கள் -

தொகையிற் குறைந்தவை - அளவிற் சிறியவை - பேசித் தீர்க்கப்படக் கூடியவை!

"தமிழ் பேசும் மக்கள்" என்ற ஊறுதியான அணை தான் பேரினவாதம் என்ற காட்டாற்று வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தும்; அதன் வேகதைதத் தணித்துத் தகர்க்கும்! தமிழ், முஸ்லிம் மக்களைத் தன் மானத்துடன் வாழ வைக்கும்!

**-சித்தன்.**

# வடக்கு, கிழக்கு ஆஸ்பத்திரிகளில் பணியாற்ற மருத்துவருக்கு அழைப்பு

## இராணுவத் தளபதி விடுத்தார்

கொழும்பு,ஜூன்17

வடக்கு-கிழக்கு பகுதிகளில் உள்ள ஆஸ்பத்திரிகளில் கடமையாற்ற மருத்துவர்கள் முன்வரவேண்டும்.

இவ்வாறு அழைப்பு விடுத்திருக்கின்றார். இராணுவத் தளபதி ஜெனரல் லயனல் பலகல்ல.

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் கொழும்பில் ஆரம்பமான கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

யுத்தம் நடைபெறும் பகுதிகளிலுள்ள ஆஸ்பத்திரிகளுக்கு சிகிச்சைக்கென வரும் நோயாளிகளின் எண்ணிக்கை அண்மைக் காலமாக அதிகரித்து வருகிறது. எனினும் அப்பகுதிகளில் உள்ள ஆஸ்பத்திரிகளில் மருத்துவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்தே காணப்படுகிறது. என்றும் இராணுவத் தளபதி தெரிவித்தார். (ஒ-7)

## நாளை

ஆனி 4
திங்கட்கிழமை
திதி: துவாதசி
முன் இரவு 9.42 வரை
நட்சத்திரம்: பரணி
முன் இரவு 8.11 வரை
சுபநேரம் : 11.53 - 1.23
ராகுகாலம் : 7.23 - 8.53
(பழைய நேரப்படி)

## சம்றொக் மாணவர் இன்று கல்விச் சுற்றுலா

யாழ்ப்பாணம்,ஜூன்17

ஈச்சமோட்டை சம்றொக் கல்வி நிலையத்தின் மாணவர்கள், ஆசிரியர்கள் ஒன்றிணைந்து இன்று கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாயப் பயிற்சிப் பாடசாலை, வளிமண்டலவியல் ஆராய்ச்சி நிலையம் மற்றும் வடமராட்சிப் பகுதியில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களுக்கும் இந்தக் கல்விச் சுற்றுலாக் குழுவினர் செல்லவுள்ளனர். (ஒ-7)

## உதயவாக்கு

தகுதியில்லாதவனைப் புகழ்தல், கள்ளச் சந்தையில் ஒரு பொருளை விற்பதற்குச் சமம்.

# இந்திய மீனவருக்கு உதவிப்பொருள்

யாழ்ப்பாணம்,ஜூன்17

வடமாகாணக் கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாஜத்தின் 4 பிரதிநிதிகளைக் கொண்ட குழுவொன்று, நேற்று யாழ்.சிறைச்சாலைக்குச் சென்று அங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ள 50 இந்திய மீனவர்களைச் சந்தித்து உரையாடினர்.

இந்திய மீனவர்களுடன் உரையாடிய மேற்படி குழுவினர் அவர்களுக்கு பிஸ்கற், சவர்க்காரங்கள் மற்றும் முகச்சவரச் சாதனங்கள் என்பவற்றையும் வழங்கினர்.

இலங்கைக் கடல் எல்லைக்குள் நுழைந்ததற்காக இந்திய மீனவர்கள் நெடுந்தீவுக் கடல்பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தனர்.

(ஒ-10)

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



அங்கே காற்றடங்களைத் தெளிவாகக் கண்டால் தொடர்ந்து நடக்கலாம். புது இடங்கள் என்றால் போகாது தவிர்க்கவும். கவனம்!

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜுன்17

யாழ்மாவட்டத்தில் இருந்து வெளி இடங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களில் இம்மாதம் 14ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

### சங்கானை

(164000ஏ) (164000பி) (166936ஏ)
(166936பி) (179059ஏ) (179059பி)
(179059சி) (179478ஏ) (179478பி)
(179478சி) (181529ஏ) (181685ஏ)
(183191ஏ) (184849ஏ) (184849பி)
(184849சி) (186795ஏ) (186795பி)
(186821ஏ) (187019ஏ) (187019பி)
(187020ஏ) (187020பி) (188670ஏ)
(188670பி) (188670சி) (188670டி)
(188715ஏ) (188796ஏ) (189349ஏ)
(189349பி) (190451ஏ) (190451பி)
(190519ஏ) (191850ஏ) (191858ஏ)
(191859ஏ) (191859பி) (191976ஏ)
(192238ஏ) (192251ஏ) (192251பி)
(192266ஏ) (192270ஏ) (192273ஏ)
(192274ஏ) (192274பி) (192283ஏ)
(192284ஏ) (192285ஏ) (192285பி)
(192289ஏ) (192289பி) (192289சி)
(192295ஏ) (192297ஏ) (192304ஏ)
(192304பி) (192332ஏ) (192360ஏ)
(192360பி) (192400ஏ) (192400பி)
(192403ஏ) (192403பி) (192403சி)
(192456ஏ) (192456பி) (192488ஏ)
(192488பி) (193494ஏ) (193494பி)
(193498ஏ) (193668ஏ) (193758ஏ)
(193758பி) (193762ஏ)

### நல்லூர்

(187123ஏ) (187123பி) (191963ஏ)
(191963பி) (192217ஏ) (192217பி)
(192217சி) (192342ஏ) (192344ஏ)
(192344பி) (192408ஏ) (192409ஏ)
(192410ஏ) (193581ஏ)

### பருத்தித்துறை

(174601ஏ)

### சண்டிலிப்பாய்

(141807ஏ) (187065ஏ) (189481ஏ)
(189481பி) (189481சி) (189481டி)
(189481ஈ) (189481எவ்) (189481ஜி)
(190524பி) (190618ஏ) (190721ஏ)
(190738ஏ) (190738பி) (190738சி)
(190749ஏ) (190749பி) (191805ஏ)
(191810ஏ) (191810பி) (191856ஏ)
(191869ஏ) (191869பி) (191922ஏ)
(191935ஏ) (191966ஏ) (191966பி)
(191993ஏ) (191998ஏ) (191998பி)
(191998சி) (192239ஏ) (192239பி)
(192255ஏ) (192255பி) (192255சி)
(192264ஏ) (192278ஏ) (192298ஏ)
(192300ஏ) (192309ஏ) (192309பி)
(192314ஏ) (192337ஏ) (192378ஏ)
(192397ஏ) (192406ஏ) (192418ஏ)
(192428ஏ) (192428பி) (192433ஏ)
(192445ஏ) (192446ஏ) (192448ஏ)
(193499ஏ) (193513ஏ) (193574ஏ)
(193582ஏ) (193600ஏ) (193600பி)
(193656ஏ) (193689ஏ) (193757ஏ)
(193773ஏ) (193773பி) (193776ஏ)
(193783ஏ) (194203ஏ)

### தெல்லிப்பழை

(191794ஏ) (191794பி) (191834ஏ)
(191834பி) (192000ஏ) (192050ஏ)
(192303ஏ) (192303பி) (192303சி)
(192303டி) (192313ஏ) (192348ஏ)
(192354ஏ) (192354பி) (192463ஏ)
(192479ஏ) (192480ஏ) (193525ஏ)
(193557ஏ) (193560ஏ) (193583ஏ)
(193665ஏ) (193665பி) (193665சி)
(193665டி) (193665ஈ) (193747ஏ)
(193777ஏ) (194200ஏ)

### உடுவில்

(185089ஏ) (188733ஏ) (188733பி)
(190524ஏ) (190565ஏ) (190565பி)
(191800ஏ) (191800பி) (191932ஏ)
(191932பி) (191945ஏ) (191945பி)
(191955ஏ) (191955பி) (192399ஏ)
(192417ஏ) (192424ஏ) (192424பி)
(192424சி) (192424டி) (192449ஏ)
(192462ஏ) (192485ஏ) (192485பி)
(192485சி) (193492ஏ) (193605ஏ)
(193605பி) (193639ஏ) (193639பி)
(193639சி) (193713ஏ) (193733ஏ)
(193733பி) (193760ஏ) (193776பி)
(193776சி) (193776டி) (193776ஈ)
(193776எவ்) (193776ஜி) (194335ஏ)
(194335பி) (194335சி) (194365ஏ)

(க-10)


## கொழும்பில் தங்குமிட வசதி

சகல வசதிகளுடன், குறைந்த செலவில், நிறைந்த சேவை புரியும் சுத்தமான, பாதுகாப்பான, அமைதியான சூழலில் No.89, HINNY APPUHAMY MAWATHA, CO.-13 இல் அமைந்துள்ளது "VANI INN", லொட்ஜ். தங்குமிடம் தேவைப்படுவோர் மேற்படி விலாசத்தைப் பதிவு செய்து வரலாம். மேலதிக விவரமறிய: T.P: 01-433182, 472582

- முகாமையாளர்

(88723)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திரு நாள்திருப்பலியைச் சிறப்பிக்க நிதி உதவி நல்கிய

**பிரான்ஸ் நாட்டு**

**அந்தோவான் மன்றத்தினருக்கு**

எமது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

**புனித அந்தோனியார் இளைஞர் மன்றம், சுன்னாகம்.**

(89091)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

மலர்வு 02 - 03 - 1957



உதிர்வு 19 - 05 - 2001

## திருமதி கந்தையா அன்னம்மா

("கைலயங்கிரி", மீசாலை மேற்கு)

**எமது குடும்பத் தலைவியாய் விளங்கி**
**எமக்கு தக்க கல்வியளித்து தரணியில் வாழ்வாங்கு**
**வாழ வழிகாட்டியாயிருந்த எமது தெய்வமே!**
**உங்கள் பிரிவு எமக்குப் பெரும் துயரத்தைத் தருகின்றது.**
**உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

இன்று (17-06-2001) ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணிக்கு மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப்பூசையிலும், அன்னதானத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*நிரந்தர முகவரி*
"கைலையங்கிரி"
*மீசாலை மேற்கு, மீசாலை.* (89039)

**- குடும்பத்தினர்.**

## புலமைப் பரிசில் கொடுப்பனவு

தென்மராட்சி,ஜுன்17

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் கொடுப்பனவினைப் பெற்றுக் கொள்ளும் மாணவர்கள் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் தமது கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ளுமாறு கல்லூரி அதிபர் திருமதி சி.சிவநாதன் கேட்டுள்ளார்.(ஒ-117)

## இன்றுமுதல் மணல் அள்ளத் தடை

வடமராட்சி,ஜுன்17

வடமராட்சி கிழக்கு மணல் காடுப் பகுதியில் மணல் ஏற்றுவதற்கு இன்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம்ஒருவாரத்திற்கு அனுமதிப்பத்திரம் வழங்குவது இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இப்பகுதி மக்கள் கொடுத்த முறைப்பாட்டையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக மணல் ஏற்றும் உழவு இயந்திர உரிமையாளர் சங்கத்திற்கு அறிவித்துள்ளதாகவும் தெரிவித்தார். (ஒ-117)

## சங்கரத்தை ஆலயத்துக்கு மின் வசதி

யாழ்ப்பாணம்,ஜுன்17

சங்கரத்தை துணைவிச்சந்தியில உள்ள வயிரவர் ஆலயத்துக்கு விரைவில் மின் கிடைக்க உள்ளது.

நீண்டகாலமாக இருளில் இருந்த இந்த ஆலயத்துக்கு மின் இணைப்பைப் பெற்றுத்தருமாறு அப்பகுதி இந்து வாலிபர் சங்கம் வலிமேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதனிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

அதனையடுத்து ஆலயத்துக்கு மின் வழங்குவதற்கான செலவைப் பிரதேச சபைத் தலைவர் உடனடியாக வழங்கி உள்ளார். மின் இணைப்பை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அவர் மின்சாரசபை அதிகாரிகளிடம் கேட்டிருக்கிறார்.

(ஐ)

## கைதடிப் பொலீஸ் நிலையத்தில் பதிவுகள்

தென்மராட்சி,ஜுன்17

சாவகச்சேரி பொலீஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்களின் முறைப்பாடுகள் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் கைதடி பொலிஸ் நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை கொடிகாமம் பொலீஸ் நிலையத்திலேயே முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்ததாகவும், வியாழக்கிழமை தொடக்கம் கைதடிப பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடுகளை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அங்கு சென்று திரும்பிய சாவகச்சேரி வர்த்தகர்கள் உதயனுக்குத் தெரிவித்தனர். (அ-117)

# மக்கள் முகம்



கொழும்பில் தொழில்புரியும் சட்டத்தரணி சின்னத்தம்பி மகேந்திரன் ஏப்ரல் 6ஆம் திகதி உயர் நீதிமன்றத்தின் விசேட அமர்வில் நீதி அரசர்கள் முன்னிலையில் ஜனாதிபதி சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

மலேசியாவில் தனது ஆரம்ப, 2ஆம் மட்டக் கல்வியை முடித்து, பின்னர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் இரண்டு ஆண்டுகள் பல்கலைக்கழக புகுமுக வகுப்பில் கல்வி பயின்றார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் நான்கு ஆண்டுகள் சட்டமாணிப் படிப்பை மேற்கொண்டார். சட்டத்துறையில் பட்டம்பெற்று வழக்கறிஞர் தொழிலை கொழும்பில் 1971ஆம் ஆண்டு ஆரம்பித்தார்.

பிரபல வழக்கறிஞராக நீண்டகாலம் தொழில் புரிந்த (பிரதம நீதியரசராக நியமனம்பெற்றதற்கு முன்பாக) சர்வானந்தாவின் கீழே மகேந்திரன் தனது ஆரம்பக்கட்டப் பயிற்சியைப்பெற்றது ஒரு திடமான அத்திவாரத்தை வகுத்துக்கொடுத்தது.

கொழும்பிலும், புற இடங்களிலும், உயர்மட்ட நீதிமன்ற, மேல் முறையீட்டு நீதிமன்ற வழக்குகளில் மகேந்திரம் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டார். சிவில் வழக்குகளில் அவரது சிறப்பான ஆற்றலை வளர்த்துக் கொண்டார்.

இவர் அச்சுவேலி காலஞ்சென்ற திரு.திருமதி சின்னத்தம்பி (மலேசிய புகையிரத நிர்வாகி) தம்பதியரின் சிரேஸ்ட புதல்வர் ஆவார்.

☆ ☆ ☆ ☆ ☆



வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் (எம்.ஏ.) பலாங்கொடை மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திருமதி என்.டி.ஐ.அபேகுணசேகர முன்னிலையில் அண்மையில் அகில இலங்கை சமாதான நீதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தின் பரம்பரை அறங்காவலரும், சப்ரகமுவ பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர்களில் ஒருவரும், அப்பல்கலைக்கழகத்தின் மொழித்துறை முதுநிலைத் தமிழ் விரிவுரையாளரும், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி கனிஸ்ட வித்தியாலயம், மகா வித்தியாலயம், நாவலப்பிட்டி கதிரேசன் கனிஷ்ட வித்தியாலம், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, யாழ். பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பழையமாணவருமான இவர், நயினை திரு.திருமதி கனகசபாபதி கோகிலாம்பாள் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் யாழ்.வண்ணை திரு.திருமதி பாலசிங்கம் பூமணி தம்பதியின் மருமகனும் ஆவார்.

இவர் யாழ்ப்பாணம் 'ஈழநாடு' பத்திரிகையின் ஆசிரிய பீட உதவியாசிரியராயும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையின் இந்து சமய சஞ்சிகை நிகழ்சிகள் தயாரிப்பாளராயும், பகுதி நேர அறிவிப்பாளராயும், நேர்முக வர்ணனையாளராயும், யாழ் பல்கலைக் கழக தமிழ்த்துறை, சித்த மருத்துவத்துறை முன்னாள் தமிழ் விரிவுரையாளராயும், யாழ்.கல்வித் திணைக்களத்தின் வட.இலங்கைச் சங்கீத சபையின் நிர்வாகக் குழு உறுப்பினராயும், சப்பிரகமுவ பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவராயும் பணியாற்றியுள்ளார்.

இவர் தற்போது யாழ்ப்பாணம் திருநெறிய தமிழிசைச் சங்கத்தின் அமைப்பாளராயும், ரூபவாஹினி, இலங்கை வானொலி ஆகியவற்றின் கதாப்பிரசங்கக் கலைஞராகவும், அகில இலங்கை கம்பன் கழகத்தின் பட்டிமன்ற இலக்கியப் பேச்சாளராகவும் உள்ளார். (க)

☆ ☆ ☆ ☆ ☆



உதைபந்தாட்ட, கரபந்தாட்ட விளையாட்டு வீரரும் பிரபல கட்டட ஒப்பந்தகாரருமான க.பரராஜசிங்கம் இலங்கை முழுவதற்குமான சமாதான நீதிவானாக நீதி அரசியல் அமைப்பு அலுவல்கள் அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் யாழ்.நீதிமன்றத்தில் இவர் சமாதான நீதிவானகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

யாழ்ப்பாணம் நாவாலர் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட இவர் சிறந்த சமூக சேவையாளருமாவார். (க-5)

☆ ☆ ☆ ☆ ☆



யாழ்ப்பாணம் கொட்டடியை வசிப்பிடமாகக் கொண்ட செல்லையா விஜயரட்ணம் இலங்கை முழுவதற்குமான் சமாதான நீதிவானாக யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினரான இவர் யாழ்.மாநகர சபையின் உறுப்பினராகவும், சுகாதாரக் குழுவின் தலைவராகவும் இருந்து வருகிறார். கொட்டடி முத்தமிழ் சனசமூக நிலையம், கொட்டடி ஸ்ரீ மீனாட்சி சனசமூக நிலையம், தந்தை செல்வாபுரம் செல்வா சனசமூக நிலையம் ஆகியவற்றின் ஸ்தாபகர்களில் ஒருவரான இவர் சிறந்த சமூக சேவையாளரும் ஆவார். (க-5)

☆ ☆ ☆ ☆ ☆

திருமதி வாசுகி ஜெய்சங்கர் ஜப்பானிய இலங்கை கலாச்சார நட்புறவுச் சங்கத்தால் ஓவியத்துக்கென வழங்கப்படும் 'புங்கா' விருது பெற்றுள்ளார்.

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர் ஜெகநாதன் - அம்பிகாவதி தம்பதிகளின் ஏகபுத்திரி ஆவார். வேம்படி மகளிர் கல்லூரியில் கல்வி பயின்ற இவர், யாழ்.பல்கலைக்கழக உயிரியல் விஞ்ஞான பட்டதாரியும் ஆவார்.

ஓவியம், நாடக அரங்கமைப்புத் துறைகளில் ஈடுபாடு கொண்ட இவர் மட்டக்களப்பு சூரியா பெண்கள் அபிவிருத்தி நிறுவனச் செயலாளரும் ஆவார். பெண்ணியம் சம்பந்தமான மாநாடுகளுக்கென பங்களாதேஸ், நெதர்லாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கும் இவர் சென்றிருந்தார்.

மறைந்த ஓவியர் மார்க்க, செல்வி.சின்னப்பு ஆகியோரிடம் ஓவியம் பயின்ற இவர் கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளரும், கவிஞருமான ஜெய்சங்கரின் துணைவி ஆவார். (க-27)

☆ ☆ ☆ ☆ ☆



ஊர்காவற்றுறை கரம்பொன் மேற்கைப் பிறப்பிடமாகக்கொண்ட சமூக சமய சேவையாளருளரான சரவணை ஐயம்பிள்ளை தனபாலசிங்கம் வவுனியா மாவட்டபதில் நீதிவான் மு.சிற்றம்பலம் முன்னிலையில் அண்மையில் சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் ஸ்ரீ பாலசிவ சர்வதேச சமாதான நிறுவன செயலாளரும், உலகத் தமிழர் பண்பாட்டு இயக்க ஆயுட்கால உறுப்பினரும், வள்ளலார் சுத்த சன்மார்க்க சங்கச் செயலாளரும், கரம்பொன் மேற்கு ஆனந்த சனசமூக நிலையம் வேலணை மேற்கு ஸ்ரீ மீனாட்சி அம்பாள் சனசமூக நிலையம் ஆகியவற்றின் ஸ்தாபக உறுப்பினரும், வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை அபிவிருத்திச் சபை முன்னாள் செயலாளரும், தலைகாட்டி ஐக்கிய நாணய சங்க முன்னாள் பொருளாளரும், மேலைக்கரம்பொன் தேவன் கரைவைப் பிள்ளையார் கோயில் கும்பாபிஷேக மலர் வெளியீட்டாளரும் ஆவார். (க)

# புலிகளின் பெரும் தாக்குதல்கள் எந்த வேளையும் ஆரம்பமாகலாமாம்!

**விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றத் தயாராகி வருகிறார்கள் எனவும் அவர்கள் எதிர்பார்த்திருக்கும் சக்தி வாய்ந்த ஆயுதங்கள் அவர்களது கைகளுக்குக் கிட்டாத காரணத்தாலேயே அந்த முயற்சி பிற்போடப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கிறார் கட்டுரை ஆசிரியர். ஹேவாரன என்பவரால் எழுதப்பட்டு 10.06.2001 திகதிய "ஞாயிறு லங்காதீப" பத்திரிகையில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

விடுதலைப் புலிகள் கடந்த 5ஆம் திகதி கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்திருந்த இராணுவ முகாம் ஒன்றுக்கு மிக அண்மைவரை வந்து முகாமில் இருந்த படையினர் மீது தாக்குதல்களை மேற்கொண்டனர். அதற்கு முதல் நாள் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கஞ்சிக்குடியாறு என்ற இடத்தில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் முக்கிய முகாம், தாக்கி அழிக்கப்பட்ட சம்பவத்துக்கு பழிக்குப்பழி வாங்குவது போல் அமைந்த தாக்குதலாகவே கருத முடியும் என மூத்த இராணுவ அதிகாரிகள் கருதுகின்றனர்.

மட்டக்களப்பில் வாழைச்சேனையில் 223ஆவது படையணித் தலைமையகத்துக்கு ஒன்றரைக் கி.மீ. தூரத்திலுள்ள கிரான் பகுதி மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்களை மேற்கொண்டதையடுத்து, நீண்ட காலமாக வாழைச்சேனைப் பகுதியில் நிலவிய அமைதி குலைந்தது. ஆட்லறிச் சத்தத்தால் அப்பகுதி அதிர்ந்துள்ளது.

வாழைச்சேனை இராணுவ முகாமின் முன்னணிக் கண்காணிப்பு நிலைகளே விடுதலைப் புலிகளின் தாக்குதல் இலக்காக அமைந்தன. இவ்வாறான கண்காணிப்பு நிலைகள் பல அந்த முகாமைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்தன. அவற்றுள் கிரான் பக்கமாக அமைந்திருந்த கண்காணிப்பு நிலைகள் மீதே புலிகள் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

அன்றிரவு 14ஆவது தேசியப் பாதுகாப்புப் படையணியைச் சேர்ந்த 4 சிப்பாய்கள் தமது கடமையை முடித்த பின்னர், தமது கண்காணிப்பு நிலைகளைப் புதியவர்களிடம் கையளிக்கவிருந்த வேளையிலேயே இந்தத் தாக்குதல் ஆரம்பித்தது. அந்த நான்கு சிப்பாய்களுக்குத் தலைமை வகித்த கோப்ரல் தாக்குதல் ஆரம்பிக்கவே நிலத்தில் புரண்டு புரண்டு பின்னோகிச் சென்றார். அவ்வாறு சென்று கொண்டிருந்தவர் சற்றுத் தலையை நிமிர்த்திய வேளையில் காத்திருந்த புலிகள் அந்தச் சிப்பாய் மீது துப்பாக்கி வேட்டுக்களைத் தொடர்ந்தனர். அவ்வேளையில் அவரது குழுவில் இருந்த ஏனைய 3 சிப்பாய்களும் திருப்பிச் சுடவே மோதல் ஆரம்பித்தது.

அவ்வேளையில் கண்காணிப்பு நிலைகளுக்குக் கடமையை ஏற்க வந்த 4 சிப்பாய்களும் தாக்குதலில் இணைந்தனர். இதற்கிடையில் 223 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி கேணல் தவுலுகல மோதல் இடம் பெற்ற இடத்திற்கு மேலதிகப் படையினரை அனுப்பினார். இதைத் தொடர்ந்து ஆரம்பமான எறிகணைத் தாக்குதல்கள் ஆட்லறித் தாக்குதல்களாக மாறின. இந்தத் தாக்குதல்கள் சுமார் ஒரு மணித்தியாலம் இடம் பெற்றன.

இந்தத் தாக்குதல்களின் போது 6 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். 17 சிப்பாய்களும் 16 பொதுமக்களும் காயமடைந்தனர். மறுநாள் காயமடைந்திருந்த மற்றொரு சிப்பாயும் முஸ்லிம் இளைஞர் ஒருவரும் மரணம் அடைந்தனர்.

விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் கருணா, கிழக்கு மாகாணத்துக்கு வந்த பின்னர் கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதல் வேகம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளதை அவதானிக்கக் கூடியதாய் உள்ளது. இராணுவ முகாமில் இருந்து சுமார் ஒன்றரைக் கி.மீ. தூரத்தில் இருந்து தாக்கிய சம்பவமானது இதை மேலும் உறுதிப்படுத்துகிறது.

கடந்த சில வாரங்களாக, கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன. அத்துடன் இந்தத் தாக்குதல்கள் மட்டக்களப்பு மாவட்டம் வரை வியாபித்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

### யாழ்.நகர் மீது தாக்குதல் திட்டம்

கிழக்கில் நிலைமைகள் இவ்வாறு இருக்கையில், யாழ்.நகர் மீது தாக்குதல்களை மேற்கொள்வதற்கான தயார் நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளனர் என புலனாய்வுத் தகவல்கள் தெரிவிப்பதாக, இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. யாழ்ப்பாணத்தில் நாகர் கோயில் பகுதியில் முன்னணிக் காவல் அரண்களைத் தகர்த்து நுழையும் முயற்சிகள் உள்ளன எனவும், இந்த முயற்சிகள் கடந்த வருடம் ஆனையிறவு முகாம் மீதான தாக்குதலைத் தொடுப்பதற்கு முன்னர் பளைப் பகுதியைக் கைப்பற்ற மேற்கொள்ளப்பட்ட கடல் வழித்தரையிறக்கத் தாக்குதலுக்கு ஒப்பானவை எனவும் தெரிவிக்கப்படுகிறது. இத்தாக்குதலுக்கான தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன எனவும் தெரிய வருகிறது.

விடுதலைப் புலிகள் கடந்த வருடம் சாலைப் பகுதியில் இருந்து கடல் வழி தரையிறக்கத்தின் மூலம் செம்பியன்பற்றுப் பகுதியைக் கைப்பற்றிய பின்னரே பளைப் பிரதேசத்தைக் கைப்பற்றினர். அவ்வாறே நாகர் கோயில் பகுதி மீது தாக்குதல்களை மேற்கொண்டு அப்பகுதியைக் கைப்பற்றுவதற்கான தகவல்களை விடுதலைப் புலிகள் சேகரித்து வருவதாகப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### பூநகரியில் போர் ஒத்திகை

மேலும் பூநகரிப் பகுதியில் விடுதலைப் புலிகளின் போர் ஒத்திகைகள் அதிகரித்துள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது. தற்போதே 120 மி.மீ. மற்றும் 81மி.மீ. மோட்டார்கள் பூநகரிப் பகுதிக்கு நகர்த்தப்பட்டுள்ளன எனவும், பெரும் எண்ணிக்கையில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் அப்பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பூநகரி ஊடாகப் புலிகள் தாக்குதல்களை ஆரம்பித்தால் மீண்டும் அரியாலைப் பகுதிக்கு அச்சுறுத்தல் ஏற்படும் எனவும் நாகர் கோயில் பகுதியில் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்படின் பருத்தித்துறை, காங்கேசன்துறை போன்ற கரையோரப் போக்குவரத்து நிலையங்கள் மீது பாரதூரமான அச்சுறுத்தல்களை விடுதலைப் புலிகளால் ஏற்படுத்த முடியும் எனவும் இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

எனவே சமாதானப் பேச்சுக்கள் ஒரு புறம் இருப்பினும், விடுதலைப் புலிகள் யாழ்.நகரைக் கைப்பற்றும் எண்ணத்தைக் கைவிடவில்லை என்பது இந்தத் தகவல்களில் இருந்து தெளிவாகிறது. விடுதலைப் புலிகள் இதற்காக அதிசக்தி வாய்ந்த குண்டுகளுடன் கூடிய ஆயுதங்களை எதிர்பார்த்த வண்ணம் உள்ளனர் எனவும் 'அக்கினிச் சுவாலை' இராணுவ நடவடிக்கைக்கு முன்னர் இந்த ரகங்களைச் சேர்ந்த ஆயுதங்களை ஏற்றி வந்த பல படகுகள் கடலில் மூழ்கியதால் அந்த ஆயுதங்கள் அவர்கள் கைகளுக்கு எட்டவில்லை எனவும் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகள் இவ்வாறான பயங்கர ஆயுதங்களை ஆழ்கடலில் இருந்து படகுகள் மூலம் கரைக்குக் கொண்டுவருவதைத் தடுக்கும் நோக்கில் கடற்படை, விமானப்படை, இராணுவம் ஆகியன இணைந்து கிழக்குக் கடற்பரப்பில் "வர்ண கிரண" என்னும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

புலனாய்வுத் தகவல்களின்படி யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் புலிகளின் முயற்சியானது இதுவரை பிற்போடப்பட்டதற்கான காரணம், அவர்கள் எதிர்பார்த்த ஆயுதங்கள் அவர்களை வந்து சேராமையே என மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

### அதிரடிப்படை நடத்திய தாக்குதல்

விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணத் தாக்குதல்தொடர்கள் மற்றும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் அவர்களது முயற்சிகளுக்கிடையில் கிழக்கு மாகாணத்தில் விசேட பொலீஸ் அதிரடிப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது அண்மைக் காலத்தில் பொலீஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த வெற்றிகரமான நடவடிக்கை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு தசாப்தங்களாகத் தொடரும் யுத்தத்திற்கு முடிவு காண்பதற்காக மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தத்துடன் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் இன்னும் கைவிடப்படவில்லை.

விடுதலைப் புலிகளைப் பேச்சு மேசைக்கு அழைத்துவரத் தடையாய் இருப்பது அவர்கள் முன்வைத்துள்ள 3 கோரிக்கைகளே எனத் தெரிவிக்கப்படுகிறது. போர் நிறுத்தத்தை அரசு பிரகடனப்படுத்த வேண்டும் என்பது ஒரு கோரிக்கையாகும். வன்னிப் பகுதிக்கு பொருள்களைக் கொண்டு செல்ல விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட வேண்டும் என்பது மற்றொரு கோரிக்கையாகும். விடுதலைப் புலிகள் அமைப்பு மீது விதிக்கப்பட்ட தடை நீக்கப்படவேண்டும் என்பது மூன்றாவது கோரிக்கையாகும்.

## 'லங்காதீப' கட்டுரையாளர் வெளியிடும் தகவல்கள்

அரசாங்க வட்டாரத் தகவல்களின்படி போர் நிறுத்தத்திற்கும், வன்னிக்குக் கொண்டு செல்வதற்கான பொருள்கள் மீது விதிக்கப்பட்ட தடை ஆகிய இரு கோரிக்கைகளை நிறைவேற்ற அரசாங்கம் விருப்பங் கொண்டுள்ளது எனத் தெரியவருகிறது.

தமது அமைப்பு மீது விதிக்கப்பட்ட தடை நீக்கப்படவேண்டும் எனப் புலிகள் முன்வைத்த கோரிக்கையே நோர்வே சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மின் வன்னி விஜயம் தோல்வியடையக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் விடுதலைப் புலிகளைப் பேச்சு மேசைக்கு அழைத்து வர அவர்கள் மீது விதிக்கப்பட்ட தடையைத் தற்காலிகமாக நீக்குவதற்கு அரசு விருப்பம் கொண்டுள்ளது என நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### ஏவுகணைத் தாக்குதல்

இதற்கிடையில் கடந்த 7ஆம் திகதி காலை 9.00 மணியளவில் ஈட்டி போன்ற புகைக் கோடு ஒன்று வில்பத்து வனப் பகுதிக்கு மேலாக வானில் உயர்ந்து காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. சந்தேகத்திற்கிடமான இந்தப் புகைக் கோட்டை வில்பத்து சரணாலய எல்லையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொலீஸ்காரர் ஒருவர் அவதானித்துள்ளார். அந்தப் பொலீஸ்காரர் இது பற்றி பாதுகாப்பு அதிகாரிகளுக்குத் தெரிவித்துக் கொண்டிருந்த போது சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான ஏ.என்.32 ரகத்தைச் சேர்ந்த விமானம் ஒன்று அப்பகுதிக்கு மேலாக 20 ஆயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்தது. அந்த விமானம் அநுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்தது. இந்த புகைக் கோட்டைத் தான் அவதானிக்கவில்லை என விமானமோட்டி கட்டுப்பாட்டு அறைக்குத் தெரிவித்துள்ளார். தனது விமானத்தில் பொருத்தப்பட்டிருந்த தானியங்கி ஏவுகணை எதிர்ப்புக் கருவியும் செயற்பட்டிருக்கவில்லை எனவும் விமானமோட்டி தெரிவித்திருந்தார்.

**தமிழில்: கஜனி**

இந்தத் தகவல்களின்படி இது ஓர் ஏவுகணைத் தாக்குதலாக இருக்கலாம் என சந்தேகிக்க இடம் இருப்பதாகவும் விமானப் படையினர் இது தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. கடந்த வருடமும் வில்பத்து சரணாலயப் பகுதிக்கு மேலாக உயர் வானில் பறந்து கொண்டிருந்த வேளையில் சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான 'ஏ.என்.32 ரக' விமானம் ஒன்று திடீரெனத் தீப் பற்றி தலாவ பகுதியில் விழுந்து நொருங்கியது. முதலில் இந்த விபத்தை, தொழில்நுட்பக் கோளாறு காரணமாக ஏற்பட்டது என நம்பிய போதிலும் பின்னர் விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலால் ஏற்பட்ட விபத்து என தீர்மானிக்கப் பட்டது. அந்த விமானம் யாழ்ப்பாணத்தில் இருந்து அநுராதபுரம் நோக்கிப் பறந்து கொண்டிருந்தது.

சிலவேளை கடந்த வருட மாவீரர் தினத்தன்று மனிதக் குண்டு மூலம் அமைச்சர் உட்பட 25 முக்கியஸ்தர்களைப் பலி கொண்டது போல விடுதலைப் புலிகள் இம்முறை மாவீரர் தினத்தன்று விமானத்தின் மீது ஏவுகணையை ஏவி பேரழிவை ஏற்படுத்த இலக்கு வைத்திருக்கவும் கூடும்.

☆ ☆ ☆

---

**வட - கிழக்கு முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் அறிக்கை**

# குடிசன மதிப்பீடு என்ற 'மாயாஜாலம்' மூலம் தமிழ் பேசும் மக்களின் தாயகத்தை சிதைக்கச் சதி!

## வடக்கிலும் கிழக்கிலும் சிங்களவரின் இன விகிதாசாரத்தை அதிகரித்துக் காட்டச் சூழ்ச்சி!

மட்டக்களப்பு, ஜுன்17

அடுத்த மாதம் நடைபெறவுள்ள குடிசன மதிப்பீடு வடக்கு - கிழக்கில் நிரந்தரமாக வாழும் தமிழ் முஸ்லிம் மக்களின் தாயகத்தைச் சிதைத்து சிங்களப் பெரும்பான்மை இன மக்களின் விகிதாசாரத்தை வடக்கு - கிழக்கில் அதிகரித்துக் காட்டுவதற்கான ஒரு முயற்சியே. இவ்வாறு வட - கிழக்கு முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஏ.யூ.எல்.எம்.ஹாரிஸ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட தமிழர்களின விகிதாசாரமும் முஸ்லிம் மக்களின் விகிதாசாரமும் குறைக்கப்பட்டு சிங்கள இன மக்கள் அங்கு கூடுதலாக வாழ்வதாகக் காட்டும் திட்டமிட்ட மறைமுக நடவடிக்கை குடிசனத்தொகை மதிப்பு அட்டவணையில் கையாளப்பட்டுள்ளதை தமிழ் பேசும் மக்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும் என்றும் அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் ஹாரிஸ் தெரிவித்திருப்பதாவது:-

திருமலை, மட்டக்களப்பு, வன்னி மாவட்ட தமிழ் பேசும் மக்களின் விகிதாசாரமும் குறைந்து போகும் ஆபத்து இக்குடிசனத்தொகை மதிப்பு முறையில் காணப்படுகிறது.

கணக்கெடுப்பு மேற்கொள்ளும் போது குடித்தனத் தலைவராக குறித்த இடத்தில் வழமையாக வசிப்பவரே கொள்ளப்படுவார். உத்தியோகத்தின் நிமித்தம், வியாபார அல்லது வேறு காரணங்களினால் வெளி மாவட்டங்களில் வசிப்பவர்கள் குடித்தனத் தலைவராக கணக்கெடுக்கப்படக் கூடாது என்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. எனவே ஒருவர் எங்கு வழமையாக வசிக்கிறாரோ அந்த மாவட்டத்திலேயே கணக்கெடுக்கப்படுவார்.

போர் காரணமாக இடம் பெயர்ந்து வெளி மாவட்டங்களில் தங்கியுள்ள தமிழ் பேசும் மக்கள் தம்து சொந்த மாவட்டத்தில் வழமையாக வசிப்பவராகக் கருதப்பட மாட்டார். இதன் காரணமாக பெருந்தொகையான தமிழ் பேசும் மக்கள் வடக்கு - கிழக்கில் வாழ்வதாகக் கண்கெடுக்கப்படமாட்டார்கள். இது வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் தமிழ்பேசும் மக்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் சதி நடவடிக்கை ஆகும்.

### வழமையாக வசிப்போர் பட்டியலில் படையினர்

இதேவேளை வழமையாக வசிப்போர் என்ற ரீதியில் வடக்கு - கிழக்கில் கடமை புரியும் முப்படையினரும் பொலஸாரும் கணக்கெடுககப்படுவார்கள். ஏனைய சிங்கள உத்தியோகத்தர்களும் உள்ளடக் கப்படும் போது சிங்களவர்களின் விகிதாசாரமும் அதிகரிக்கப்போகிறது.

எந்தவித சப்தமுமில்லாது புள்ளி விவரத் திணைக்களத்தின் ஊடாக குடிசனத் தொகை மதிப்புப் பத்திரத்தில் 'மாயாஜாலம்' காட்டி மேற்கொள்ளும் சிங்கள இன உட்புகுத்தல் பின்வரும் பாதிப்புக்களை ஏற்படுத்தும்.

☆ அம்பாறை மாவட்டத்தில் உடனடியாக சிங்களவர்களின் விகிதாசாரம் அதிகரித்து முஸ்லிம்கள் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

☆ யாழ். மாவட்டத்தில் தமிழ் பேசுவோர் தொகை சரிபாதியாகக் குறைக்கப்பட்டு சிங்கள இனத்தின் விகிதாசாரம் உத்தியோகபூர்வமாக அதிகரித்துக் காணப்படும்.

☆ யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களில் நாடாளுமன்ற, உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் தொகை குறைக்கப்படலாம்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

### அமைச்சருக்கு எதிரான

# நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு சபாநாயகர் அனுமதி வழங்கினார்

கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் மகிபால ஹேரத்துக்கு எதிராக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க அனுமதி வழங்கியுள்ளார்.

ஐ.தே.கட்சி, ஜே.வி.பி., தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தப் பிரேரணையை சமர்ப்பித்திருந்தனர்.

சபாநாயகரின் அனுமதி கிடைத்ததை அடுத்து மேற்படி பிரேரணை நாளை மறுதினம் திங்கட்கிழமைக்குரிய நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் திகதி குறிப்பிடப்படாத பிரேரணையாக இடம்பெற்றுள்ளது.

மாவனல்லப் பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கும், அமைச்சர் மகிபால ஹேரத்துக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரிவித்தே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (உ-7)

## அம்பாறையில் 3 தமிழர்கள் கைது

மட்டக்களப்பு,ஜூன்17

அம்பாறை மாவட்ட எல்லைக் கிராமங்களில் ஒன்றான மாளையர் பட்டிக்கு வியாழக்கிழமை மாடு மேய்க்கச் சென்ற மூன்று தமிழ் இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் - 13 ஆம் கொலனி வாசிகளான பாலசுந்தரம் தவராசா(வயது 28), சாமித்தம்பி காண்டீபன் (வயது 18), பிள்ளையார் தம்பி பவளசிங்கம் (வயது 20) ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதே வேளை -

மேற்படி மூன்று இளைஞர்களும் உகணை பொலீஸ் நிலையத்தில் விசாரணைகளுக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.என்று மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. செல்வராஜாவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-7-9)

## கிழக்கின் பெரும் மோதல் இன்று திருமலையில்

திருகோணமலை,ஜூன்17

திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கும், மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்துக்கும் இடையே வருடாந்தம் நடைபெறும் மாபெரும் கிரிக்கெட் போட்டி இன்று ஞாயிறு காலை திருமலையில் நடைபெறும். "பற்றல் ஒவ் தி கோல்ட்ஸ்" BATTLE OF THE GOLDS எனப் பெயரிடப்பட்ட இப்போட்டி ஒன்பதாவது தடவையாக நடைபெறுகின்றது.

1993 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட இப்போட்டி 95, 97, 99 ஆம் வருடங்களில் திருகோணமலையிலும், 94, 96, 98, 2000 ஆம் வருடங்களில் மட்டக்களப்பிலும் நடைபெற்று வந்தது.

திருகோணமலையில் போட்டிகள் நடைபெற்றபோது ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அணியும், மட்டக்களப்பில் போட்டிகள் நடைபெற்றபோது சிவானந்த வித்தியாலயமும் வெற்றிபெற்று வந்தன. இந்த மரபு கடந்த வருடம் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அணியினரால் மீறப்பட்டு மட்டக்களப்பு மண்ணில் 2000 வருடம் நடைபெற்ற போட்டியில் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அணியினர் வெற்றிபெற்றனர்.

40 ஓவர்கள் கொண்டதான இப்போட்டி கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் முதலாவது பெரும் போட்டி என்ற பெருமையையும் பெற்றுக்கொள்கின்றது. (அ-145)

## குடிசன....

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

☆ புதிய இன விகிதாசாரத்தின் கீழ் மேலும் திட்டமிட்ட குடியேற்றங்களுக்கு இடமளிக்கப்படலாம்.

☆ இன விகிதாசாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் காணிப்பகிர்வு, உத்தியோகம், அபிவிருத்தி உட்பட சகல விடயங்களிலும் தமிழ் பேசும் மக்களின் சந்தர்ப்பம் குறைக்கப்படும்.

☆ எல்லாவற்றிற்கும் மேலாக வடக்கு - கிழக்கு தமிழர்களின் தாயகம் என்ற கருத்தியல் உடைக்கப்பட்டு சிங்களவர்களும் கணிசமாக உள்ளனர் என்றும் நிலை நிறுத்தப்படலாம்.

எனவே சனத்தொகைக் கணிப்பீடு தமிழ் பேசும் மக்களின் தாயகத்தைச் சிதைப்பதற்கான சிங்கள இனவாத சதியாகும். அனைத்துத் தரப்பும் இதற்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## 'எஞ்சினு'க்குள் அகப்பட்டுக் காயம்

தென்மராட்சி,ஜூன்17

இயங்கிக் கொண்டிருந்த 'எஞ்சின்' அருகில் சென்றவரின் சாரம் அதற்குள் அகப்பட்டதால் படு காயங்களுக்கு இலக்கான ஒருவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உடுப்பிட்டி சமரபாகு என்னும் இடத்தில் வியாழனன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில், உடுப்பிட்டி சந்தை வீதியைச் சேர்ந்த கோபால் சரத் (வயது41) என்னும் "வெல்டிங்" வேலை செய்பவரே படுகாயமடைந்தவராவார். (அ-117)

**Fourteenth Year Remeberance**

(17th June)

**Lion A.S.T.CHARI**

(Principal Emeritus - Manipay Hindu College)

Another year without you,
No words could ever say,
How much we adored you,
With every passing day.

The memories you have left with us,
Is remembered quietly every day.

Very affectionately remembered
by Wife, Children and Friends.

(89056)

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



மண்ணில் 05 - 01 - 1909

விண்ணில் 27 - 06 - 2000

பேரறிவாளர், முத்தமிழ் வித்தகர்
சிவஞானசாகரம்

**அமரர் கி.துரைசுவாமி அவர்கள்**

(ஓய்வு பெற்ற அதிபர்)

ஓராண்டு ஓடிமறைந்தாலும் உள்ளத்தில் உறையும் ஐயனே!
என்றும் தமது நினைவில்

வட்டு.மேற்கு,
வட்டுக்கோட்டை.

(C/17111)

மனைவி,
மகன்.


றொபின் லெமன் றொபின் லெமன் றொபின் லெமன் றொபின் லெமன் றொபின் லெமன்

Robin Lemon

வாடிக்கையாளர்களுக்கு.....

நற்செய்தி!

3 WRAPPERS




3 றொபின் லெமன் சவர்க்கார உறைகளை

உங்கள் வியாபாரியிடம் கொடுத்து

ஒரு சவர்க்காரக் கட்டியை

இலவசமாகப் பெறுங்கள்!

வெண்மையான சலவைக்கு

லெமன் வாசனை கலந்த

"றொபின் சோப்"பையே உபயோகியுங்கள்

Robin Lemon Robin Lemon Robin Lemon

(89059)

றொபின் லெமன் றொபின் லெமன் றொபின் லெமன் றொபின் லெமன் றொபின் லெமன்



# சுற்றுலாப் பயணிகளை கவரும் நெடுந்தீவு

நற்பயனடைவதற்காக உல்லாச யாத்திரைப்(Picnic) பழக்கம் மக்களிடையே அதிகரித்த வண்ணமே உள்ளது. உல்லாசப் பயணிகள் (Picnickers) பல்வித சரீர, உளத்தாக்கங்களில் இருந்து விடுபட, ஆண்டு தோறும் சில நாள்களை உல்லாசமாகவும், அமைதியாகவும் கழித்தற் பொருட்டுத் தனியாகவோ, குடும்பமாகவோ, கூட்டாகவோ செல்கின்றனர். இவர்கள் அமைதியான, கைத்தொழில இயந்திரமயமற்ற, போக்குவரத்து, மக்கள் அடர்த்தியற்ற இடங்களை நாடுகின்றனர்.

இந்த வகையில் சுற்றுலாப் பயணிகள் தொழில் (Tourist Industry) தோற்றம் பெற்றுள்ளது. இதனால், இம்



ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்திய புறாக்கூண்டு.

மக்களின் உடல், உளச் சௌக்கியம் புதிய தென்போடு, புதிய, புதிய இடங்களையும் மக்களையும் காணக் கூடியதாகவும் அவ்விடங்களின் சுவாத்தியத்தை அனுபவிக்கக் கூடியதாகவும் உள்ளனர்.

நெடுந்தீவு இலங்கையின் வடபுல ஆழ் கடல் மத்தியில் மிகவும் ஆரோக்கியமான (Salubrious) சுவாத்தியத்தைக் கொண்ட தீவாகவுள்ளது. இது ஒரு சுற்றுலாப் பயணிகளின், அதி உன்னத அறிவியல் சார்ந்த இடமாகவும் அனைவரையும் கவரும் தன்மையினைக் கொண்ட இடமாகவும் மிளிர்கின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் இத்தீவின் அமைப்பினைக் கருத்திற் கொண்டு, இத் தீவினுக்கு இற்றை வரை அநேகர் வரத் தயங்கியுள்ளனர். இத்தீவின் செழுமையும், குளிர்மையும் யாவரையும் கவரத்தக்கனவாக உள்ளன.

யாழ்ப்பாண நகரில் இருந்து 20 'மைல்' தொலைவிலுள்ள குறிகாட்டுவான் துறைமுகத்திற்குப் புங்குடுதீவு ஊடாகச் சென்று, அங்கிருந்து 7 'மைல்' தொலைவிலுள்ள நெடுந்தீவுககு மிகவும் பாதுகாப்பான தன்மை கொண்ட இயந்திரப்படகு (Motor Boat) மூலம் செல்லலாம். இச் சேவை நாள்தோறும் இரு தடவைகள் இடம் பெறுகின்றன. காற்று, மழை, நீரோட்டம் தணிந்த நாள்களில் மிகவும் இன்பகரமான கடற்பயணமாகவே (Voyage) இப்பயணம் அமைகின்றது.

இங்கு சூரிய உதயமும், அதன் அஸ்தமனமும துல்லியமான கண் கொள்ளாக் காட்சியாகும். சந்திரன் உதயமும் அவ்வண்ணமே காணக் கூடியதாகவுள்ளது. இங்கு வெயிலில் காய்ந்து, கடலில் நீராடலாம். அழகிய பாதுகாப்பான வடக்கு மணல் பகுதி (North Sea Beach) உள்ளது. துறைமுகத்தை அண்மித்த பகுதியில், அரசினர் விடுதி (Govt. Guest House - Maddam) உண்டு. வேறு உணவுச் சாலைகளும்; விருமபிய உணவு தயாரித்துக் கொடுப்பவர்களும் இங்குள்ளனர்.

இத்தீவின் உள்ளே செல்வதற்குத் தகுந்த "தார்" வீதி ஒன்று கிழக்கே தொட்டாரத்தில் இருந்து, மேற்கே பனங்காணி வரை உண்டு. மேலும் சிறிய 'தார்' வீதிகளும், இயற்கையான வீதிகளும் (Natural Roads) உண்டு. அரசினர் 'பஸ்' தரமான வீதிகளில் செல்கின்றது. மாட்டு வண்டில்களின் உதவியுடன் எங்கும் சௌகரியமாக பயணம் செய்யலாம்.

தீவின் வடபகுதி பனை, தென்னை அடர்த்தியாகவுள்ள இடமாகவும்; தென் பகுதி திறந்த புல் வெளியாகவும் (An open Pasture) உள்ளன. கேணிகள், கிணறுகள், குளங்கள், இடையிடையே தென்படும். இங்கு மாடுகள், ஆடுகள், குதிரைகள் கூட்டம் கூட்டமாக காணக்கூடியதாகவுள்ளன.

## வரலாறு

இத்தீவின் சரிதையை நோக்குமிடத்து, 15ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலப்பகுதியில் சில குறு நில மன்னர்களின் தளபதிகளால் இதன் நிர்வாகம் அடங்கியுள்ளமை கண்கூடு. வீமன், வெடியரசன் கோட்டைகள மண்மேடுகளாகவேயுள்ளன.

15ஆம் நூற்றாண்டின் பின் 1505 தொடககம் 1947வரை 442 வருடங்கள் இலங்கையை ஆண்ட மேலைத்தேயத்தவர்கள் இத்தீவில் பல்வித மாற்றங்களை ஏற்படுத்தினர். போர்த்துக்கேயர் கோட்டை கட்டினர். ஒல்லாந்தர் குதிரை வளர்த்தார்கள். இதன் பொருட்டுலாயங்கள் (Stable), கிணறுகள், தொட்டிகள், வாய்க்கால்கள் கட்டினார்கள். மருத்துவமனை (தற்போதைய தூண்காலை) கடற்கரை காட்டும் தூண் (Guide Tower- Queen Tower) 'குயுந்தா', உதவி அரசாங்க அதிபர் பணிமனை, தனி உச்சி கொண்ட இரு தனி அறைகள், புறாக கூடு (Dove Cot), 'நோளன்' வாய்க் கால் (Nolan Channel) ஆகியவை ஒல்லாந்தரின் நிர்வாகத்திற்குச் சான்று பகர்கின்றன.

நெடுந்தீவின் இட அமைவு




ஆண்டு தோறும் ஐப்பசி முதல் பங்குனி வரை புவியின் வட அரைக் கோளம் குளிர் கொண்டுள்ளமையால், அவ் விடங்களிலுள்ள பறவை இனங்கள் வெப்பவலயம் நோக்கி வருகின்றன. அவைகளுள் சைபீரியா, இமாலயம், நீலகிரி போன்ற இடங்களிலிருந்து வாத்துககள், கூழக்கிடா, பவளக்கால் நாரைகள் மற்றும் இவை போன்ற பறவை இனங்கள் கூட்டம் கூட்டமாக வழமையாக வந்து செல்கின்றன. மேலும் இவைகள் கண்ணுக்குக் காட்சியாகவும் அறிவுக்கு விருந்தாகவும் உள்ளன.

மேலும் உயர்ந்த, அகன்ற ஓர் அடியில் (Single Stem) உண்டான பெருவிருட்சங்கள் பல உண்டு. இவற்றுள் ஆலமரம், 'பெருக்கு' மரம், அரசமரம் இன்னும் இவை போன்ற பெரிய விருட்சங்களும் உண்டு. இவ் விடங்கள் பறவைகளின் சரணாலயங்களாக (Bird Sanctuary) உள்ளன.



காலம் உருக்குலைந்த போதும், கம்பீரம் குலையாத மீகாமன் கோட்டை.

*(படங்கள் உதவி: கலாசார உத்தியோகத்தர்)*



நெடுந்தீவுக்கே உரித்தான பிரத்தியேக கல் மதில் ஒன்று

*நெடுந்தீவு*
**சு.வி.சுப்பிரமணியம்.**

மேற்கூறியவை யாவும் இத்தீவு மக்களின் தொன்மைப் பண்பினையும் விருந்தோம்பல் முறைமைகளையும் சான்று பகர்கின்றன. இத்தீவின் தொனமை விழுமியங்களை யாவரும் அறிய வேண்டுமென்பதே இங்குள்ளோரின் ஆவலாகும்.

மேலும் தற்போதைய கடல், தரைப்பயணங்களின் சௌகரியங்களைக் கருத்திற் கொண்டு சுற்றுலாப்பயணிகளும; உல்லாசப்பயணிகளும வருகை தந்து, நற்பயன் பெறக்கூடிய இடம் நெடுந்தீவாகும். ✷

---

## யாரொடு நோவது யார்க்கெடுத் துரைப்பது....!

(தேசம் ஞானங்கல்வி ஈசன் பூசையெல்லாம்..... என்றமெட்டு)

கொழும்புப் பெற்றோல் வந்து
        கொஞ்ச நாட் களிலே
குதத்தினில் முடிந்து விடும் - பெற்றோல்
        குதத்தினில் முடிந்து விடும்.
கொழுந்தரின் கடை யிலே
        கொழுத்த விலை யிலே
குறை வின்றியே கிடைக்கும் - பெற்றோல்
        குறை வின்றியே கிடைக்கும்

கடிதத் திற் கொட்டிட
        கந்தோ ரில் முத்திரை
கன நாள்கள் கிடைப்பதில்லை - இங்கே
        கன நாள்கள் கிடைப்பதில்லை
குஞ்சரின் கடை யிலே
        கூடுதல் விலை யிலே
குறை வின்றியே கிடைக்கும் - முத்திரைகள்
        குறை வின்றியே கிடைக்கும்

கொழும் புக்குக் கப்பல்
        பழு தின்றி யோடினால்
வாங்கலாம் பொருள் களையே - கடைகளில்
        வாங்கலாம் பொருள் களையே
உதயனே நீ கப்பல்
        ஓடாது என்றி ட்டால்
பார்க்கவும் முடி யாதே - பொருள்களை
        கேட் கவும் முடியாதே!

அடுத்திரு தினங் களில்
        அறுபதை எழு பதுக்கு
அனை வரும் வாங்கிடலாம் - இங்கே
        அனைவரும் வாங்கி டலாம்
யாரொடு நோ வது
        யார்க் கெடுத் துரைப்பது?
நம் விதி இதுவன்றோ - தமிழ்
        மண் விதி எமதன்றோ!

- கவிமணி க.ஆனந்தராசா.

---

## புகைக்கும் உன்னையே புகைகுடிக்கும் புரிந்துகொள்வாயா? நண்பனே!

புகைத்துக் கொண்டேயிருந்த 'புனிதன்'
        ~ புஷ்வாணமாகி விட்டான்....
புன்னகையுடன் அவன் அருகே வாழ்ந்த 'புனிதா'....
        புதையலெனப் போற்றிய தன் கர்ப்பத்தை
புவிதனில் இழந்து விட்டாள்.... இடைநடுவே...
        வெள்ளையன் கொண்டு வந்த நாகரிகம்
வெண்சுருட்டாக, சுருட்டாக.... கொள்ளையடிக்கிறது
        ~ நம்மவர் உயிர்களை
சிகரெட்டில் கதிரியக்கத் திண்மங்களும் உண்டென
        ~ ஆய்வுகள் பறைசாற்றுகின்றன
சிந்தனையில் கொள்வாயா? என்னருமை நண்பனே!
        ஒரு சிகரெட் உன்வாழ்நாளில் ஐந்தரை
        ~ நிமிடங்களைக்குறைக்க
ஒன்றுமேயறியாத 'புனிதா'வையும் தவிக்க வைத்துச்
        ~ சென்று விட்டாயே!
உடலில் உற்சாகத்தை உணர்ந்த நண்பனே!
        ~ சில நிமிட இடைவெளியில்
உணர்விழந்து, உருக்குலைந்து போகவைக்கும்
        ~ 'சிகரெட்' தானடா உன் நண்பனா?
கள்ளமில்லா வெள்ளை மனதுடன் உன் அருகில்
        ~ கனவு கண்ட
கயல்விழியாள் புனிதாவும் தொடர்ந்து இருமுகிறாள்....
        ~ கர்ப்பத்தையும் இழந்த நிலையில்
'ரஜனியின்' சிங்காரக் கையசைவில் சிகரெட்
        ~ வாயில் விழும் அழகை
ரசிகர்கள் வியந்தே பார்த்து....
        கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி போல்
கரங்களில் சிகரெட்டை அழகுற வளைத்து
        ~ உதட்டில் செருக....
குருதியமுக்கம் ஏற.... குதிப்படங்க
        குருதிக் குழாயில் கொலஸ்திரோல் படிய
        ~ இதயம் துடிப்படங்க....
நிக்கொட்டின் மெதுவாய் இரைப்பை அமிலத்தை மாற்ற
        நிதமும் வயிற்றைப் பிடித்து நீ முகை....
ரசித்து வளையமூதிய ரசிகன்.... உன் சுவாசக்குழாயில்
        ~ ரார் படிய
ரணமான சுவாசப்பையும் புற்று நோயை அரவணைக்க....
        வேண்டுமா? இந்நிலை வேண்டுமா?
வேதனையை விலை கொடுத்துப் பெற வேண்டுமா?
        புகைத்தல் தடைநாளாம் இந்நன்னாளில்
புதியதோர் சகாப்தம் படைத்திடுவோம்
        மூலை முடுக்கெல்லாம் சென்றிடுவோம்
மூளையை மழுங்கடிக்கும் சிகரெட்டை ஒழித்திடுவோம்!
புகைத்தலுக்கு அடிமையானவர்களை புவிதனில் அழகுற
        ~ வாழ் விட....
புத்தம் புதிய நடைமுறைகளைப் பரப்பிடுவோம்!
        'புகைக்கும் உன்னையே புகைகுடிக்கும்' புரிந்து
        ~ கொண்டாயா நண்பனே!
புதுயுகம் படைத்திட நீயும் என்னுடன் வருவாயா?

- திருமதி சிவம்.சுப்பிரமணியம்.



அராலி - ஆவரம்பிட்டி
அருள்மிகு
ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய
வருடாந்த நவோத்திர சகஸ்ர
மகா சங்காபிஷேகப் பெருவிழா

அம்பிகை அடியார்களே!
ந'கழும் விஷு வருடம் ஆனித் திங்கள் 4ஆம் நாள் (18.06.2001) திங்கட்கிழமை அம்பிகைக்கு மகா சங்காபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. நாளை (17.06.2001) ஞாயிற்றுக்கிழமை மாலை 2-00 மணியளவில் விக்னேஸ்வர பூசையுடன் கிரியைகள் ஆரம்பமாகும். 18.06.2001 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8-00 மணிக்கு சங்கு பூஜையுடன் ஆரம்பமாகி அபிஷேகம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நண்பகல் அன்னதானமும் நடைபெறும்.

இரவு நிகழ்ச்சிகள்

பிரத்தியேகமாக அமைக்கப்பெற்ற மேடையில்
★ "சைவசமயப் பண்பாடுகள" பற்றி
வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவரும், ஈ.பி.டி.பியின்
யாழ்.மாவட்ட இந்து சமய வீவகாரப் பொறுப்பாளரும்
வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளருமான
திரு.ந.திரிலோகநாதன்
சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

★ ஈழத்து அனைத்து நாதஸ்வர, தவில் வித்துவான்களின் ஆதரவில் இன்னிசை கானமழை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

★ ஈழ நல்லூர் "அருணா இசைக்குழுவின்" இன்னிசைக் கச்சேரி இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து விஷேசமாக
அலங்கரிக்கப்பெற்ற பூந்தண்டிகையில் அம்பாள்
வீதியுலா வரும் கண்கொள்ளாக்காட்சியும் இடம்பெறும்.

(89095) ~ சங்காபிஷேகக் குழுவினர்.



மஹோற்சவ விஞ்ஞாபனம்

யாழ்/வண்/வட கிழக்கு கலட்டி அருள்மிகு
ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

கொடியேற்றம் :- நாளை (18-06-2001) திங்கட்கிழமை காலை 10.00 மணி
சப்பரம் :- 25-06-2001 திங்கள் மாலை 5.30 மணி
இரதோற்சவம் :- 26-06-2001 செவ்வாய் காலை 9:30 மணி
தீர்த்தோற்சவம் :- 27-06-2001 புதன் முற்பகல் 10.30 மணி

மஹோற்சவ பிரதம குரு
சிவஸ்ரீ.வே.பாலச்சந்திரக் குருக்கள்
(பிரதம குரு வல்வெட்டி வேவில் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்)
மங்கள இசை :- செல்வன் T.விமலன் குழுவினர்,
நாச்சிமார் கோயிலடி

(89138) - தேவஸ்தானம்.



இயந்திர இயக்குநர் பயிற்சி

OFF SET மற்றும் LETTER PRESS
இயந்திரத்தில் இயக்குநர் பயிற்சிக்கு
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

☆ பயிற்சிக் காலத்தில் கணிசமான வேதனம் வழங்கப்படும்.
☆ விண்ணப்பதாரிகள் நாற்பது வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும்.
☆ தகுதியானோர் குறைந்தது இரண்டு வருட காலத்துக்கு நிறுவனத்தில் பணி செய்வதை உறுதிப்படுத்துபவராக இருக்க வேண்டும்.
☆ இரவு வேலைக்கும் சமுகம் தரக்கூடியவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்.

அலுவலக நேரத்தில் நேரில் சமுகம் தரவும்.

(C-17122) முகாமையாளர்,
உதயன், யாழ்ப்பாணம்.



பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.வைரவி கடைச்சல் தொழிலக உரிமையாளரும்,
எமது மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரியவருமான
திரு. விநாயகமூர்த்தி தவரூபன்

அவர்கள் தாவடி புளியடி வைரவர் ஆலயத்துக்கு புதிய சகடை செய்து கொடுத்தமைக்காக, அவருக்கு "விஸ்வப் பிரம்மஸ்ரீ" என்னும் பட்டத்தை 'சிற்பகலா சிரோன்மணி' சி.அமரசிங்கம் சூட்டிக் கௌரவிக்கின்றார்.

எனவே இச்சந்தர்ப்பத்தில் நாங்களும் திரு.விநாயகமூர்த்தி தவரூபன் அவர்களுக்கு "தொழில்நுட்ப இளைய தளபதி" என்ற பட்டத்தைச் சூட்டி அவரைப் பல்கலைகளும்பெற்று, நீசூழி காலம் சிறப்போடு வாழ்க என வாழ்த்துகின்றோம்.

(89125) வடமராட்சி - அன்புள்ளங்கள்.


## ஜனாதிபதியின் பதில் செயலாளர்

ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டி லண்டன் சென்றிருப்பதை அடுத்து -

பதில் செயலாளராக டபிள்யூ.ஏ. கருணாரத்ன நேற்று முன்தினம் பதவியேற்றுள்ளார்.

பாலபட்டபெண்டி இலங்கை திரும்பாமல் லண்டனிலேயே தங்குவார் என வெகுஜனத் தொடர்புசாதனங்களில் வெளியான செய்திகளை மறுத்துத் தகவல் திணைக்களம் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு சென்றுள்ள அவர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு திரும்புவார் என்றும் அந்தக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## கட்டுநாயக்காவில் ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு,ஜூன்17

கட்டுநாயக்க விமானநிலையத்துக்கு அருகில் உள்ள வீடு ஒன்றில் இருந்து கடந்த வியாழக்கிழமை குண்டுகள் மற்றும் ஆயுத தளபாடங்களைப் பொலீஸார் மீட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

விமானநிலையத்தைத் தாக்குவதற்காக அல்லது விமானநிலையத்துக்குவரும் பிரமுகர்களைக் கொலை செய்வதற்காக இந்த ஆயுதங்கள் அங்கு கொண்டுவரப்பட்டிருக்கக் கூடும் எனப் பொலீஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக விசாரணை மேற்கொண்ட பொலீஸார் சிங்கள இளைஞர் ஒருவரைக் கைது செய்துள்ளனர். அந்த வீட்டில் இந்த ஆயுதங்களை வைத்ததாகக் கூறப்படும் சூத்திரதாரியைப் பொலீஸார் தேடி வருகின்றனர். (உ-3)

## தெல்லிப்பழை வைரவர் ஆலயத்தில் நேற்று மிருகபலி

தெல்லிப்பழை எட்டாம் கட்டையில் அமைந்துள்ள பேரம்பல வைரவர் ஆலயத்தில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட ஆடுகளும், 40க்கும் மேற்பட்ட கோழிகளும் நேற்றுப் பலியிடப்பட்டன.

காலைமுதல் கடாக்கள் மாலைகள் மற்றும் பவுண் சங்கிலிகள் போடப்பட்டு "லான்ட்மாஸ்ரர்" வாகனங்களில் ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டன.

சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள், சிறுவர்கள் உட்படப் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். பெண்கள் கோழிகள் பலியிடக் கொண்டுவந்திருந்தமையையும், அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இதேநேரம் அதிகாலைமுதல் பொங்கல் மற்றும் முறுக்கு, பால் றொட்டி, வடை போன்ற பலகாரங்களைப் படைத்தும் பல குடும்பங்கள் வழிபட்டதைப் பார்க்கக்கூடியதாக இருந்தது. (ஒ-86)

## மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன்17

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் கடந்து மாதம் 20ஆம் திகதி நடத்தப்பட்ட கண் பரிசோதனையின்போது தெரிவு செய்யப்பட்ட 300 பேருக்கான இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் நடைபெறுகிறது. (ஒ-4)

## இலவச கணித வகுப்புகள்

புன்னாலைக்கட்டுவன்,ஜூன்17

புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை சித்திவிநாயகர் ஆலய முன்றலில், ஜி.சீ.ஈ. சாதாரணதர வகுப்பு மாணவர்களுக்கான இலவச கணித வகுப்புகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிமுதல் ஆரம்பமாகி, பிரதி சனி, ஞாயிறு தினங்களில் இடம்பெற உள்ளன.

ஆர்வமுள்ள மாணவர்கள் அனைவரும் இந்த வகுப்புகளில் கலந்து கொள்ளலாம். (ஒ-133)

## பசுவதை; இருவர் கைது!

தாவடி வயல்வெளிப் பகுதியில் இறைச்சிக்காகப் பசுமாட்டைக் கொன்ற இரு நபர்களை கடந்த வாரம் மானிப்பாய்ப் பொலீஸார் கைதுசெய்தனர்.

அனுமதியின்றி வெட்டப்பட்ட மாட்டிறைச்சியை விற்பனைக்காகக் கொண்டு சென்றபோதே பொலீஸாரிடம் அவர்கள் அகப்பட்டுள்ளனர். (ஒ-185)

# சித்தன்கேணி ஆலயத்தினர் நடத்திய சமயப் போட்டிகளின் முடிவுகள்

## இரதோற்சவ நாளில் பரிசளிப்பு நிகழ்வு

வலிமேற்கு,ஜூன்16

மாணவர்கள் மத்தியில் இந்து சமயத்தின் அறிவையும் சமயத்தின் முக்கியத்துவத்தையும் வளர்க்கும் நோக்கத்தில் சித்தனகேணி சிவகாமி சமேத சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தினர் அண்மையில் பலதரப்பட்ட சமயப் போட்டிகளை வலிகாமம் மேற்குப் பிரதேச மாணவர்கள் மத்தியில் நடத்தி இருந்தனர்.

இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு இம்மாதம் 27ஆம் திகதி நடைபெறவுள்ள ஆலய இரதோற்சவத்தின் போது பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

'ஏ' பிரிவு, 'பீ' பிரிவு, 'சீ' பிரிவு என மூன்று பிரிவுகளாக நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

### பண்ணிசைப்போட்டி

*'ஏ' பிரிவு:-*
முதலாமிடம்:-எஸ்.சுபகிரி (சித்தன்கேணி),இரண்டாமிடம்:-ஜெ.மயூரா (சித்தன்கேணி), மூன்றாமிடம்:-த.சிந்தியா (சித்தன்கேணி)

*'பீ' பிரிவு:-*
முதலாமிடம்:- ந.கோகுலன் (சித்தன்கேணி),இரண்டாமிடம்:-ச.விஸ்ணுப்பிரியா (சித்தன்கேணி), மூன்றாமிடம்:-அ.திவ்வியராஜ் (சங்கானை)

*'சீ' பிரிவு:-*
முதலாமிடம்:-வி.ராகவன் (சங்கானை), இரண்டாமிடம்:-உ.ராஜாராம் (சுழிபுரம்), மூன்றாமிடம்:-த.கணேசவேல் (சித்தன்கேணி)

### நடனப்போட்டி

*'ஏ' பிரிவு:-*
முதலாமிடம்:-வ.ஹேமராதா (சித்தன்கேணி), இரண்டாமிடம்:-ம.டயானா (சங்கானை),மூன்றாமிடம்:-கோ.கீதாஞ்சலி (சுழிபுரம்)

*'பீ' பிரிவு:-*
முதலாமிடம்:-சி.கலாராணி (பண்ணாகம்), இரண்டாமிடம்:- ந.தீபா (சங்கானை),மூன்றாமிடம்:-செ.அனுஷா (சித்தன்கேணி)

### தெய்வீகக்காட்சி

*'ஏ' பிரிவு:-*
முதலாமிடம்:- இ.சிந்துஜா (சித்தன்கேணி), இரண்டாமிடம்:-கு.நிஷாந்தினி (சித்தன்கேணி), மூன்றாமிடம்:-கோ.சாரங்கன் (சித்தன்கேணி)

*'பீ' பிரிவு:-*
முதலாமிடம்:- உ.கயந்தன் (சித்தன்கேணி), இரண்டாமிடம்:- ஜெ.அபிராமி (சித்தன்கேணி), மூன்றாமிடம்:-ப.பவதாரணி (சித்தன்கேணி)

*'சீ' பிரிவு:-*
முதலாமிடம்- ம.துஷ்யந்தன் (சித்தன்கேணி), இரண்டாமிடம்-ம.சிவறோஷன் (சித்தன்கேணி), மூன்றாமிடம்:-சி.கலாஜினி (சித்தன்கேணி)

### ஓவியப்போட்டி

*'ஏ' பிரிவு:-*
முதலாமிடம்:- எஸ்.வனீதன் (சிததன்கேணி), இரண்டாமிடம்:- ர.தயாபரன் (சங்கானை), மூன்றாமிடம்:-வ.பிரசாந்த் (சுழிபுரம்)

*'பீ' பிரிவு:-*
முதலாமிடம்- செ.கங்காயினி (சுழிபுரம்), இரண்டாமிடம்:- க.ரமேஸ் (சங்கானை), மூன்றாமிடம்:- என்.பார்த்தசாரதி (சித்தன்கேணி)

*'சீ' பிரிவு:-*
முதலாமிடம்- எஸ்.ஈஸ்வரி (சுழிபுரம்), இரண்டாமிடம்:- பா.சந்திரவதனி (சுழிபுரம்), மூன்றாமிடம்:- கு.குகதாஸன் (சித்தன்கேணி) (க-175)


தவறிவிட்டது

பாசையூரைச் சேர்ந்த K.யதீந்திரதாஸ் என்பவருடைய கைச்சங்கிலி யாழ். நவீன சந்தைக்கும் - பாசையூருக்கும் இடையில் 10.06.2001 ஞாயிற்றுக்கிழமை தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவுசெய்து யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ஆர்.வி.ஜி. மருந்தகத்தில் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

பாசையூர். (89130) K.யதீந்திரதாஸ்.


## ஆறாம் மாத நினைவஞ்சலி

மலர்வு 14 - 11 - 1959



உதிர்வு 17 - 01 - 2001

**அமரர் அ.சத்தியமூர்த்தி**

*(சிவன் மிக்சர் உரிமையாளர்)*

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காகவும், வழிகாட்டியாகவும்
விளங்கிய எங்கள் அன்புத் தெய்வமே!
எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு
விண்ணுலகெய்தி ஆறுமாதமாகியும்
எங்கள் உள்ளங்களில் அணையாத தீபமாய் வாழ்கிறீர்கள்.

*12/2, கன்னாதிட்டி வீதி,*
*சிவன்கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.* (89124) மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி முத்துப்பிள்ளை தில்லைநாதர்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

சிறுப்பிட்டியைச் சேர்ந்த திருமதி முத்துப்பிள்ளை தில்லைநாதர் 15.06.2001 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான பூதத்தம்பி - தெய்வானை ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - இராமத்தைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும் தில்லைநாதர் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் கௌரி(அனுஷா-லண்டன்), சிவநாதன்(ரஞ்சன்-டென்மார்க்), கௌசலா ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திரமாதவன் (ரவி-லண்டன்), பவானி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிதா, தனுஷியா, சிவகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.06.2001) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சிறுப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிறுப்பிட்டி.* (89132)

தகவல்:
ம.தில்லைநாதர்
(கணவர்)

# நிபந்தனையற்ற பேச்சுக்கு புலிகள் முன்வரவேண்டும்

## இடதுசாரிக் கட்சிகள் கோரிக்கை

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நிபந்தனையற்ற பேச்சுக்களுக்கு விடுதலைப் புலிகள் முன்வரவேண்டும்.

இவ்வாறு இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன ஒன்றிணைந்து வேண்டுகோள்விடுத்துள்ளன.

இது குறித்து இந்தக் கட்சிகள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யுத்த நிறுத்தம், பொருளாதாரத்தடைகளை நீக்குதல், தமது இயக்கத்தின் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்குதல் ஆகிய நிபந்தனைகளை புலிகள் திடீரென முன் வைத்துள்ளனர்.

இந்தக் கோரிக்கைகள் பேச்சுக்களைஆரம்பிப்பதற்கு அவசியமானவையல்ல;இவைகள் பேச்சுக்களின்போது பேசித் தீர்க்கப்படக்கூடியன. முதல் இரண்டு நிபந்தனைகளையும் ஏற்பதென்ற அரசின் நிலைப்பாட்டை ஏற்கும் அதேவேளை மூன்றாவது நிபந்தனையை ஏற்பதில்லை என்ற அரசின் நிலைப் பாட்டைநாம் ஏற்கின்றோம்.

விடுதலைப் புலிகள் தாம் குறிப்பிட்ட நிலப்பரப்பை ஆதிக்கத்தில் வைத்திருப்பதாகவும், தம்மிடம் நிரந்தரமான இராணுவம் இருப்பதாகவும், அதனால் தாம் ஏனைய போராளி இயக்கங்களை விடவும் ஒப்பற்ற ஒரு நிலையில் இருப்பதாகவும் கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாதது.

ஏனென்றால் பலஸ்தீனர்களின் விவகாரமும் இவ்வாறானதே. உண்மையில் புலிகளுக்கு அத்தியாவசிய தேவைகளை தம் மக்களுக்கு வழங்கும்ஆற்றல் கிடையாது. அவற்றை உலகின் ஏனைய போராளிகளிடம் நிலங்களைப் பறிகொடுத்த நாடுகளின் — அரசாங்கங்கள் போலன்றி இலங்கையரசாங்கமே வழங்கி வருகின்றது. இதனால் விடுதலைப் புலிகள் முன்வைக்கும் நியாயம்செல்லுபடியற்றதாகிறது.

அரசு புதிய அரசமைப்பை அமுல் செய்வதற்கு முடிவு செய்திருப்பதை நாம் பாராட்டுகிறோம். சமாதான முயற்சிகள் விடயத்தில் விடுதலைப்புலிகள் இணக்கங் காட்டாமலிருக்கும் நிலையில் இதுதான் அரசுக்குள்ள மாற்றுவழியாகும். அத்துடன் பொதுஜன முன்னணியும், ஐ.தே.க.வும் இணைந்த இருகட்சி அணுகுமுறை விடுதலைப் புலிகள் மீது மேலும் அழுத்தத்தை ஏற்படுத்தி அவர்களை விட்டுக்கொடுக்கச் செய்யும்.

ஆளும் கட்சியுடன் ஒப்பந்தம் செய்து பெறப்படும் அனுகூலங்களை அடுத்த கட்சி ஆட்சிக்கு வந்ததும் அகற்றிவிடும் என்ற விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டை மாற்றவும் இந்த இரு கட்சியாட்சிமுறைஉதவும்

அதுமட்டுமன்றி, இரு பெரும் கட்சிகளுக்கிடையேயுமுள்ள வேறுபாடுகளை விடுதலைப் புலிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதையும் தவிர்க்க முடியும். எனவே ஐ.தே.கட்சி தனது வரலாற்றுப் பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும் என்று கோருகின்றோம்.

ஐ.தே.கட்சியின் ஆட்சிக் காலத்தில்தான் இனப்போர் ஆரம்பமானது என்பதையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். எனவே சிறுசிறு அரசியல் வேறுபாடுகளை மறந்து பொ. ஐ. முன்னணியுடன் ஐ.தே. கட்சி ஒரு பொது உடன்பாட்டுக்கு வருதல் வேண்டும்.

— என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-7)

# திருட்டு நகைகளை வாங்குவது தண்டனைக்குரிய குற்றமாகும்

## பொலீஸ் அத்தியட்சகர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 17

''திருட்டு நகைகளைக் கொள்வனவு செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும். இவ்வாறு திருட்டு நகைகளை கொள்வனவு செய்யும் நகைக்கடை உரிமையாளர்கள் மீது வழக்குத் தொடரப்படுவதுடன் அந்த நகைகளும் பறிமுதல் செய்யப்படும்.''

நகரப் பகுதியிலுள்ள நகைக்கடைகளின் உரிமையாளர்களை நேற்றுக் காலை யாழ். பொலீஸ் நிலையத்தில் சந்தித்த யாழ். பொலீஸ் அத்தியட்சகர் குடாஹெட்டி மேற்கண்டவாறு அவர்களிடம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:-

இன்று குடாநாட்டில் களவு சர்வசாதாரணமாகிவிட்டது. அவற்றில் முக்கியமானதாக இருப்பது தங்க நகைக் களவு ஆகும்.

நகைகளைக் களவாடும் திருடர்கள் அவற்றை நகைக் கடைகளிலேயே விற்கின்றனர்.

எனவே சந்தேகத்துக்கிடமான முறையில் யாராவது நகைகளை விற்பனை செய்ய வந்தால் அவற்றைக் கொள்வனவு செய்யாது விடுவதுடன் அவர்கள் தொடர்பான விவரங்களை உடனடியாகப் பொலீஸாருக்குத் தெரிவிக்க வேண்டும்.

களவாடப்பட்ட நகைகளை வாங்குவோர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சட்டத்தில் இடம் உண்டு. திருட்டுப் பொருள்களைக் கொள்வனவு செய்பவர்களுக்கு மூன்று வருட சிறைத் தண்டனை வழங்கவும் சட்டத்தில் இடமுண்டு

முன்பின் அறியாத ஒருவரிடம் இருந்து நகைகளைக் கொள்வனவு செய்யும்போது அவரது பெயர், விலாசம், அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை பதிவு செய்தல்வேண்டும்.

அவ்வாறு பதிவு செய்த விவரங்களைத் தபால் மூலம் யாழ். பொலீஸ் நிலையத்துக்கு அறிவிக்க வேண்டும் நகைகளைக் கொள்வனவு செய்து இருவாரங்களுக்கு அவற்றை வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தாது அப்படியே வைத்திருந்து இருவாரங்களுக்குப் பிறகு .பொலீஸாரிடம் இருந்து பதில் எதுவும் கிடைக்காதுவிட்டால் அதன் பின்பு வேறு தேவைகளுக்கு அதனைப் பயன்படுத்தலாம்.

நகைக்கடை உரிமையாளர்களை சிரமப்படுத்துவதற்காகவோ அவர்களின் வியாபாரத்தைப் பாதிப்பு ஏற்படுத்துவதற்காகவோ நாம் இந்தக் கட்டுப்பாடுகளை விதிக்கவில்லை. நாட்டில் தற்போது அதிகரித்துள்ள களவுகளைத் தடுப்பதற்காகவே இந்த ஏற்பாடு.

குடாநாட்டில் சட்டத்தை நிலைநாட்டவும் விபத்துக்கள், களவுகள் போன்றவற்றை தடுப்பதற்கும் பொலிஸார் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள். அவர்களின் சேவைக்கு பொது மக்கள் தம்மாலான ஒத்துழைப்பை வழங்கவேண்டும் — என்றார். (உ-4)

## பாராட்டு விழா

மாதகல் கல்வி அபிவிருத்திச் சங்கம் ஏற்பாடு செய்துள்ள — மாணவர்களுக்கான —பாராட்டு விழா ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

1996 ஆம் ஆண்டிலிருந்து 2000 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் மாதகல் பகுதி பாடசாலைகளில் இருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்ற முதல் மூன்று மாணவர்கள், பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் ஆகியோர் இன்றுபரிசில்களைப்பெறுவர்.

## விளையாட்டுநிகழ்வு

யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திவரும் 15, 17 வயதுப் பிரிவினர்களுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம் பெறவுள்ள ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு:-

### 15 வயதுப் பிரிவு

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி எதிர் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி (ஹாட்லிக் கல்லூரி மைதானம்).

கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி (கொக்குவில் இந்துகல்லூரி மைதானம்

### 17 வயதுப் பிரிவு

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி எதிர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி (மகாஜனக்கல்லூரி மைதானம்).

மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் சென். பற்றிக்ஸ் கல்லூரி(மானிப்பாய் இந்துக் லூரி மைதானம்). (ஒ-86)

★ ★ ★

விளையாட்டு அவை மாவட்ட ரீதியாக நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக தாச்சி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ பெண்கள் பிரிவில் சுன்னாகம் வளர்பிறைவிளையாட்டுக்கழகம் எதிர் இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழகம்.

★ ஆண்கள் பிரிவில் நவாலி தென்றல் விளையாட்டுக் கழகம் எதிர் கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகம்.

# நியாயமற்ற போராட்டங்களால் ஊழியர் வேலை இழக்கும் அபாயம்

## எச்சரிக்கின்றார் யாழ். மாநகர முதல்வர்

யாழ்ப்பாணம், ஜூன் 17

நியாயமற்ற கோரிக்கைகளை முன்வைத்து நடத்தப்படும் போராட்டங்கள் காரணமாக ஊழியர்கள் வேலை இழக்கும் அபாயம் ஏற்படலாம்.

—இவ்வாறு எச்சரிக்கின்றார் யாழ். மாநகர முதல்வர் என். ரவிராஜ்.

மாநகர சபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் நேற்று முதல் ஆரம்பித்துள்ள வேலை நிறுத்தப் போராட்டம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே முதல்வர்இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து முதல்வர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தொழிற்சங்கப் போராட்டத்தில் பங்குபற்றப்போவதாகத் தெரிவித்து சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் சமர்ப்பித்த மகஜருக்கான பதில் மாநகர சபையினால் உரிய முறையில் சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டது.

இந்த மகஜரில் குறிப்பிடப்பட்ட கோரிக்கைகள் அனைத்தும் மாநகர சபையின் அதிகார வரம்புக்கு அப்பாற்பட்டவையாகும்.

தற்காலிகத் தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனத்தை வழங்குவது வடக்கு—கிழக்கு மாகாண சபையின் பொறுப்பு.மாநகர சபைக்கும் நிரந்தர நியமனம் வழங்கலுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

யாழ். மாநகர சபைக்கென நிரந்தரக் கட்டடம் இல்லை. இந்த நிலையில் சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுப்பது என்பது நடைமுறைக்குச் சாத்தியமற்ற கோரிக்கையாகும்.

இளைப்பாறும் அரச ஊழியர்களுக்கு ஓய்வூதியத்தை வழங்குவதென்பது ஓய்வூதியத் திணைக்களத்தின் வேலை. சுத்திகரிப்புத்தொழிலாளர்கள் பலரிடம் பிறப்பு, திருமணச் சான்றிதழ்களோ மற்றும் ஆவணங்களோ இல்லை. இந்த நிலையில் ஓய் ஊதியத்தை விரைவில் வழங்க வேண்டும் என எம்மிடம் கோருவது நியாயமற்றது.

எனவே நீதியற்ற, முறையற்ற போராட்டங்களைக் கைவிட்டு சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் உடனடியாக வேலைக்குத் திரும்ப வேண்டும். இல்லையேல் புதியவர்களை அந்தப் பதவிகளுக்கு நியமனம் செய்வது தவிர்க்க முடியாததாகிவிடும் — என்றார். (உ-7)

## பாலர் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ். வீதியில் அமைந்துள்ள ஞானக்குழந்தை இல்லத்தின் 9 ஆவது வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு வைத்தீஸ்வராக் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் செல்வி கார்த்தியாயினி சிவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கிராம அலுவலர் கி. ஆனந்தராஜன் தம்பதிகளும் கௌரவ விருந்தினராக பாலர் கல்விக் கழகச் செயலாளர் திருமதி தெ. இரட்ணகோபாலும், சிறப்பு விருந்தினராக வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் என். வன்னியசிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-10)

## கொடிகாமம் மாணவருக்கு

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய மாணவர்களுக்கான வகுப்புகள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் நெல்லியடி திரு இருதயக் கல்லூரிக்கு முன்பாகவுள்ள 'கொலிஜ் ஒவ் கொமேர்ஸ்' நிறுவனக்கட்டடத்தில் நடைபெறவுள்ளன.

மேற்படி பாடசாலையில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை கல்வி கற்கும் அனைத்து மாணவர்களையும் தவறாது வகுப்புகளுக்கு சமுகமளிக்குமாறு பாடசாலை அதிபர் ரி. கந்தையா கேட்டுள்ளார். (உ-6)

## நவாலியில் நேற்று வேள்வி

நவாலி தெற்கு மூத்துமாரியம்மன் ஆலயத்தில் நேற்றுக் காலை ஐம்பதுக்கும் மேற்பட்ட கடாக்களும் முப்பத்தைந்துக்கும் மேற்பட்ட சேவல் கோழிகளும் வேள்விக்காக பலியிடப்பட்டன.

மேற்படி ஆலயத்தில் பலியிடும் நிகழ்வை நிறுத்துமாறு கோரி மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சனுக்கு நவாலிப் பகுதியைச் சேர்ந்த ஒரு தொகுதி மக்களின் சார்பில் மகஜர் ஒன்று வழங்கப்பட்டிருந்தது குறிப்பிடத் தக்கது.

நவாலி முத்துமாரியம்மன் ஆலயப் பலியிடும் நிகழ்வு சுமார் 250 வருட பழமை வாய்ந்த ஒன்றாகும்.

மேற்படி பலியிடும் நிகழ்வை நிறுத்தினால் அவ்வூர்ப் பகுதியில் நோய்களும் தீராத வருத்தங்களும் ஏற்படும் என அடிப்படைவாதிகள் கூறிவருகின்றனர்.

வலிகாமம் பகுதியில் மட்டும் இவ்வருடம் 7 பிரதான ஆலயங்களில் பலியிடும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

மேற்படி பலியிடும்நிகழ்வை அடுத்த வருடமளவில் முற்றாக ஒழிப்பதற்கு பிரதேச மட்டத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (உ-185)

## சமய சந்நிதிகளில்

மானிப்பாய் புனித அந்தோனியார் திருத்தலத் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 6 மணிக்கு முதற் திருப்பலியும் 7-30 மணிக்கு திருநாள் கூட்டுத்திருப்பலியும் இடம்பெறும். நற்கருணை விழா இன்று மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (ம-10)

★ ★ ★

அளவெட்டி வடக்கு, தவளக்கிரி முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ம-10)

★ ★ ★

மானிப்பாய் வடக்கு அருள்மிகு பெரியதம்பிரான்ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் விழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம-7-90)

யாழ்ப்பாணம், ஜூன் 17

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான மஹாகும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறுகிறது. (ஒ-4)

★ ★ ★

யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான ஏகாசித உற்சவம் இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறும்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகள்கள் தேவை

கௌரவ குடும்பம், 36வயது, 7இல் செவ்வாய்- Mechanic மணமகனுக்கும், 30வயது நோர்வே மணமகனுக்கும் மணமகள்கள் தேவை. தொடர்பு: சோதிடர் சுந்தரம்பிள்ளை, திருவீதி, உரும்பிராய். (89082)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர் 1960 இல் பிறந்த விரிவுரையாளர், 1962இல் பிறந்த எக்கவுண்டன், 1972இல் பிறந்த சிவில் எஞ்சினியர் 1969இல் பிறந்த பட்டதாரி (சைவம்) இவர்களுக்கு பாவம் குறைந்த அழகிய மணமகள்கள் தேவை. தொடர்பு:- கிருஷ்ணா திருமண சேவை, T.சுப்பையா செங்குந்தாவீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (89131)

டாக்டர், எஞ்சினியர், பட்டதாரிகள், லண்டன் கொம்பியூட்டர் எஞ்சினியர், கனடா, சுவிஸ், ஜேர்மனி ஆகிய நாட்டில் பிரஜா உரிமை பெற்றவர்களுக்கும் மணமகள்கள் தேவை. பட்டதாரிகள் விரும்பத்தக்கது. தொடர்பு:- கமலக்கண்ணன் திருமண சேவை, கு.அருந்ததி NO.3.மூத்தவிநாயகர் வீதி, கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம். (திங்கள், புதன், வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய நாள்களில் நேரில் தொடர்பு கொள்ளவும். 10.30 - 4.00 மணி வரை. (89128)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 38வயது, சித்திரை நட்சத்திரம் முதலாம் கால், பாவம்6, தனியார் கம்பனியில் "COMPUTERIST" ஆக வேலை செய்பவருக்கும்/சுவிஸில் நிரந்தர குடியுரிமை பெற்ற 32 வயது, சுவாதி நட்சத்திரம், 8இல் செவ்வாய், 52பாவம், உள்ள மணமக்களுக்கு அழகிய மணமகள் தேவை. கொழும்பில் திருமணம் செய்வார். தொடர்பு: திருஞானசம்பந்தமூர்த்தி, 314 கோயில் வீதி, நல்லூர். T.P:3409 (89098)

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1975.08.07 இல் பிறந்த ஆயிலியம் முதலாம் கால் 8இல் செவ்வாய், 28 பாவம் உள்ள ஆஸ்திரேலியாவில நிரந்தர வதிவிடப் பிரஜா உரிமை பெற்றுள்ள அழகிய மணமகனுக்கு படித்த அழகிய மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர். விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1306, மே/பா.உதயன். (89005)

## ஆங்கிலம் விசேடமாக

O/L Distinction, Credit பெறுபேறுடைய A/L, G.A.Q ஆரம்பத்திலிருந்து (ஆண்டு 6-10) கற்பிக்கப்படும். B.SC (cey) Lond Inter. 85, சிவன் கோயிலடி (சிவன் கோயில் பின்புறம்), திருநெல்வேலி. (89049)

## விற்பனைக்கு

சுப்பகப் 50.C, சுப்பகப் C90 பற்றி மொடல், C.D 50 கொண்டா, லுமாலா பெண்கள் சைக்கிள், ஜீரோ மெயின் அன்ரனா பைப், பைனியர் டெக்செற் 200W அம்ப் உடன், இரு போவே பொக்ஸ் பெரியது, இரு ரலி சைக்கிள்கள் கியர் குடத்துடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இ.கண்ணன், 43/1, மணல்தறைலேன், கந்தர்மடம். (89103)

நல்ல நிலையிலுள்ள 16 SRI தொடர் இல. கொண்ட TOYOTA CORONA வகன் மொடல் கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு:- S.போல், 209, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (89110)

கடைக்குத் தேவையான நல்ல நிலையிலுள்ள கண்ணாடி அலுமாரிகள், மேடைத்தராசு, சோக்கேஸ், மேசை, ஒருசோடி இரும்புக்கேற் என்பன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:-600, நாவலர் வீதி, (ஸ்ரான்லிக் கல்லூரிக்கு முன்பாக), அரியாலை. (89122)

கோப்பி வறுக்கும் மின்சார றோஸ்டருடன் இரண்டு, மேசை மொடல் கோப்பி அரைக்கும் இயந்திரமும் விற்பனைக்குண்டு. றிக்கோ பத்மநாதன் (நவீன சந்தை முன்பாக) 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (89134)

சணல் ஆடும் 2 கடாய்க் குட்டிகளும் மணித்தராக்களும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 186/26, குருநாதர் கோயில் லேன், பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (89137)

ஆலய பாவனைக்கு உகந்த (இந்தியத் தயாரிப்பான) புதிய பெரிய கோண் ஸ்பீக்கர்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:-மயூரன், ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு. (89088)

## தவறிவிட்டது

சோமசுந்தரம் கரிகாலன் என்பவருடைய தே.அ.அ. (இல.793254750V) விசேட அ.அ. என்பனவும் பிறவுண் வீதிக்கும் நாவலர் வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 9,மாட்டின் வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும். (89121)

ஆசிரியர் வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த சிவராமச்சந்திரன் சிவஹரிசனின் முதலாவது பிறந்தநாள் வீடியோ கசற் மூலப் பிரதி தவறிவிட்டது. யாரிடமாவது கிடைத்தால் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கிறேன். ரஜீவன் மோட்டோர்ஸ், நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (89142)

## வந்துவிட்டது

H.P ராஜ்குமார் எழுதிய நூல்கள் தந்தை S.J.பேர்க்மான்ஸ் அவர்களின பாட்டுப்புத்தகம் கையடக்கமான புதிய ஏற்பாட்டு வேதாகமம். போஸ்டர்கள், என்பன விற்பனைக்குண்டு. கிடைக்குமிடம்:- C.L.S வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். (89139)

## உடன் விற்பனைக்கு

வீட்டுப் பாவனைக்கு உகந்த மேசைகள், அலுவலக மேசை, கட்டில்கள், கதிரைகள், அலுமாரி, Steel cupboard, singer குளிர்சாதனப் பெட்டி Piram (சிறுவர் தள்ளுவண்டில்) மற்றும் பல பொருள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 15/1, ஓடைலேன், வண்ணார்பண்ணை. (89002)

## மரக்கன்றுகள் விற்பனைக்கு

செவ்வரத்தை, றோஸ், குறோட்டன், வகைகள் தென்னம்பிள்ளை Concrete பூச்சாடிகள், மருந்து வகைகள் பெற்றுக்கொள்ளலாம். 19,முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச்சந்தையடி, நல்லூர்) (89136)

## வீடு விற்பனைக்கு

நல்லூர் செங்குந்தா வீதியில் 3 பரப்புக் காணியுடன் புதியவீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு:-க.நல்லநாதன், 32, சட்டநாதர் வீதி, யாழ்ப்பாணம். (89123)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த சைவ போசனமுடைய விசாக நட்சத்திரம், 3ஆம் பாதம், 1962இல் பிறந்த, 7இல் செவ்வாயுள்ள பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியைக்கு தகுநத மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். அரச தொழில் புரிபவர்கள் விரும்பத்தக்கது. சீதனம் வழங்கப்படும். தொடர்பு: ஆ.சபாரத்தினம், 37/22 A, முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.(88809)

## கார் விற்பனைக்கு

A-60 கேம்பிறிச் மொடல் கார் (மிகவும் நல்ல நிலையிலுள்ளது) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- கு.சதாணந்தன், 5/1புகையிரத வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (89140)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

இறைச்சிக் கோழி (BROILERS), கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:-இல.15, 6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (89085)

புறொயிலர், சேவல், கல்பேட் என்பன மொத்தமாகவும், சில்லறையாகவும் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்தல் இலவசம். 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (88836)

Broiler, Cullbirds, Cockerels, Soup குஞ்சு, இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் காலை 6.30 - மாலை 6.00; குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச சந்தையடி, நல்லூர். (88968)

## தேவை

றோள், பற்றிஸ், சுவிற்ஸ் வகைகள் சமைக்கத் தெரிந்தவர்கள் தேவை. தொடர்பு:- றிக்கோ பத்மநாதன் (நவீன சந்தை முன்பாக) 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (89133)

## புறொயிலர்

புறொயிலர், கல்பேட் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். விலை: புறொயிலர் 1Kg-160/= கல்பேட் 1Kg 140/= தொடர்பு: 334, கே.கே.எஸ் வீதி, சிவன் கோயிலடி (குணம் ரொட்டிக்கடை அருகில்) (89127)

புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேட விலைக் கழிவு வழங்கப்படும். 310, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (S.M. பர்ணான்டோ கண்ணாடிக் கடை அருகில்) T.P.3170 (89068)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- சங்கீத், 40,விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். (கல்வியங்காட்டுச் சந்தைக்கு அருகில்) (89077)

## பல்கலை. மாணவி விபத்தில் படுகாயம்

யாழ்ப்பாணம்,ஜூன்17

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்-சைக்கிள் விபத்தில் பல்கலைக்கழக மாணவி ஒருவர் கால்முறிந்து படுகாயமடைந்தார்.

அரியாலையைச் சேர்ந்த பேரின்பநாயகம விஜி (வயது 24) என்ற மாணவியே படுகாயமடைந்தவராவார். சைக்கிளில் வரும்போது விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்த அந்த மாணவி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஓ-15)

# பதவி வெற்றிடம்

## யாழ்ப்பாண மாநகர சபை, பதில் சுகாதாரத் தொழிலாளி பதவி

மேற்படி பதவிக்கான நேர்முகப் பரீட்சை நாளை (18-06-2001) திங்கட்கிழமை மு.ப.10.00 மணிக்கு இவ்வலுவலகத்தில் நடைபெறும்.

☆ கல்வித்தகைமைகள் 5ஆம் வகுப்பில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

☆ வயதெல்லை 18 - 45

☆ சம்பளம் - நாளொன்றுக்கு ரூபா 131/- அங்கீகரிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்.

☆ இப்பதவி பதில் அடிப்படையில் அமைவதுடன், ஒரு நாள் அறிவித்தலுடன் நீக்கக் கூடியதொன்றாகும்.

ஏற்கனவே சேவையிலிருந்து இளைப்பாறியவர்களது விண்ணப்பங்களும் பரிசீலனை செய்யப்படும். சுயவிவரங்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களுடனும், பிறப்பத்தாட்சிப் பத்திரங்களுடனும் அன்றைய தினம் நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். மாநகரசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**சி.வே.குலநாயகம்,**
பதில் மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(C/17126)



இருபாலை எக்ஸ்பிரஸ் கல்வி நிலையத்தில் அண்மையில் கற்றல் கற்பித்தலுக்கான மூலவள நிலையம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அதனை ஆரம்பித்து வைத்தார். அவர் அங்குள்ள கற்பித்தல் துணை சாதனங்களைப் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம். அருகில் நிறுவன அதிபர் மற்றும் சிறப்பு விருந்தினர்களையும் காணலாம். அன்றையதினம் அங்கு ஒரு கணனி கல்விப் பிரிவினையும் துணைவேந்தர் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். (ஐ)

# மாகாண சேவைப் பரீட்சைகள்

அரசாங்க மாகாண சேவையினால் எதிர்வரும் 23ஆம்திகதி வேம்படி மகளிர் கல்லூரியில் நடத்தப்படவுள்ள பரீட்சைகள் பற்றி விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

★ அரசாங்க மாகாண சேவையின் கணக்குப் பதியுநர் சேவையின் வகுப்பு II பிரிவு 'அ'வில் உள்ள உத்தியோகத்தர்களை வகுப்பு Iக்கு பதவி உயர்த்துவதற்கான பரீட்சை.

★ அரசாங்க மாகாண சேவையின் சிறாப்பர் சேவையின் வகுப்பு II தரம் 'அ'வில் உள்ள உத்தியோகத்தர்களை வகுப்பு Iக்கு பதவி உயர்வு செய்வதற்கான பரீட்சை.

★ அரசாங்க மாகாண சேவையின் பொது எழுதுநர் சேவை, தட்டெழுத்தாளர் சேவை பண்டகக் காப்பாளர் சேவை ஆகியவற்றின் வகுப்பு II பிரிவு 'அ'வில் உள்ள உத்தியோகத்தர்களை வகுப்பு Iக்கு பதவி உயர்வு செய்வதற்கான பரீட்சை.

மேற்படி பரீட்சைகளில் தோற்றவுள்ளோருக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.கல்வி வலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-10)


## தோலகட்டி நெல்லிரசம்

யாழ்.மக்களே! இதோ மகிழ்ச்சி தரும் செய்தி ஒன்று!

தோலகட்டி நெல்லிரசம்

புதுப்பொலிவுடன் உங்களைத் தேடி வலம் வருகின்றது!
அனைத்து அம்சங்களையும் கொண்ட ருசிமிக்க பானம்.
போலிகளை வாங்கி ஏமாற வேண்டாம்.
ஒறிஜினல் லேபலுடன் புதிய சிவப்பு மூடியில் THOLAGATTY PRODUCTS உள்ளனவா என்று பார்த்து வாங்குங்கள்.

- அதிபர்.

*அருள் ஆச்சிரமம்,*
*5, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.*
*T.P:- 3351*

(89150)



இதோ! சுன்னாகத்திலும்!!

## எரிக் கணேஷ்

வாடிக்கையாளர்கள், நண்பர்கள் நலன்கருதி எமது ஸ்தாபனம் **சுன்னாகத்திலும்** ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

☆ உறுதியான, தரமான சங்குப் பற்களா!
☆ மூக்குக் கண்ணாடிகளா!..... நாடுங்கள்!!

☆ எரிக் கணேஷ் ☆

(பல் கட்டுமிடமும், மூக்குக் கண்ணாடி அகமும்)
*இல.80, கே.கே.எஸ். வீதி,* ***சுன்னாகம்.***
(பழைய பொலீஸ் நிலையம் முன்பாக)

*தலைமை:* 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P: 2486
*கிளை:* 91, கே.கே.எஸ். வீதி, கொக்குவில்.

(C/17128)


# மரண அறிவித்தல்கள்

## டெய்சி யேசுதாசன்

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட டெய்சி யேசுதாசன் நேற்று (16.06.2001) சனிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற யேசுதாசன்-மேரி மெற்றலின் ஆகியோரின் அன்பு மகளும், றதி, றொபேக்கா, சாளினி, றஜனி, றொக்சினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் தெலஸ்போ, மேரி வதனா, பெனடிற், மலர் ஆகியோரின் மருமகளும், அருள்நாதன், லூத்து மேரி, ஞானதாஸ் (ஓமான்) ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிசடங்கு இன்று (17.06.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் உடுப்பிட்டி உலகரட்சகர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*உடுப்பிட்டி.* (C/17124) தகவல்: ஜே.றதி (அக்கா)

## திருமதி துரைச்சாமி சரஸ்வதி

சங்கானையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி துரைச்சாமி சரஸ்வதி நேற்று (16-06-2001) சனிக்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்துவிட்டார்.

இவர் துரைச்சாமியின் அன்பு மனைவியும், திருமதி இராசமணி, திருமதி அழகம்மா, காலஞ்சென்ற திரவியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கந்தசாமி பத்மாவதி, பரந்தாமு ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-06-2001) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*தேவாலய வீதி,*
*சங்கானை* (89142) தகவல் வ.ச.முதலி

# இளைய தலைமுறைக்குத் தவறான பாதையைக் காட்டி தமிழ் மக்களின் கலாசாரத்தை அழிப்பதற்கு முயற்சி

## நெதர்லாந்து பிரதிநிதிகளிடம் பல்கலை. ஆசிரியர் சங்கம் விரிவாக எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்17

குடாநாட்டை 1995ஆம் ஆண்டு இராணுவத்தினர் கைப்பற்றிய பின்னர் தமிழ் மக்களின் கலை கலாசாரங்களை அழித்து இளைய தலைமுறையினரைத் தவறான பாதையில் இட்டுச்செல்ல அரசதரப்பினர் பல்வேறு வழிகளில் முயற்சி எடுத்து வருகின்றனர்.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

கடந்த புதன்கிழமை பிற்பகல் நெதர்லாந்து தூதரகச் செயலாளர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடினர்.

அவ்வேளை பல்கலைக்கழக ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்பில் இருந்து வரும் பொது மக்களின் சகல பைகளும் படையினரால் பல இடங்களில் துருவித் துருவி பரிசோதனை செய்யப்படுகின்றன. இருந்தபோதிலும் குடாநாட்டு இளைஞர்களுக்கு ஆபாசப் படங்களும் போதைவஸ்துகளும் தாராளமாக விநியோகிக்கப்படுகின்றன. இவை எப்படி இங்கு எடுத்துவரப்படுகின்றன; எவ்வாறு விநியோகிக்கப்படுகின்றன என்பது படைத்தரப்புக்கு தெரியாமல் இருக்க முடியாது.

இத்தனை சோதனைகளுக்கு மத்தியிலும் இவை குடாநாட்டை ஏதோ ஒரு வழியில் வந்தடைகின்றன. இதன் மூலம் எமது கலாசாரத்தை அழித்து எமது சமூகத்தை சீரழிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவே நாம் கருதுகிறோம்.

1996ஆம் ஆண்டில் இராணுவத்தினரது கட்டுப்பாட்டின் கீழ் குடாநாடு வந்த பின்னர் 600 பொது மக்கள் காணாமற்போனார்கள். அவர்களில் சிலர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டும் ஏனையோர் சித்திரவதை செய்யப்பட்டும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

செம்மணிப் புதைகுழிகளின் சந்தேகநபரான சோமரத்ன ராஜபக்ஷ மூலம் அடையாளம் காணப்பட்ட புதைகுழிகளில் இருந்து 15 சடல எச்சங்கள் மட்டுமே மீட்கப்பட்டன. ஏனைய சடல எச்சங்கள் படையினரால் அப்புறப்படுத்தப்பட்டிருக்கும் என்பது பொதுமக்களின் கருத்தாகும்.

### செம்மணிச் சடல எச்சங்கள் மாயம்

ஏனெனில் குறித்த பகுதி அடையாளம் காணப்பட்ட பின்னரும் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் பொது மக்கள் செல்ல முடியாத பிரதேசமாக நீண்டகாலம் இருந்தது. இந்தக் காலப்பகுதியில் படையினர் சடல எச்சங்களை அப்புறப்படுத்தச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கும்.

மேலும் பல பெண்கள் படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டாலும் அவர்கள் அதனை வெளிப்படுத்த முன் வருவதில்லை. எமது கலாசாரம் அதற்குத் தடையாக உள்ளது என்பதும் ஒரு காரணமாகும்.

1996ஆம் ஆண்டின் பின்னரும் பல படுகொலைச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. மிருசுவில் பகுதியில் அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். புங்குடுதீவில் ஒரு யுவதி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

1995ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இரவு 7 மணிக்குப் பின்னர் வீதியில் யாரும் நடமாட முடியாது. தற்போது 9 மணிக்கு ஊரடங்குச் சட்டம் நடைமுறைக்கு வருகிறது. அதன்பிறகு நாம் வீதியில் நடமாட முடியாது.

பகலில் கூட நிம்மதியாக நடமாடமுடியாது. சந்திக்குச் சந்தி இராணுவ காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் எல்லோரும் இறக்கப்பட்டு அடையாள அட்டைகள் மற்றும் பைகள் என்பன சோதனையிடப்படுகின்றன. சிலவேளைகளில் உடலும் சோதனை செய்யப்படுகின்றது.

### கொழும்புக்குச் செல்ல அனுமதி பெறவேண்டும்

நாம் கொழும்புக்குச் செல்வதாக இருந்தாலும் நிறையப் பிரச்சினைகள் உள்ளன. இராணுவ அனுமதி பெற வேண்டி உள்ளது. அதற்கு முன்னர் மேலும் பலரிடம் அனுமதி பெற வேண்டி உள்ளது. அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் தமிழர்களாகிய எமது எல்லா உரிமைகளையும் பறித்துள்ளது. இந்தச் சட்டம் இருக்கும் வரை தமிழ் மக்கள் சுதந்திரமாக நடமாட முடியாது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பரீட்சைக்கு வந்த மாணவன் ஒருவன் வீதியில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டு முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். தான் பரீட்சைக்குச் செல்வதாக அந்த மாணவன் கூறிய போதிலும் அவர் விடுதலை செய்யப்படவில்லை. இதனால் அந்த மாணவன் குறிப்பிட்ட பரீட்சைக்குத் தோற்றமுடியவில்லை.

கல்விச் சுதந்திரம் என்பது படையினராலும், அரசாங்கத்தாலும் குடாநாட்டைப் பொறுத்தமட்டில் மதிக்கப்படுவதேயில்லை. கல்வி சம்பந்தமாக அச்சிடப்பட்ட 'புளொப்பி டிஸ்க்' கைக்கூட கொழும்புக்கு எடுத்துச் செல்ல படையினர் அனுமதி தருவதில்லை. இலத்திரனியல் பொருள்கள் எவற்றையும் எடுத்து வரவோ கொழும்புக்கு எடுத்துச் செல்லவோ முடியாது.

### தபால்கள் உடைத்துச் சோதனை

குடாநாட்டுக்கு வருகின்ற தபால்கள் எல்லாம் இராணுவத்தினரால் உடைத்து சோதனையிடப்படுகின்றன. பின்னர் சோதனையிட்டதாக அவர்கள் றப்பர் முத்திரை குத்திக் கடிதத்தை அனுப்புகின்றார்கள்.

குடாநாட்டில் தற்போது நடைபெற்றுவரும் அபிவிருத்திப் பணிகளின் வேகம் போதுமானதாக இல்லை. வெளிநாடுகளால் குடாநாட்டுக்காக, வடபகுதிக்காக வழங்கப்படும் உதவிகள் எவையும் இங்கு பூரணமாக பயன்படுத்தப்படுவதில்லை.

இங்கே யுத்தம் நடப்பதாகக் கூறி தென்பகுதியிலேயே அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எமது மருத்துவ பீடத்தில் விரிவுரையாளர்கள் பற்றாக்குறை நிலவுகின்றது. இது தவிர ஏனைய பீடங்களிலும் விரிவுரையாளர் பற்றாக்குறை நிலவுகின்றது.

### எமக்குத் தொடர்பில்லை

தென்பகுதியில் யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் என்ற பெயரில் இயங்கி வரும் அமைப்புக்கும் எமக்கும் இடையில் எந்தவித தொடர்புகளும் இல்லை. அவர்கள் அரசியல் செல்வாக்குடன் உண்மை நிலைவரத்துக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டு வருகின்றனர்.

அவர்களுக்கும் எமக்கும் இடையில் எதுவித தொடர்புகளும் இல்லை என்று செய்தி ஊடகங்களுக்கூடாக அறிவித்துள்ளோம். குடாநாட்டு நிலைவரம் தொடர்பாக எமது பெயரில் அவர்கள் அறிக்கைகள் வெளியிடுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

எமக்கு வெளியிடங்களுடன் தொடர்பாடல் வசதிகள் இல்லாத காரணத்தால் குடாநாட்டு நிலைவரங்கள் தொடர்பாக அறிக்கைகள் வெளியிட முடியாமல் உள்ளது எனவும் யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது நெதர்லாந்து தூதரக அதிகாரிகள் இருவரும் இடையிடையே குறுக்கிட்டு ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளிடம் இருந்து பல்வேறு தகவல்களையும் பெற்றுக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-6)

# 20 செம்மறி ஆடுகளை கடித்துக் குதறிய நாய்கள்!

## அச்சுவேலி தெற்கில் சம்பவம்

அச்சுவேலி,ஜூன்17

அச்சுவேலி தெற்கில் நாய்களின் அட்டகாசம் அதிகரித்திருக்கின்றது. அங்கு ந.தவராசா என்பவரின் செம்மறி ஆட்டுப் பட்டிக்குள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு புகுந்த நாய்கள் இருபது ஆடுகளைக் கடித்துக் குதறிக் கொன்றதுடன் மேலும் பல ஆடுகளைக் கடித்துக் காயப்படுத்தியுள்ளன.

கடித்துக் குதறப்பட்ட ஆடுகளின் உடல்கள் வீதியோரங்களிலும் வீடுகளின் வாசல்களிலும் வீசப்பட்டிருந்தன. இதனால் ஆட்டுப்பட்டி உரிமையாளருக்கு 25ஆயிரம் ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அச்சுவேலிப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை பரவலாக அதிகரித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

தோல் நோய்கள் மற்றும் நோய்களுடன் கூடிய கட்டாக்காலி நாய்கள் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைப் பகுதி, பொதுச் சந்தைப் பகுதி மற்றும் பாடசாலைகளுக்கு அண்மையில் உள்ள பிரதேசங்கள் போன்றவற்றில் பெருமளவு நடமாடுவதுடன் பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் வாகனப் போக்குவரத்துக்கு இடையூறும் விளைவித்து வருகின்றன.

(உ-11)

## தொழிலாளி காயம்

யாழ்ப்பாணம்,ஜூன்17

கப்பலில் இருந்து பொருள்களை இறக்கிக் கொண்டிருந்தவேளை இறக்கிய பொதி மோதி கீழே விழுந்த ஒருவர் படுகாயமடைந்தார்.

காங்கேசன்துறை துறைமுகத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் தொழிலாளர் குழுவைச் சேர்ந்தவரும், காரைநகர் வாசியுமான கந்தையா ஜெகநாதன் (வயது32) என்பவரே படுகாயமடைந்தார்.

இவர் பொதிகளைக் கப்பலில் இருந்து எடுத்து கரையில் இறக்குவதற்காக, கப்பல் பாரந்தூக்கிகளை இயக்குபவர்களுக்கு சமிக்ஞை காட்டிக் கொண்டிருந்தவேளையே தவறுதலாகப் பொதியுடன் மோதுண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-15)

## மோதிரம் ஒப்படைப்பு

அச்சுவேலி,ஜூன்17

அச்சுவேலி - யாழ்ப்பாணம் வீதியில் சேவையில் ஈடுபடும் மினிபஸ்ஸில் கண்டெடுக்கப்பட்ட தங்க மோதிரம் ஒன்று உரிமை கோரப்படாத நிலையில் அச்சுவேலி மினிபஸ் சங்கக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் உரிமையாளர் அடையாளம் தெரிவித்து அதனைப் பெற்றுச் செல்லலாம் எனவும் அச்சுவேலி மினிபஸ் நேரக் காப்பாளர் அறிவித்துள்ளார்.(உ-11)

# இலங்கையில் சிகரெட் பிடிப்பது நாட்டுப்பற்றின் வெளிப்பாடாம்

அதிக அளவில் புகைப்பிடிப்பது என்பது ஸ்ரீலங்காவைப் பொறுத்தவரை அதிகளவு நாட்டுப்பற்றை வெளிப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகவே கணிக்கப்படும் என்று மேற்குலக செய்தி ஏஜென்ஸி ஒன்று தனது செய்தி ஆய்வு ஒன்றில் தெரிவித்துள்ளது.

ஏனென்றால் இங்கு சிகரெட் விற்பனையில் 85வீதத்துக்கும் அதிகமான பணம் இலங்கை அரசாங்கத்தால் நடத்தப்படும் போருக்கான நிதியாக அறவிடப்படுகின்றது என்று அந்த ஆய்வு கூறுகின்றது.

அதிகம் புகைப்பவர் தனது நாட்டு அரசாங்கத்துக்கு அதிகளவில் போர் நிதியை வழங்குகின்றார் என்றே கொள்ளப்படுகின்றது.

சிகரட் விற்பனைக்கு அதிக வரி விதிப்பதற்கு புகைத்தலை மட்டுப்படுத்தவேண்டும் என்ற நோக்கமே இலங்கை அரசாங்கத்தால் காரணமாகக் கூறப்படுகின்றபோதிலும், உண்மையில் அதிக வரி விதிப்பு போர் நிதியை நோக்கமாகக் கொண்டதே என்று கூறப்படுகின்றது.

கடந்த வருடத்தில் அதிகமாக 2ஆயிரத்து 210 கோடி ரூபா சிகரெட் தயாரிப்பு நிறுவனங்களில் இருந்து வரியாகப் பெறப்பட்டுள்ளது.

அதேவேளை 250 வகையான - சட்டத்துக்குப் புறம்பான - சிகரெட் வகைகளும் இலங்கையில் விற்பனை செய்யப்படுவதாகக் கூறப்படுகின்றது. (உ-9)

லஷ்சுமி
இணுவில்
கடைசி வாரமாக
சரத்குமார், தேவயானி, ஆனந்தராஜ் நடிப்பில்
பாட்டாளி
(ரீல்ஸ்)
தினசரி : 10.30, 2.30 (பழையநேரம்)
அடுத்த புதிய S.T.R. பிலிம்ஸ் வெளியீடு
கள்ளழகர்
(89185)

ராஜா யாழ்ப்பாணம்
பிரபுதேவா, சரத்குமார், ஜெயாசீல், ஐஸ்வர்யா, கபாலி, விவேக் மற்றும் பலர் நடித்த
பெண்ணின் மனதைத் தொட்டு
தினசரி காட்சிகள : 10.30, 2.30 (பு.நே.)
சனி, ஞாயிறுகளில் :10.30, 2.00, 5.00 (பு.நே.)
20.06.2001 முதல்
சிட்டிசன்
(C/17000)

நாகம்ஸ்
சுன்னாகம்
அர்ஜூன், அபிராமி, பிரகாஷ்ராஜ் நடித்த
வானவில்
(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30 (புதிய நேரம்)
(89151)

இதோ வந்துவிட்டது!
ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மாத
கொம்பியூட்டர் ருடே
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:-
ராஜா குறோசரிஸ்
153, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021-2847
(89149)

பெரதேனியா
பல் சிகிச்சை மூக்குக் கண்ணாடி அகம்
494, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தனது 15 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வழங்கும்
அரைச்சலார்
தலைமையகம் உட்பட அனைத்துக் கிளைகளிலும் நாளை முதல் அரைச்சலாரில்!
I. பல் கட்டுதல் (அதி உயர்தர H.S. பற்கள்)
II. கிளிப் போடுதல் (U.R.A. or L.RA)
III. இலவச கண் பரிசோதனை செய்யப்பட்டு மூக்குக் கண்ணாடி வழங்கல்
நடைபெறும் என்பதை குடாநாட்டு மக்களுக்கு தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம்.
ஏனைய கிளைகள்:
'மோகன்ஸ்' கட்டடம் (பெற்றோல் செற் அருகில்), நெல்லியடி.
K.K.S. றோட், கொக்குவில்.
K.K.S. றோட், சுன்னாகம்.
துரை ஐயர் அவனியூ, அச்சுவேலி.
வட்டுக்கோட்டை றோட், சித்தன்கேணி.
Residence:
மாவடி றோட், மூளாய். Tel. - 070 - 213008
(89152)

# மரண அறிவித்தல்

## சங்கரப்பிள்ளை தனபாலசிங்கம்

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் உடையார்வளவு, துன்னாலை தெற்கு, கரவெட்டியில் வசித்தவருமாகிய சங்கரப்பிள்ளை தனபாலசிங்கம் அவர்கள் 14.06.2001 வியாழக்கிழமை மாலை 6.00 மணியளவில் சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதிகளின் மூத்த மகனும் விமலாதேவியின் அன்புக் கணவரும், சுஜாத்தா, விஜித்தா, ரதி, ரவிசங்கர், ராஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் பரிபூரணலக்சுமி, கனகசிங்கம் மற்றும் காலஞ்சென்றவர்களான அன்னலக்சுமி, ராஜயோகலக்சுமி, பரிமளலக்சுமி, ராஜலக்சுமி, தனலக்சுமி, குருகுலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் எல்லாளன், சண்முகவசீகரன், மித்திரன், கேசவன் ஆகியோரின் அன்பு மாமனாரும் யதூஷா, லக்ஷிகா, டிலக்சனா, நரேன், கோகுலன் ஆகியோரின் அன்புப் பாட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2001) ஞாயிறு பிற்பகல் 2.00 மணிக்கு ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

*இல. 05, 57ஆவது தெரு, கொழும்பு - 06.*

தகவல்:
த.ரவிசங்கர் (மகன்)

(C/17132)

### பிரிஸ்பேர்னில் ஒக்ரோபரில் நடைபெறும்

# பொதுநல அமைப்புக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் இலங்கை இனப்பிரச்சினையையும் சேர்க்குக!

### சர்வதேச ஜூரிமார் ஆணைக்குழுவின் ஆஸி. தலைவர் கோரிக்கை

மட்டக்களப்பு,ஜூன்17

ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பன் நகரில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெற உள்ள பொதுநலவாய அமைப்பு நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான விடயமும் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் என்று கோரிகை விடுக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் முன்னாள் சட்டமா அதிபரும் சர்வதேச ஜூரிமார் ஆணைக்குழுவின் ஆஸ்திரேலியப் பிரிவுத் தலைவருமான நீதியரசர் ஜோன் டைவுட் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகத்திடமும ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் அலெக்சாண்டர் டவுனரிடமும் அவர் இந்தக் கோரிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளார்.

ஆஸ்திரேலியத் தமிழ் அகதிகள் கழகத்தின் அழைப்பின் பேரில் சென்ற மாதம் ஆஸ்திரேலியா சென்றிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பியான யோசப் பரராஜசிங்கம் நீதியரசர் ஜோன் டைவுடை அவரது சிட்னி அலுவலகத்தில் சந்தித்துப் பேசி இருந்தார். இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமாகவும், வடக்கு - கிழக்கில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் அகதி வாழ்க்கை நிலை, அரச படைகளின் மனித உரிமை மீறல்கள், தமிழ்ப் பெண்கள் அரச படைகளால் மான பங்கப்படுத்தல் போன்ற பல விடயங்கள் குறித்தும் அவருக்கு விரிவாக எடுத்துக் கூறியிருந்தார்.

பிரிஸ்பேன் நகரில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறவிருக்கும் பொதுநலவாய அமைப்பு நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான விடயமும் ஆராயப்படுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவரிடம் யோசப் பரராஜசிங்கம் கேட்டிருந்தார்.

இந்த வேண்டுகோள் சம்பந்தமாக நீதியரசர் ஜோன் டைவுட் அவர்கள் யோசப் எம்.பிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:-

தங்கள் நாட்டின் இனப்பிரச்சினை தொடர்பாக தங்களுடன் கலந்துரையாடியதன் மூலம் பல முக்கிய பிரச்சினைகளை என்னால் அறிய முடிந்தது. இதுவரை அறிந்திராத சில உண்மைகளைத் தாங்கள் எனக்கு விளக்கியதுடன் மேலும் அதிக புதிய விஷயங்களை அறியக் கூடிய வாய்ப்பை இச்சந்திப்பின் போது வழங்கியதற்காக மகிழ்ச்சி அடைகின்றேன்.

தாங்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமான விடயத்தையும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய அமைப்பு நாடுகளின் தலைவர்கள் மாநாட்டு நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று எனது நாட்டின வெளிவிவகார அமைச்சரையும், பொதுநலவாய நாடுகள் அமைப்பின செயலாளர் நாயகத்தையும் கேட்டுள்ளேன். எனது கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படும் என்ற நம்பிக்கை எனக்குண்டு - என்று அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ம)

## அரசுக்கு முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பதிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அளப்பரிய பணியாற்றியது.

ஆனால் இந்தக் கூட்டணி அரசை உருவாக்குவதற்காக ஜனாதிபதியுடன் சேர்ந்து கொண்டது குறித்து நாங்கள் இப்போது மிகுந்த கவலைப்படுகின்றோம்.

அரசுக்கும் எங்களுக்கும் (முஸ்லிம் காங்கிரஸுக்கும்) உள்ள உறவு மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. எமக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல், நாம் ஓரம் கட்டப்படுவதே இந்த நிலைமைக்குக் காரணம்.

அரசுக்குள் இருக்கும் சில சக்திகள் எமது கட்சிக்குள் பிளவுகளை ஏற்படுத்தி, தலைமைத்துவப் பிரச்சினையை உருவாக்குவதற்கு ஆதரவு கொடுத்து, பின்னணியில் நின்று செயற்படும்போது அந்தத் தரப்புடன் நாம் எப்படி கூட்டணி ஆட்சியில் பங்குகொள்ளமுடியும்? எனவே தான் எமது இரு தரப்பு உறவு மந்த நிலையை அடைந்திருக்கின்றது.

எமது கட்சித் தலைவராக இருந்த அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் மறைவதற்கு முன்னரே எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவின் அரசியல் பீட அங்கத்துவத்தை இடைநிறுத்தியிருந்தார். அதனால் அவரை நாம் எமது கட்சியின் அரசியல் உயர் பீடக் கூட்டத்துக்கு அழைக்கவில்லை.

அவரையும் எமது அரசியல் பீடத்துக்குள் இதுவரையும் சேர்க்கப்படாத சிலரையும் பலவந்தமாக - எம்மை அச்சுறுத்தி - கட்சிக்குள் - அரசியல் உயர்பீடத்துக்குள் - சேர்த்துக்கொள்ள வைப்பதற்கும் -

கட்சியின் தலைமைத்துவத்தை செயலிழக்கச் செய்யவும் -

அரசில் உள்ள சில சக்திகள் நடவடிக்கை எடுத்துவருகின்றன.

நேற்று முன்தினம் எமது கட்சியின் தலைமைக் காரியாலயத்துக்கும் எனது வீட்டுக்கும் முன்னால் குண்டர் குழுக்களைக் கொண்டு இத்தகைய முயற்சிகள் - அசம்பாவிதங்கள் - மேற்கொள்ளப்பட்டன.

பங்காளி கட்சியைக் கூறுபோட நினைக்கும் சில சக்திகளை அரசுக்குள் வைத்திருக்கும்போது அந்த அரசுக்கு மாறான நிலைப்பாட்டை அந்தப் பங்காளிக் கட்சி எடுப்பதில் தப்பேதும் இல்லை.

எந்தக் கட்சியுடனும் நாம் பேசத் தயாராக இருக்கின்றோம். ஐக்கிய தேசியக் கட்சியுடனும் கூட நாம் பேச்சு நடத்தியிருக்கின்றோம்.

ஜனநாயகத்தைப் பலப்படுத்துவது மற்றும் இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சிகள் ஆகியவை தொடர்பான ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாட்டை அறிந்துகொள்வது எமது நோக்கமாக இருந்தது.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டியது அவசியம்.

ஆனால் இது விடயத்தில் ஏற்றுக்கொள்ளத்தக்க மாற்று வழிகள் குறித்துச் சிந்திக்காது தற்போதைய அரசைக் கைவிடுவதிலும் அர்த்தமில்லை.

எனினும் தேசிய அரசாங்கம் என்ற கோட்பாடு எனக்கு ஏற்புடையதே. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நேற்று முன்தினம் இரண்டு மணி நேரம் சந்தித்துப் பேசினேன். ஆனால் எந்த உறுதிமொழியையும் அவர் எமக்கு அளிக்கவில்லை. (உ-6-9)

### திருட்டு

சங்கானைப் பகுதியில் ஒரே இரவில் மூன்று வீடுகளில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

சங்கானை மாவடி சனசமூக நிலையப் பகுதியில் உள்ள இரண்டு வீடுகளில் உறங்கிக்கொண்டிருந்த பெண்களின் கழுத்தில் இருந்த சங்கிலிகள் அபகரிக்கப்பட்டுள்ளன.

சங்கானை அராலி வீதியிலுள்ள ஒரு வீட்டில் தாலிக்கொடி அபகரிக்கப்பட்டுள்ளது. சம்பவம் இடம்பெற்ற போது மின் துண்டிக்கப்பட்டிருந்தது. இத்திருட்டு நடைபெற்ற பகுதியில் இராணுவ முகாம் ஒன்று இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

## பொ.ஐ.மு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறுவதற்காக அக்கட்சிகளுடனும் அது பேச்சுக்களை நடத்தி வருகின்றது.

இந்த விடயங்கள் குறித்து ஜே.வி.பி. தனது தெளிவான முடிவு எதனையும் இதுவரை தெரிவிக்கவில்லை. அரசைக் கவிழ்க்கும் முயற்சிக்கு அது ஆதரவு வழங்குமா வழங்காதா என்பது தொடர்ந்து கேள்விக் குறியாகவே உள்ளது.

இதற்கிடையில் -

அமைச்சர் மஹிபால ஹேரத் மீதான நம்பிக்கைஇல்லாப் பிரேரணையை ஆதரிக்கப்போவதாக முஸ்லிம் காங்கிரஸ் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

இந்த வாரம் அரசுக்கு மிக மிக நெருக்கடியான காலமாகவே இருக்கும் என்று அரசியல் அவதானிகள் மேலும் கருத்துத் தெரிவித்துள்ளனர். (உ-ம)

### வழக்குத் தொடரப் போதிய காரணமின்றி

# தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களின் விவரம் தருக!

### தொல்லை தவிர்ப்புக் குழு பணிப்பு

கொழும்பு,ஜூன்17

வழக்குத் தொடர்வதற்குப் போதிய காரணமின்றி நாட்டில் உள்ள பல்வேறு சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அப்பாவித் தமிழ இளைஞர்கள் தொடர்பான விவரங்களை உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபருக்குத் தொல்லை தவிர்ப்புக் குழு பணிப்புரை விடுத்துள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கைது செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான அப்பாவித் தமிழ் இளைஞர்கள் குற்றச்சாட்டுக்கள் எதுவும் சுமத்தப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தொல்லை தவிர்ப்புக் குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதை அடுத்தே மேற்படி பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வழக்குத் தொடர போதிய ஆதாரம் இல்லாத போதும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களை உடனடியாக விடுதலை செய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக தொல்லை தவிர்ப்புக் குழுவின் உறுப்பினரான ஆர்.யோகராஜன் எம்.பி. தெரிவித்தார். (உ-6)

### வடமராட்சிக் கடலில்

# மீன்பிடித் தடையை நீக்கக் கோர வல்வை நகரசபையில் தீர்மானம்

வடமராட்சிப் பகுதியில் தொண்டமனாற்றிலிருந்து சக்கோட்டை வரையான கடற்பிரதேசத்தில் மீனவர்கள் தொழிலுக்குச் செல்வதை இராணுவத்தினர் அடிக்கடி தடை செய்வதை நிறுத்துவதற்கும், அவ்வாறு தடை விதிக்கப்படும் போது மீனவருக்கு நிவாரணம் வழங்கவும் ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோருவதென்று வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இந்தக் கோரிக்கைகளை வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடமும், மீன்பிடித்துறை அமைச்சரிடமும் முன்வைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மீன்பிடிக்கும் நேரத்தை முன்பு போலவே அதிகாலை 2 மணியிலிருந்து மறுநாள் காலை 8 மணி வரைக்கும் -

மாலை 4.30 மணியிலிருந்து மாலை 6.30 மணி வரைக்கும் அனுமதிக்க வேண்டுமென கோருவதெனவும் - இத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

### ஓய்வூதியர் கூட்டம்

யாழ்மாவட்ட மட்டத்திலான ஓய்வூதியம் பெறுநர் கழகத் தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை10 மணிக்கு யாழ்.செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறும். (ம - 111)


### விழியருவி நீர் சொரியும்.....

### 31ஆம் நாள் நினைவலைகள்

உருவாய் மண்ணில் 19 - 03 - 1927



அருவாய் விண்ணில் 19 - 05 - 2001

**அமரர் செல்லப்பா சண்முகம்பிள்ளை (சின்னத்துரை) அவர்கள்**

நடுவூர்ப் பழுத்தநன் மரமென நின்றிங்கு
நமக்கெ லாங்குறை தீர்த்து மகிழ்ந்தவர்
சுடுசொல் லறிந்திடாச் சுந்தரன் சுவைமிகு
சொந்தமெல் லாம்புகழ் சண்முகம் பிள்ளையின்
அடியிணை பணிந்தவர் அரனடி அமர்வுற
அஞ்சலித் தோம்நினை வென்றும் நிலைக்குமே!

17.06.2001 ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீ இராச பவனம்
கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (88891)

- குடும்பத்தினர்.

Pillaiyar Offset Printers, Nallur.



## மரண அறிவித்தல்

### மாணிக்கன் சிங்கன்

இமையாணன் மேற்கைப் பிறப்பிடமாகவும் இமையாணன் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கன் சிங்கன் நேற்று(16.06.2001) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கன் - சீதேவி தம்பதிகளின் புதல்வனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவலிங்கம்(இத்தாலி), சிறிவதனா, ரஞ்சிதமலர், கணேசலிங்கம்(ஜேர்மனி), நேசலிங்கம் [பொருளியல் (சிறப்புக் கலை) இறுதி வருடம், யாழ்.பல்கலைக்கழகம்] ஆகியோரின் பாசமிகு தந்தையும் நவரட்ணம், ராஜன், தங்கமலர், ரஞ்சிதமலர்(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற விசுவலிங்கம், பூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2001) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு வல்லை இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

(C/17135)

தகவல்:
சி.நேசலிங்கம்
(மகன்)



### உங்களின் கணனித் தேவைகளுக்கு எங்களின் சேவைகள்



Pentium III 800 MHz

Pentium III 633 MHz

Pentium III 933 MHz
TOSHIBA - Lap Top

வீடியோ படப்பிடிப்பாளர்களுக்கு ஏற்ற வகையில்
Video Capturing, Video Editing, Video Titling
மேற்கொள்ளக்கூடிய வசதிகள் நிறைந்த கணனிகளும் விற்பனைக்கு உண்டு

தரமான கணனிகளையும் கணனி உதிரிப்பாகங்களையும் நியாயமான விலையிலும் உத்தரவாதத்துடனும் நீங்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரே ஒரு நிறுவனம்

**IIS SALES UNIT**

100, Clock Tower Road, Jaffna.

T.P. No. 2831 E-Mail : iis@sltnet.lk

கணனிகளைக் கொள்வனவு செய்யும் எமது வாடிக்கையாளர்கள் ஒவ்வொருவருக்கும் எமது நிறுவனத்தில் வாடிக்கையாளர் சார்பாக 2நபர்களுக்கு முற்றிலும் இலவசமாக கணனிப் பயிற்சிநெறி ஒன்றினை மேற்கொள்ள வசதிகள் செய்து தரப்படும்.

(C/17129)



**சிவா திரை**
(கே.கே.எஸ். வீதி, யாழ்.)

சத்தியராஜ், ரம்பா, கவுண்டமணி, கௌசல்யா நடித்த

**குங்குமப் பொட்டுக் கவுண்டர்**
(புதிய CD வெளியீடு)
காட்சிகள்: 10.30, 2.30

(C/17134)



**சிந்து திரையரங்கு**
உரும்பிராய்

தினசரி 10.30, 3.00
சத்தியராஜ், கவுண்டமணி, ரம்பா நடிப்பில்

**குங்குமப் பொட்டுக் கவுண்டர்**

(C/17133)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.06.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.